# மித்ரா டைம்ஸ்

**MITRA TIMES**

தமிழ் & ஆங்கிலம் மாத இதழ்
Tamil & English Monthly

ஆண்டு–4 | இதழ்–4 | செப்டம்பர் – 2018 | விலை ரூ.20/– | ஆண்டு சந்தா ரூ.240/–
Volume - 4 | Issue -4 | September - 2018 | Price Rs.20/- | Annual Subscription Rs.240/-



மேல்நாட்டு பாணியில் கோவை அரசுப் பள்ளி

பன்முகத் திறமைகொண்ட பெ.அமுதா ஐ.ஏ.எஸ்.,

தலைவரானார் மு.க.ஸ்டாலின்!

சிறுநீரகத் தொற்று... ஒரு எச்சரிக்கை

பொறுப்பும் பொறுமையும் - ஆசிரியர் கடிதம்

## பாண்டிச்சேரி ரமேஷ் டயர்ஸ் நிறுவனர் தொழிலதிபர் கு.பழனிவேலு - வாசுகி பழனிவேலு இல்லத் திருமணவிழா 30.8.2018



பாண்டிச்சேரி ரமேஷ் டயர்ஸ் நிறுவனர் தொழிலதிபர் கு.பழனிவேலு - வாசுகி பழனிவேலு தம்பதியினரின் மகள் ப.கீர்த்தனா M.A., (Journalism) கோவை திரு.பாலசுப்பிரமணியன்-வளர்மதி இணையரின் மகன் S.B.பூர்ணகுமார் B.E., (Mech) திருமணம் நாமக்கல் திருச்சி சாலையில் உள்ள நளா ஓட்டலில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் மித்ராடைம்ஸ் ஆசிரியர் எம்.எஸ்.மூர்த்தி பங்குபெற்று மணமக்களை வாழ்த்தினார். உடன் வெற்றி விகாஸ் கல்வி நிறுவனங்களின் இயக்குனர்கள் திரு.சுரேஷ்குமார், திரு.வெற்றிச்செல்வன், திரு.ராஜி, திரு.அழகர் மற்றும் திருமதி வித்யா சுரேஷ், கோவை தொழிலதிபர் திரு.தியாகராஜன், திரு ரமேஷ், மித்ரா டைம்ஸ் இணையதள செய்தியாளர் செல்வி, சுருதிலட்சுமி, செல்வி சஹானா, செல்வன் வருண் ஆகியோர் உள்ளனர்.

# உள்ளே...




பன்முகத்திறன் கொண்ட
பெ.அமுதா ஐ.ஏ.எஸ்.,
6





தலைவரானார் ஸ்டாலின்
8





வரும்முன் காக்காமல் வந்தபின் தவிப்பதா? 13





சிறுநீர் தொற்று: ஓர் எச்சரிக்கை 28





34 மனக்கவலை போக்கும் மணக்குள விநாயகர்!





மேல்நாட்டு பாணியில் கோவை அரசுப் பள்ளி
38






லாபம் தரும் இயற்கை வேளாண்மை
43

ஆசிரியர் கடிதம்

# பொறுப்பும் பொறுமையும்





அன்புடையீர்!

வணக்கம். மனிதனின் குணநலன்களில் முக்கியமானவை பொறுமை, நிதானம், அமைதி ஆகும். அதிலும் மற்றவர்களை ஆளுகின்ற ஆளுமை திறன் உள்ளவர்களுக்கு இந்த பண்புகள் அவசியம். அதைப்போலவே பொறுப்பில் உள்ளவர்களோ, பொறுப்பான நிலையில் உள்ளவர்களோ தங்களை உணர்ச்சி வசப்படுத்தலுக்கு ஆளாக்கவே கூடாது. சமூகத்தில் விமானத்தில் பயணித்த இரண்டு பொறுப்புள்ள பெண்களுக்கிடையே ஏற்பட்ட மோதல் தான் சமீபத்திய பரபரப்பு. அந்த பெண்மணிகளில் ஒருவர் இந்தியாவை ஆளும் பாரதீய ஜனதா கட்சியின் தமிழகத்தலைவர். தலைமைப் பொறுப்பில் இருக்கும் இந்தியாவிலேயே ஒரே ஒரு பெண்மணி என்ற பெருமையும் பெற்றவர். இலக்கியச் செல்வரின் மகள். சிறப்பான மருத்துவர். தமிழ்ப்புலமை மிக்கவர் திருமதி தமிழிசை சௌந்தரராஜன். இன்னொருவர் தமிழகத்திலிருந்து கனடா சென்று ஆராய்ச்சி செல்லும் மாணவி சோபியா.

ஸ்டெர்லைட் ஆலைப் போராட்டத்தின்போது துப்பாக்கிச்சூடு நடைபெற்று உலகத்தின் கவனத்தை தன் பக்கம் திருப்பிய தூத்துக்குடிக்கு தான் இருவரும் ஒரே விமானத்தில் பயணிக்கிறார்கள். டாக்டர் தமிழிசையே சொன்னது மாதிரி அவருக்கு 3ம் இடத்திலும் மாணவிக்கு 8ம் இடத்திலும் இருக்கை. மாணவி சோபியா தனது டுவிட்டரில் ''என்னுடன் விமானத்தில் தமிழக பாஜக தலைவர் தமிழிசை பயணம் செய்கிறார். "பாசிச ஆர்.எஸ்.எஸ். - பாஜக ஆட்சி ஒழிக'' என்று முழக்கமிட போகிறேன். என்னை விமானத்தில் இருந்து தூக்கி எறிவார்களா?'' என்று பதிவிட்டு அப்படியே முழக்கமிட்டிருக்கிறார்.

விமானம் நின்றதும், பயணிகள் அறைக்குள் நுழைந்ததும் தங்களுக்குரிய Luggage-களை சேகரிக்க சென்றபோது, மீண்டும் இதுகுறித்து இருவருக்குமிடையே வாக்குவாதம் தொடர்ந்திருக்கிறது. நாம் தொலைக் காட்சிகளில் அதைப் பார்த்தபோது, காவலுக்கு நின்ற பெண் காவல்துறை உயரதிகாரிகள் தமிழிசையைப் பார்த்து ''மேடம் மேடம் விட்டுருங்க மேடம். அவங்க ஏதோ அறிவில்லாம பேசிட்டாங்க என்று சொல்வதும் அறிவு அதிகமாக இருக்கிறதாலதான் பேசியிருக்காங்க என்று டாக்டர்


என் எண்ணம்

தமிழிசை சொல்லிவிட்டு மேற்கொண்டு முன்னேறுவதும் தெரிந்தது.

அதன் பிறகு வந்த செய்தி, டாக்டர் தமிழிசை விமான நிலைய அதிகாரிகளிடம் புகார் செய்ததாகவும் அவர்கள் உள்ளூர் காவல் துறைக்கு தகவல் தந்து சோபியாவை கைது செய்து 15 நாள் நீதிமன்றக்காவலில் வைத்ததாகவும் தகவல் வந்தது. நீதிபதியும் ஒரு பெண்மணி. மாண்புமிகு தமிழ்ச்செல்வி அவர்கள் சோபியாவின் பெற்றோரிடம் ''உங்கள் பெண்ணுக்கு அறிவுரை சொல்லுங்கள்'' என்று அறிவுறுத்திருக்கிறார். டாக்டர் தமிழிசை சோபியாவின் முழக்கத்தில் ஏதோ பின்புலம் இருக்கிறது என்று பேட்டி அளித்தார். அதன் பின்னர் சோபியாவின் தந்தை ஓய்வுபெற்ற டாக்டர். தன்னுடைய மகளை தமிழிசையுடன் அவரது தொண்டர்கள் ஆபாசாக திட்டி கொலை மிரட்டல் விடுத்ததாக காவல் துறையில் புகார் தந்தார். அதன் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் குற்றம்சாட்டினார். இதனிடையே காவல்துறை சோபியா கொடுத்த பாஸ்போர்ட் காலாவதியானது என்றும் புதிய பாஸ்போர்ட் கொண்டுவந்து காட்ட வேண்டும் என்றும் சம்மன் அனுப்பியுள்ளனர். பின்னர் நிபந்தனையற்ற ஜாமீனில் சோபியா விடுவிக்கப்பட்டுள்ளார். வழக்கு நீதிமன்றத்தில் உள்ளது என்ன நடக்கிறது என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

இந்த சம்பவம் இரண்டு பேரும் பொறுப் புடனும் பொறுமையுடனும் நடந்திருக் காலாமோ என்றுதான் எல்லோருடைய மனதிலும் இயல்பாக எழுந்திருக்கக்கூடிய கேள்வி. எதிர்க்கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலின் ''மாணவி சொன்னார் என்பதற்காக கைது செய்கிறீர்களே நான் சொல்லுகிறேன் பாஜக ஆர்.எஸ்.எஸ். பாசிச ஆட்சி ஒழிக'' என்று டுவிட்டரில் பதிவு செய்கிறார்.

''மெட்ரோ ரெயிலில் பயணித்தபோதும் நமக்கு நாமே பயணம் போதும். நீங்கள் ஆட்டோ டிரைவரை அறையவில்லையா'' என்று மு.க.ஸ்டாலின் மீது விமர்சனம் வைக்கப்படுகிறது.

சமூக வலைதளங்கள் இப்படியாக வாதங்கள் எதிர்வாதங்கள் நடந்தாலும் எம்.ஜி.ஆர் நடித்த படத்திலிருந்து பாடல் வரிகள் நினைவுக்கு வருகிறது.

"கருணை இருந்தால் வள்ளல் ஆகலாம்

கடமை இருந்தால் வீரன் ஆகலாம்

பொறுமை இருந்தால் மனிதன் ஆகலாம்

மூன்றும் இருந்தால் தலைவன் ஆகலாம்" என்ற பாடல் வரிகள் இப்போதைக்கு பொருந்துகிறது.

**- எம்.எஸ்.மூர்த்தி**


# மித்ரா டைம்ஸ்

மித்ரா 4 செப்டம்பர்-2018 டைம்ஸ் 4

அச்சிட்டுவெளியிடுபவர்
ஆசிரியர்
**எம்.எஸ்.மூர்த்தி**

நிர்வாக ஆசிரியர்
**திருமதி. சுஜாதா மூர்த்தி**

செய்தி ஆசிரியர்
**மணவூர் கி.விடாரண்யம்** பி.ஏ., பி.ஜி.எல்.,
9789837069 / 6379283750

இதழ் சிறப்பு ஆலோசகர்கள்
G. **ராம்மோகன்**
R. **குணசேகர்**

நிர்வாக மேலாளர்
V. **மோகன்ராஜ்**

செய்தி இணை ஆசிரியர்
N. **ரமேஷ்குமார்**

செய்தியாளர்கள்
N. **மணிவன்னன் (நாகை)**
**மோகன்ராஜ் (காஞ்சிபுரம்)**
S. **முத்துராஜ் (கோவை)**

இணையதள செய்தியாளர்கள்
S. **சுருதிலட்சுமி** (B.Sc.,)
B. **பத்ரி** B.Sc., (Vis com)

சட்ட ஆலோசகர்
V.N.**பிரசாத்** M.A.,B.L.,

**வடிவமைப்பு**
**சிவா சௌந்தர்,**
திருமதி. **நிரோஷாதிலிப்**

**விளம்பரம், சந்தா தொடர்புக்கு**
**044-23743007/8**

**அலுவலகம்:**
001, இன்ஞ்சக்கல் பிளாக், சித்ரா அவென்யூ, 9, சூளைமேடு ஹைரோடு, சென்னை94.
போன் : 044-23744661,23743007/8

**Whatsapp No. 8248585067**
**E-mail : mitratimes2015@gmail.com**
**Website : www.mitratimes.com**



உன்னால்
முடியும்
பெண்ணே

# பன்முகத்திறன் கொண்ட பெ.அமுதா ஐ.ஏ.எஸ்.,

விளையாட்டு வீராங்கனை, விவசாய பட்டதாரி, இயற்கை ஆர்வலர், பெண்கள் பிரச்சனைக்கு தீர்வாளர் என்ற பன்முகத்திறமை கொண்டவர் பெ.அமுதா ஐ.ஏ.எஸ். சமீபத்தில் முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதி மறைந்ததும் அவரை எங்கே அடக்கம் செய்வது என்ற பிரச்சனை எழுந்து நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று அதன்தீர்ப்பு வந்தவுடன் அவருக்காக ஒதுக்கப்பட்ட அண்ணா சமாதிற்கு அருகாமையில்துரிதமாக செயல்பட்டு எந்தவித அசம்பாவிதமும் நடைபெறாமல் அந்த நிகழ்ச்சியை முடித்துக் கொடுத்து அனைவரையும் ஆச்சரியப்படுத்திய அமுதா ஐஏஎஸ் தனது வெற்றிப்பயணத்தின் துவக்கம் முதல் இன்று வரையிலான வெற்றியை அவரே இவ்வாறு சொல்கிறார்.

“எனது சொந்த ஊரான மதுரையில், கேந்திரிய வித்யாலயா பள்ளியில் படித்துக் கொண்டிருந்த சமயம் அப்போது எனக்கு வயது 10 இருக்கும். என் தாத்தா சுதந்திர போராட்ட வீரர் என்பதால் அவருக்கான உதவித்தொகையை பெற என் பாட்டியுடன் மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் சென்றிருந்தேன். அப்போது எனக்குள் எழுந்த கேள்வி தான் யார் இந்த கலெக்டர்? என் சந்தேகத்தை உடனடியாக பாட்டியிடம் கேட்டு அதற்கான விடையை என் மனதில் ஆழப் பதிந்து கொண்டேன்.

அடுத்ததாக ஐஏஎஸ் கனவிற்கு மேலும் அடித்தளம் அமைத்தது பதிமூன்று வயதில் சென்ற மலையேற்றப் பயிற்சி. இமயமலைக்கு மலையேறு பயிற்சிக்கு சென்ற போது நான் சந்தித்த ஐஏஎஸ் அதிகாரிகள்தான் எனது வாழ்வில் ஏற்றத்தை பெற உந்துதலாக இருந்தனர். பயிற்சி முடிந்து மதுரை திரும்பிய போது என்னை பேட்டி எடுத்த ஊடகத்தினர் எதிர்காலத்திட்டம் பற்றி கேட்டார்கள். “அப்போதுதான் நானும் கலெக்டர் ஆவேன் என்று உறுதியாகச் சொன்னேன்”. அதிலிருந்து ஆரம்பித்த உத்வேக வாழ்க்கை 1994 ஆம் ஆண்டில் கலெக்டர் ஆகும்வரை ஓயவில்லை. மதுரையில் இளநிலை விவசாயம் முடித்த கையோடு 1992ம் ஆண்டு ஐபிஎஸ் எனப்படும் இந்திய காவல் பணிக்கான தேர்வில் முதல் முயற்சியிலேயே வெற்றி பெற்றேன். எனினும் ஐ.ஏ.எஸ்க்கு மீண்டும் முயற்சிக்க எனது தந்தை பெரியசாமி கூறிய அறிவுரையால் அடுத்தகட்டமாக இந்திய ஆட்சிப் பணிக்கான தேர்வு எழுதி அதிலும் முதல் முயற்சியிலேயே வென்று 1994ம் ஆண்டு ஐ.ஏ.எஸ் அதிகாரியானேன்.

“பள்ளியில் முதல் மாணவர் என்பதோடு, இளநிலை பட்டம் பெற்றதிலும் பல்கலைக்கழக அளவில் தங்கப்பதக்கம் வென்றதால் குடிமைப் பணிக்கான தேர்வுகள் எளிதானதாகவே இருந்தது.

பெண்கள் பல துறைகளிலும் முன்னேற்றம் கண்டுள்ளனர், குறிப்பாக முன்பெல்லாம் ஆசிரியர், மருத்துவர், செவிலியர் எனக் குறிப்பிட்ட சில பணிகள் பெண்களுக்கானதாக மட்டுமே பார்க்கப்பட்டது. ஆனால் தற்போது அந்த நிலை மாறி பெண்கள் நுழையாத துறையே இல்லை என்ற நிலையை அடைந்து விட்டோம் என்பது உத்வேகம் தந்தாலும் இது போதுமானதல்ல. ஏனெனில் பெண்கள் எல்லாத்துறையிலும் நுழைந்து விட்டாலும் பெயரளவில் இரண்டு, மூன்று பேர் மட்டுமே உள்ளனர், இந்த நிலை மாறி பெண்கள் ஆண்களுக்கு நிகராக சம வாய்ப்புகளைப் பெற வேண்டும்.

நான் ஐஏஎஸ் அதிகாரியாக தேர்ச்சி பெற்ற உடன் எனக்கு முதலில் வழங்கப்பட்ட பணி கடலூர் மாவட்ட துணை ஆட்சியர் பொறுப்பு, அதன் பின்னர் செங்கல்பட்டுக்கு மாறுதல் கிடைத்து அங்கு மணல்





கொள்ளை மிகப்பெரிய பிரச்னை. மணற் கொள்ளையர்களை பிடிக்கச் சென்ற போது ஒரு லாரி என்னை தாக்கிவிட்டு சென்றுவிட்டது, ஆனாலும் நான் ஓய்ந்து விடவில்லை.

அடுத்தகட்டமாக கோவை மாவட்டத்தில் தொழில்சாலைகள் மைய பொதுமேலாளர், யுனிசெஃப்பின் குழந்தைகள் நலன், சானிடேஷன் உள்ளிட்ட பிரச்னைக்குத் தீர்வு காணும் தேசிய திட்ட அதிகாரி பொறுப்பையும் வகித்துள்ளேன். தர்மபுரி மற்றும் திண்டுக்கல் மாவட்ட ஆட்சியராக இருந்ததே இந்த பயணத்தில் மிகச் சவாலானது. தருமபுரி மாவட்டம் அடிப்படையில் பெண்கல்வியில் பின்தங்கிய மாவட்டம், அதே போன்று பெண் சிசுக் கொலைகள், குழந்தைத் திருமணங்கள் அதிக அளவில் நடைபெறும் இடமாகவும் அது இருந்தது. இந்த பிரச்னைக்கு தீர்வு காண இரண்டு வழிகளை நான் பின்பற்றினேன்;

சுயஉதவிக் குழுக்களை அமைத்து பெண்களுக்கு பயிற்சி அளித்து வங்கிக் கடன் பெற்று அவர்களை சுய வருமானம் ஈட்டுபவர்களாக உருவாக்கினோம். இதனால் அவர்கள் பெண் குழந்தைகளின் கல்வி நிலை முன்னேற்றம் அடைந்தது.

பள்ளி செல்லும் பெண் குழந்தைகளிடம் குழந்தைத் திருமணம் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தியதோடு சக மாணவிகள் பாதிக்கப்பட்டால் புகார் தெரிவிக்கும்படியும் அறிவுறுத்தியதன் பயனாக பல குழந்தைத் திருமணங்கள் தடுத்து நிறுத்தப்பட்டன.

பெண்கள் உயர்பதவியை அடைவதில் இருக்கும் தடைக்கல் சிறுவயது முதலே அவர்களுக்கு அளிக்கப்படும் தவறான வழிகாட்டுதலே. ஏனெனில் நம் சமூகம் பெண்களை பலவீனமான இனமாகவே வளர்த்தெடுக்கிறது. இந்த நிலை மாற வேண்டும் ஆண்களுக்கு இருக்கும் அனைத்து அம்சங்களும் பெண்களிடமும் உள்ளது உடல் மற்றும் மனரீதியில் இருவரும் சமமே என்பதை பெண்களுக்கு பயிற்றுவிக்க வேண்டும். இந்த பழக்கம் நம்வீட்டில் இருந்தே தொடங்க வேண்டும்.

எனது பெற்றோர், ஆசிரியர்கள், பள்ளி இவை மூன்றுமே எனக்கு சிறந்த வழிகாட்டியாக அமைந்தது. எனக்கு கபடி போட்டி மீது அதீத ஆர்வம் உண்டு, நான் இந்த விளையாட்டை என்னுடைய விருப்பமாக தேர்வு செய்த போது இது ஆண்களுக்கான விளையாட்டு என்று யாரும் எனக்குத் தடைபோடாமல் மாறாக எனக்கு உற்சாகமூட்டினர்.



**குழந்தைகளிடம் நீ பெண் குழந்தை பலவீனமான இனம் என்ற மாயையை ஏற்படுத்தாதீர்கள். ஆபத்து நேரத்தில் மற்றவர்களின் உதவிக்காக அபயக்குரல் எழுப்பாமல் அவர்கள் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ள துணிவார்கள்.**

குழந்தைகளிடம் நீ பெண் குழந்தை பலவீனமான இனம் என்ற மாயையை ஏற்படுத்தாதீர்கள். ஆபத்து நேரத்தில் மற்றவர்களின் உதவிக்காக அபயக்குரல் எழுப்பாமல் அவர்கள் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ள துணிவார்கள்.

நான் திருமணம் செய்து கொள்ளும் முன்னரே என் கணவரிடம் என்னுடைய வாழ்க்கைப் பயணத்தையும் லட்சியத்தையும் தெளிவாகக் கூறி விட்டேன், இந்த தெளிவு இல்லாததே மனமுறிவு, விவாகரத்துக்கு முக்கியக் காரணம் என நான் கருதுகிறேன். வாழ்வின் பெரும்பகுதியை பகிர்ந்து கொள்ளும் இருவரும் தங்கள் வாழ்க்கைப் பாதையை பற்றி முன்கூட்டியே தெரிந்து கொண்டு அதன் பின்னர் திருமண பந்தத்தில் இணைவதில் எந்தத் தவறும் இல்லை என்றே நான் கருதுகிறேன். குடும்பம் என்று வரும் போது பெண்கள் மட்டுமே அனைத்தையும் தியாகம் செய்ய வேண்டும் என்ற அவசியம் இல்லை. ஆண், பெண் இருவரும் இணைந்ததே குடும்பம் எனவே பொறுப்பை இருவரும் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று நான் கருதுகிறேன்.

மேலை நாட்டு பழக்கவழக்கங்களில் நமக்கு சௌகரியமான விஷயங்களை காப்பி அடிக்கும் நாம் அவர்கள் கடைபிடிக்கும் சமநிலை வாழ்வை மட்டும் விட்டுவிடுகிறோம். அவர்கள் மளிகை சாமான் வாங்குவது, குழந்தை மற்றும் வீட்டு பராமரிப்பை பகிர்ந்தே செய்கின்றனர், இந்த தலைமுறையினருக்கு இந்த பழக்கத்தை நாம் புகுத்தினால் வாழ்வில் ஏற்படும் மனஅழுத்தத்தை போக்க முடியும்.

என் அப்பா அம்மா இருவருமே அரசுப் பணி ஊழியர்கள் அவர்கள் இருவரும் தங்களது பொறுப்பை பகிர்ந்து கொண்டு செய்ததை சிறு வயது முதலே நானும் என் சகோதரர் மற்றும் சகோதரி பார்த்து வளர்ந்தோம், அதனாலேயே இதுபோன்றதொரு தெளிவு ஏற்பட்டிருக்கலாம். அதிர்ஷ்டவசமாக நான் திருமணம் செய்து கொண்டவரும் ஐஏஎஸ் அதிகாரி என்பதால் என்னுடைய எதிர்கால வாழ்க்கை பற்றி இருவரும் கலந்து பேசி தெளிவு பெற்ற பின்னரே திருமணம் செய்து கொண்டோம். வாழ்க்கை என்பது Give and Take policy மாதிரிதான், எனக்கு அலுவலகப் பணி இருக்கும் போது என் கணவர் வீட்டு நிர்வாகத்தை கவனித்துக் கொள்வார்'' என்கிறார் பெ.கவிதா ஐ.ஏ.எஸ்.

திறமையுள்ள பெண்கள் எந்த சூழலில் பிரகாசிக்கலாம் என்பதோடு பெ.அமுதா ஐஏஎஸ் ஒரு முன்னுதாரணம்.

**– திருமதி. சுஜாதா மூர்த்தி**



**1949 திமுகவை தொடங்கினார் அண்ணா! 1969 அதை வழிநடத்தினார் கலைஞர்!**

# இன்று தலைவரானார் ஸ்டாலின்

## திராவிட இயக்கத்தின் நான்காம் தலைமுறை வழிநடத்தும் ஸ்டாலின்!

1949ம் ஆண்டு திராவிடக் கழகத்திலிருந்து பிரிந்து சென்னை ராபிசன் பூங்காவில் கொட்டும் மழையில் திராவிட முன்னேற்றக் கழகம் என்ற அமைப்பை உருவாக்கினார் பேரறிஞர் அண்ணா. 1969ஆம் ஆண்டு அண்ணாவின் மறைவிற்கு பிறகு அக்கட்சியின் தலைவரானார் கலைஞர் மு. கருணாநிதி.

இந்திய அரசியலின் அரைநூற்றாண்டு வரலாற்று நாயகனான கருணாநிதி வயது மூப்பு காரணமாக காலமாகியுள்ளார். அவரது அஸ்தமனம் திமுகவினரையும் தமிழக மக்களையும் கண்ணீரில் ஆழ்த்தியுள்ளது.

“என் உயிரினும் மேலான அன்பு உடன் பிறப்புக்களே!” இந்த வார்த்தைகளை கேட்கும் வாய்ப்பு பெற்ற கடைசி தலைமுறை நாம் தான். தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கையில் ஏதோ ஒரு வகையில் தொடர்புடைய கருணாநிதி, மக்கள் பணியாற்றியது போதும் ஓய்வெடுக்க என் மடியில் வந்து உறங்கு என்று பூமித்தாய் தன்வசம் அழைத்துக் கொண்டாள். சிறு வயது முதலே தீவிர போராட்ட குணம் படைத்திருந்த கருணாநிதி 94 வயதிலும் கூட தனது மரணத்தை எதிர்த்து போராடி கடைசியில் 11 நாட்கள் மருத்துவமனை சிகிச்சைக்கு அவரடைய வயது ஒத்துழைக்காமல் வயதுமூப்பு காரணமாக காலமாகியுள்ளார்.

1924ல் திருவாரூரை அடுத்த திருக்குவளையில் தட்சிணாமூர்த்தியாக பிறந்து வளர்ந்து பின்னர் கருணாநிதியாக மக்கள் பணியாற்றியவர் இன்று திசை எட்டிலும் உள்ள மக்களின் மனங்களை வென்ற மாபெரும் தலைவர் என்ற பெருமைக்குரியவர் என்பதை அவரது மரணம் உணர்த்தியுள்ளது. துள்ளிக் குதித்து விளையாடும் 14 வயது இளம் பருவத்தில் ‘இந்தி ஒழிக தமிழ் வாழ்க’ என்று வீர முழக்கமிட்டவர். இந்தி எதிர்ப்புப் போராட்டம், டால்மியாபுரம் பெயர் மாற்றத்தை கண்டித்து கல்லக்குடி ரயில் மறியல் போராட்டம் என்று போராட்டங்களுக்கு அஞ்சாமல் சீறி எழுந்தவர் கருணாநிதி.

சிந்தனைகளிலும், செயலிலும் மட்டுமல்ல பேச்சிலும் கர்ஜிக்கும் சிங்கம் போலவே இருந்தார் கருணாநிதி. சுயமரியாதை இயக்க முன்னோடி பட்டுக்கோட்டை அழகிரி பேச்சால் கவரப்பட்டு அரசியல் களத்திற்கு வந்தவர். தமிழ் என்னுடைய பேச்சு தமிழ் என்னுடைய மூச்சு என்று வாழ்ந்து வந்த கருணாநிதிக்கு எழுத்திலும் எண்ணிலடங்கா ஆர்வம். இன்று திமுகவின் அதிகாரப்பூர்வ நாளேடாக அறியப்படும் முரசொலிக்கு முன்னோடியாக மாணவ நேசன் என்ற பத்திரிக்கையைத் தொடங்கி நடத்தியவர்.

கருணாநிதி உருவாக்கிய மாணவர் மன்றம் பிற்காலத்தில் திமுகவின் மாணவர் அணியாக செயல்பட்டது. திராவிட கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் என்று கழகங்கள் தொடங்கப்படும் முன்னரே மாணவர் கழகத்தை நிறுவிய பெருமைக்கு சொந்தக்காரர்.

அண்ணாவின் திராவிட நாடு இதழில் பிரசுரமான கருணாநிதியின் கவிதை அண்ணாவின் அறிமுகத்தை

**1970-களில், மிசா அவசரச் சட்ட காலத்தில் சிறை சென்ற ஸ்டாலின், கட்சியில் நீண்ட காலம் அனைத்து மட்டங்களிலும் கடுமையான உழைப்பை செலுத்தி படிப்படியாக முன்னேற்றம் கண்டுள்ளார்.**

பெற்றார். பெரியாரின் குடி அரசு இதழில் துணை ஆசிரியராக பணியாற்றிய போது கருணாநிதி மேடை நாடகங்களையும் எழுதி வந்தார். இதன் பலனாக திரைப்பட வாய்ப்பு கிடைக்க பெரியாரின் அனுமதியோடு வெள்ளித்திரையில் அடியெடுத்து வைத்தார். எம்ஜிஆரின் ராஜகுமாரி படத்திற்கு கருணாநிதி எழுதிய வசனம் அவரை அடையாளப்படுத்திக் காட்டியது.

சமூக முன்னேற்றத்தை சினிமா மூலம் புகுத்துவது பழமைவாதக் கதைகள், மூடப்பழக்க வழக்கங்களை விரட்டியடிக்கும் வகையில் இவரது படைப்புகள் அமைந்தன. பெரியாரின் பகுத்தறிவு சிந்தனைகளையும், அண்ணாவின் நாத்திகத்தையும் தனது எழுத்துகள் மூலம் திரையில் தவழவிட்டவர். திரைத்துறையில் பணியாற்றியதன் மூலம் எம்ஜிஆர், சிவாஜி, கண்ணதாசன் உள்ளிட்டோருடன் கருணாநிதிக்கு நட்பு ஏற்பட்டது. இயல், இசை, நாடகம், அரசியல்வாதி, எழுத்தாளர், இதழியலாளர் என பன்முகத் தன்மையோடு விளங்கிய கருணாநிதியின் தூக்குமேடை நாடகத்தை பார்த்து வியந்து அவரை கலைஞர் என்று பெயரிட்டு அழைத்தவர் எம்.ஆர். ராதா. பிற்காலத்தில் அதுவே கருணாநிதியின் அடைமொழியாக மாறிவிட்டது.

1947ல் வெளியான ராஜகுமாரி தொடங்கி, 2011ல் வெளியான பொன்னர் சங்கர் வரை சுமார் 64 வருடங்கள் திரையுலகில் கதை, திரைக்கதை, வசனம், பாடல்கள் என பல்வேறு துறைகளிலும் பணியாற்றியிருக்கிறார் கருணாநிதி.

கருணாநிதி பத்து சமூக நாவல்களையும் 6 சரித்திர நாவல்களையும், 21 நாடகங்களையும் எழுதியிருக்கிறார். 1957ல் தி.மு.கவுக்குக் கிடைத்த உதயசூரியன் சின்னத்தைப் பிரபலபடுத்துவதற்காக உதயசூரியன் என்ற நாடகத்தை எழுதினார். கருணாநிதி கடைசியாக வசனம் எழுதிய தொடர் கலைஞர் தொலைக்காட்சியில் வெளியான ஸ்ரீ ராமானுஜர் மதத்தில் புரட்சி செய்த மகான். அந்தத் தொடருக்கு அவர் எழுத ஆரம்பித்தபோது அவரது வயது 92. எழுதிவந்தபோதே அவரது உடல்நலம் பாதிக்கப்பட்டது.

அண்ணாவை ஈர்த்ததற்கு முக்கியக் காரணம் கரகர குரலில் கருணாநிதி பேசும் அடுக்கு மொழி பேச்சு. அண்ணாவின் நிழலாக செயல்பட்டு வந்தவர் அவர் மறைவுக்குப் பிறகு 1969ல் தனது 44வது வயதில் தமிழக முதல்வராக முதன்முறை பொறுப்பேற்றார். அண்ணாவின் மறைவிற்குப் பிறகு அவரின் இதயத்தை இரவலாக பெற்றவர் என்று கட்சியினரால் கருதப்பட்ட கருணாநிதி முதலமைச்சராக



தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கருணாநிதி முதலமைச்சராக தேர்வு செய்யப்பட்ட செய்தியை கேள்விப்பட்ட மத்திய அரசுக்கு ஒரு அச்சம் ஏற்பட்டது, இதற்கு முக்கியக் காரணம் கருணாநிதி டெல்லி அரசை எதிர்த்து கேள்வி கேட்பவராகத் திகழ்ந்தார். இந்தி பேசாத மாநிலங்கள் இன்று மத்திய அரசிடம் கேட்கும் தனி மாநில அந்தஸ்து கோரிக்கையை 50 ஆண்டுகளுக்கு முன்னரே முன் வைத்தவர்கள்

கருணாநிதியும், அண்ணாவும். மாநில விஷயங்களில் மத்திய அரசின் தலையீடுகள் இல்லாமல் இருக்க மாநில அந்தஸ்து கேட்கும் நபராக விளங்கியதால் கருணாநிதி செங்கோட்டைக்கே சவால் விடும் நபராக இருந்தார்.

1957ம் ஆண்டு முதல் முறையாக திமுக தேர்தல் களம் கண்டது. அந்தத் தேர்தலில் குளித்தலை தொகுதியில் போட்டியிட்டு முதல் வெற்றியை உரித்தாக்கிக்கொண்டார் கருணாநிதி, அப்போது அவருக்கு வயது 33. அந்தத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற 15 பேரில் கருணாநிதியும் ஒருவர். இதனைத் தொடர்ந்து 1959ம் ஆண்டில் முதன்முறையாக திமுக உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிட்டது. திமுக நிறுவனர் அண்ணா அதிக இடங்களில் போட்டியிட வேண்டாம் குறைவான இடங்களில் மட்டுமே போட்டியிடலாம் என்று கூற அதனை மறுத்த கருணாநிதி 100க்கு 90 வேட்பாளர்களை நிறுத்தி வெற்றி பெறலாம் என்று ஆலோசனை கூற அதன்படியே போட்டியிட சென்னையில் 45 இடங்களில் வெற்றி பெற்று சென்னை மாநகராட்சியை கைப்பற்றியது திமுக. உள்ளாட்சி தேர்தலில் பெற்ற வெற்றிக்கு காரணமாக அமைந்த கருணாநிதிக்கு கணையாழி வழங்கி பெருமை படுத்தினார் அண்ணா.

1961ல் திமுகவின் பொருளாலராக அண்ணாவால் கருணாநிதி நியமிக்கப்பட்டார். 1962ல் பொதுத்தேர்தல் அறிவிக்கப்பட்ட போது காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த காமராஜர் திமுக ஏற்கனவே போட்டியிட்ட 15 இடங்களிலும் தோற்கடிக்கச் செய்ய வேண்டும் என்று தீவிரமாக செயல்பட்டார், காமராஜரின் முயற்சி 14 இடங்களில் வெற்றி

கண்டது, ஆனால் கருணாநிதி போட்டியிட்ட தஞ்சையில் மட்டும் காமராஜரின் முயற்சி தோல்வி காணவே இரண்டாவது முறையாக வெற்றிக் கனியை ருசித்தார் கருணாநிதி.

1967ல் நடக்க இருந்த தேர்தலுக்காக அண்ணா தேர்தல் நிதி திரட்ட ரூ.10 லட்சத்தை இலக்காக நிர்ணயிக்க தனது கடின உழைப்பால் அந்த காலத்திலேயே ரூ.11 லட்சத்தை தேர்தல் நிதியாக திரட்டித் தந்து அண்ணாவை பேரின்பம் அடையச் செய்தவர் கருணாநிதி.

1967 தேர்தலில் 7 கட்சிகளுடன் கூட்டணி அமைத்து தேர்தலை சந்தித்ததன் பலனாக முதன்முதலாக திமுக ஆட்சி அறியணையில் அமர்ந்தது. அண்ணா முதல்வராகவும், கருணாநிதி பொதுப்பணித்துறை, போக்குவரத்து, நெடுஞ் சாலைகள் துறையின் அமைச்சராகவும் செயல்பட்டனர். 1969ல் அண்ணா மறைவுக்குப் பிறகு அடுத்த முதல்வர் யார் என்ற கேள்வி எழுந்தது. கட்சியின் மூத்த உறுப்பினரான நாவலர் நெடுஞ் செழியன் தான் முதல்வராக தேர்வு செய்யப்பட வேண்டும் என்று கூற பெரியார், எம்ஜிஆர் உள்ளிட்டோர் கருணாநிதிக்கு ஆதரவு தெரிவித்தனர். இறுதியில் திமுகவில் தலைவர் பதவி உருவாக்கப்பட்டு தலைவராக கருணாநிதியும் பொதுச்செயலாளராக நெடுஞ்செழியனும் பொறுப்பேற்றார்கள்.



1969ல் கருணாநிதி முதல்வரான பின்னர் நடந்த முதல் குடியரசுத் தேர்தலில் தான் முன் நிறுத்திய வேட்பாளர் கிரி வெற்றி பெற வேண்டும் என்பதற்காக கருணாநிதியின் உதவியை நாடினார் பிரதமர் இந்திராகாந்தி. கருணாநிதியும் ஆதரவு அளித்ததால் இந்திராகாந்தி முன் நிறுத்திய வி.வி.கிரி வெற்றி பெற்றார், இந்த வெற்றியின் காரணமாக இந்திராகாந்தி, கருணாநிதியின் கூட்டணி அடுத்து நடந்த சேட்டமன்ற தேர்தலில் இணைந்து போட்டியிட்டது.

அண்ணா இருந்த காலம் வரை திமுகவிற்கு எதிராக பிரச்சாரம் செய்து வந்த தந்தை பெரியார், கருணாநிதி தலைவராக இருக்கும் திமுகவிற்கு முதன்முறையாக 1971ல் ஆதரவாகப் பிரச்சாரம் செய்தார்.

1971ல் முதன்முறையாக திமுக 100க்கும் மேற்பட்ட தொகுதிகளில் வெற்றி பெற்றது, கருணாநிதி சென்னை சைதாப்பேட்டை தொகுதியில் போட்டியிட்டு 3வது முறையாக எம்எல்ஏவானார். ஆட்சிக்கு வந்த கருணாநிதி அரசு விழாக்களில் தமிழ்த்தாய் வாழ்த்தை கட்டாயமாக்கினார். அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற சட்டம் இயற்றப்பட்டது, தாழ்த்தப்பட்ட சமூகத்தை சேர்ந்த வரதராசன் என்பவர் உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார். கைரிக்ஷா ஒழிப்பு சட்டம், பிச்சைக்காரர்கள் ஒழிப்புச் சட்டம் என பாட்டாளி வர்க்கத்தினரின் மறுமலர்ச்சிக்கான திட்டங்கள் பலவற்றை கருணாநிதி அறிமுகப்படுத்தினார்.

கருணாநிதி அமைச்சரவையில் சுகாதாரத்துறை அமைச்சர் பதவி கேட்டும் கொடுக்காதது, தனது ரசிகர் மன்றங்கள் கருணாநிதி மகன் மு.க.முத்துவின் ரசிகர் மன்றங்களாக மாற்றப்படுவதால் அதிருப்தியில் இருந்த எம்ஜிஆர் திமுகவில் இருந்து பிரிந்து சென்று 1972ல் அதிமுகவை தொடங்கினார்.

கருணாநிதி அமைச்சரவையில் இடம்பெற்றவர்களிடம் கணக்கு கேட்டதால் கட்சியில் இருந்து விலக்கப்பட்டேன் என்று எம்ஜிஆர் மக்கள் மன்றங்களில் கூறியதால் கருணாநிதி மீதும் அவரது அமைச்சர்கள் மீதும் ஊழல் வழக்கு பதியப்பட்டு இதனை விசாரிக்க சர்க்காரியா கமிஷனும் அமைக்கப்பட்டது. சர்க்காரியா கமிஷன் கருணாநிதி என்ற ஊழலும் செய்யவில்லை என்று கூற ஊழலை கண்டுபிடிக்க முடியாத வகையில் விஞ்ஞானப்பூர்வமாக கருணாநிதி ஊழல் செய்திருக்கிறார் என்று அதிமுக குற்றம் சுமத்தியது.

1975ல் இந்திராகாந்தி கொண்டு வந்த அவசர நிலை பிரகடனத்திற்கு திமுக கடுமையான எதிர்ப்பு தெரிவித்தது, 1976ல் திமுக ஆட்சி கலைக்கப்பட்டு கவர்னர் ஆட்சி கொண்டு வரப்பட்டது. எமர்ஜென்சி காலத்தை எதிர்த்ததால் அதன் பிறகு வந்த தேர்தலில் திமுக தோல்வி கண்டது. 1977ல் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் எமர்ஜென்சி காலத்திற்கு ஆதரவு தெரிவித்த ஒரே மாநில கட்சியான எம்ஜிஆரின் அதிமுகவுடன் கைகோர்த்து செயல்பட்ட இந்திராகாந்தி வெற்றிபெற்றார். திமுக மிகப்பெரும் சரிவை சந்தித்தது.

தொடர்ந்து 1977ல் அதிமுக ஆட்சியை கைப்பற்ற

திமுக தோல்வியடைந்தாலும் கருணாநிதிக்கு தோல்வி என்பதே இல்லை. அண்ணாநகர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார் கருணாநிதி. தொடர்ந்து 10 ஆண்டுகள் எம்ஜிஆர் முதல்வராக ஆட்சி செய்தார்.

1980 நாடாளுமன்றத் தேர்தலில் இந்திராகாந்தி, கருணாநிதி கூட்டணி மீண்டும் ஒன்று சேர்ந்தது. திமுக ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் பேசிய இந்திராகாந்தி எமர்ஜென்சி காலத்தை அறிவித்ததற்காக மன்னிப்பு கேட்டுக் கொண்டார். இந்த கூட்டத்தில் இந்திராகாந்தியை வரவேற்று பேசிய கருணாநிதி “நேருவின் மகளே வருக! நிலையான ஆட்சி தருக! என்று பேசினார்.

1984ல் எம்ஜிஆர் உடல்நலம் குன்றியதாலும், இந்திராகாந்தி மறைவாலும் அதிமுக காங்கிரஸ் கூட்டணி வெற்றி பெற்றது, திமுக படுதோல்வியை சந்தித்தது. அந்தத் தேர்தலில் மட்டும் கருணாநிதி போட்டியிடவில்லை அப்போது அவர் சட்டமேலவை உறுப்பினராக இருந்ததால் போட்டியிடவில்லை.



எம்ஜிஆர் மறைவுக்குப் பின்னர் 1989ல் நடந்த தேர்தலில் வெற்றி பெற்று 3வது முறையாக முதல்வராக கருணாநிதி பொறுப்பேற்ற போது வன்னியர், கள்ளர் உள்ளிட்ட 107 சமூகத்தை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பில் சேர்த்து 20 சதவீத இடஒதுக்கீட்டை அறிவித்தார்.

ராஜூவ்காந்தி படுகொலையால் சரிவை சந்தித்த திமுக 1996ல் மீண்டும் திமுக ஆட்சிக்கு வந்தது, பாஜகவுக்கு அளித்து வந்த ஆதரவை ஜெயலலிதா திரும்பப் பெற்றதால் பாஜகவிற்கு திமுக ஆதரவு அளித்து ஆட்சியை தக்கவைத்தது. பாஜகவுடன் திமுக கைகோர்ப்பதா என்று விமர்சனங்களும் எழுந்தன. தொடர்ந்து 2001ல் சாதிக்கட்சிகளுடனும் பாஜகவுடனும் இணைந்து தேர்தலை சந்தித்து படுதோல்வியை சந்தித்தது திமுக. 2004 நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ், பாமக, கம்யூனிஸ்ட் கட்சிகளுடன் சேர்ந்து மெகா கூட்டணி அமைத்து 40 தொகுதிகளிலும் வெற்றி கண்டார் கருணாநிதி. 2006 சட்டசபை தேர்தலில் இதே கூட்டணி நீடித்த போதும் கடைசி நேரத்தில் அதிமுகவுடன் வைகோவின் மதிமுக கைகோர்த்தது தேர்தலில் பெரும் சவாலாக அமைந்தது.

அந்தத் தேர்தலில் திமுக வெற்றி பெற்றாலும் ஜெயலலிதாவால் மைனாரிட்டி திமுக அரசு என்று அழைக்கும் வகையில் 96 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றிருந்தது. கருணாநிதிக்கு மிகவும் நெருக்கமாக இருந்த வைகோ கட்சியில் இருந்து வெளியேற்றப் பட்டதால் 1993ல் மதிமுகவை தொடங்கினார், அதிமுகவுடன் கூட்டணி வைத்த போது 2006 தேர்தலில் மதிமுக 6 இடங்களில் மட்டுமே வெற்றி கண்டது, திமுகவிற்கும் மெஜாரிட்டி கிடைக்கவில்லை. இதனை சுட்டிக்காட்டும் விதமாக அண்ணனும் ஏமாந்தேன், தம்பியும் ஏமாந்தாய் என்று கூறினார்.

2006ல் முதலமைச்சராக இருந்த கருணாநிதி இலங்கையில் நடந்த ஈழப்போர் உச்சகட்டத்தில் எந்த உதவியையும் செய்யவில்லை, மத்திய அரசுக்கு அதற்கான போதுமான அழுத்தத்தை கொடுக்கவில்லை என்பது அவர் மீதான விமர்சனம். மத்தியில் ஆட்சியில் இருந்த காங்கிரஸ் கட்சியுடன் இணக்கமாக இருந்த கருணாநிதிக்கு ஈழப்போரின் போது தக்க அழுத்தம் கொடுக்காதது, 2 ஜி ஸ்பெக்ட்ரம் ஊழலில் கருணாநிதியின் மகள் கனிமொழி, ஆ.ராசா உள்ளிட்டோர் மீது குற்றம் சுமத்தப்பட்டவை அனைத்தும் விமர்சனங்களை எழுப்பியது.

பெரியார் சமத்துவபுரம் அமைத்தது, இலவச வண்ணத் தொலைக்காட்சி பெட்டி வழங்கியது, ரேஷன் கடைகளில் 1 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி, கலைஞர் காப்பீட்டுத் திட்டம் என்று தான் அளித்த தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றிக் காட்டினார் கருணாநிதி.

பெண்களுக்கு சொத்துரிமை சட்டம், விவசாயிகள் நெசவாளர்களுக்கு இலவச மின்சாரத் திட்டம், பேருந்துகள் நாட்டுடைமை யாக்கப்பட்டு அரசு போக்குவரத்து கழகம் அமைப்பு, பள்ளி மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ், சத்துணவில் வாரம் 3 நாட்கள் முட்டை, பள்ளிகளில் தமிழ் கட்டாயப் பாடம், தைத் திங்களே தமிழ் புத்தாண்டு என்று சட்டம், கடல் நீரை குடிநீராக்கும் திட்டம், உழவர் சந்தைத் திட்டம், சென்னையில் வள்ளுவர் கோட்டம், குமரியில் 133 அடியில் திருவள்ளுவர் சிலை என்று கருணாநிதி தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் செய்திட்ட திட்டங்களும், சட்டங்களும் ஏராளம்.

2016ல் திமுக தேர்தலில் தோல்வியை சந்தித்த

போதும் மிகப்பெரிய எதிர்க்கட்சியாக விளங்கி வருகிறது. 1957 முதல் 2016 வரை தான் போட்டியிட்ட தேர்தலில் ஒன்றில் கூட தோல்வியை சந்திக்காமல் 13 முறை சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர், 5 முறை முதல்வர் நாற்காலியை அலங்கரித்தவர். தமிழக சட்டசபையில் கொறடா, சட்டமன்றத் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர் என்றும் திமுகவில் ஆண்டுகள் தொடர்ந்து தலைவராகவும் இருந்து எம்ஜிஆர், வைகோவால் கட்சி பிளவுபட்ட போதும் துவண்டுவிடாமல் தனது இறுதிமூச்சு வரை திமுகவை வழிநடத்தியவர்.

வயது மூப்பின் காரணமாக நடை தளர்ந்து சக்கர நாற்காலியில் அமர்ந்த போதும் தனது அரசியல் மற்றும் மக்கள் பணிக்கு ஓய்வு கொடுக்காமல் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருந்தவர். கடைசியாக 2016ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் உடல்நிலை சரியில்லாமல் போகும் வரை தினசரி கட்சி அலுவலகமான அண்ணா அறிவாலயம் வந்து கட்சிப் பணியை செய்து வந்தவர், அண்மையில் ஒரே ஒரு முறை அண்ணா அறிவாலயம் வந்தார்.


60 ஆண்டுகால தமிழக அரசியல் வரலாற்றில் அழிக்க முடியாத மாபெரும் தலைவர்களில் ஒருவர் கருணாநிதி. தினசரி பத்திரிக்கைகளை படித்துவிட்டு துறை சார்ந்த குறைகளை குறிப்பெடுத்து அதனை நிவர்த்தி செய்ய அதிகாரிகளுக்கு ஆணையிடுவார். பத்திரிக்கையாளர்கள் சந்திப்பில் ஜாம்பவான்களின் கேள்விகளுக்கெல்லாம் அசராமல் ஒற்றை வார்த்தையை பதிலாக்கிவிட்டு அதன் அர்த்தம் என்ன என்பதை அவர்களே புரிந்து கொள்ளட்டும் என்று சாதுர்யமாக பதில் அளிப்பவர்.

அரசியல் தலைவர்கள் தாங்கள் என்ன பேசுவது என்பதை எழுதிக் கொடுப்பதற்காகவே தனியாக ஆட்களை வைத்திருக்கும் காலகட்டத்தில் தனது அரசியல் வாழ்வில் தனது மேடைப்பேச்சுகள் அனைத்தையும் அவரே தயார்படுத்தியவர். தன் மூளையே தனக்கு டைரி என்பார் கருணாநிதி. அந்தளவுக்கு ஞாபக சக்தி கொண்டவர் அவர். நகைச்சுவையான அதே சமயம் சிந்திப்பவையாக இருக்கும் கருணாநிதியின் பேச்சு கடைசி வரை மக்களை கட்டிப்போட்டே வைத்திருந்தது.

பேச்சையும் எழுத்தையும் முழு மூச்சாகக் கொண்டிருந்த கருணாநிதியின் பேனா இன்று ஓய்வு எடுத்துக் கொண்டது. தமிழுக்கு செம்மொழி அந்தஸ்து பெற்றுத் தந்த தமிழ்மகன் கருணாநிதி தமிழ் அன்னையின் மடியில் துயில் கொள்ள சென்றுவிட்டார்.

தி.மு.க. தலைவர் கருணாநிதி மறைவை தொடர்ந்து, அக்கட்சியின் தலைவர் பதவிக்கு மு.க.ஸ்டாலினும், பொருளாளர் பதவிக்கு துரைமுருகனும் போட்டியின்றி தேர்வு

**திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயல் தலைவராக தேர்வு செய்யப்பட்டு மு.க.ஸ்டாலின் கடந்துவந்த அரசியல் பயணம் பல சவால்களும் சோதனைகளும் நிறைந்தவை.**



செய்யப்பட்டனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயல் தலைவராக தேர்வு செய்யப்பட்டு மு.க.ஸ்டாலின் கடந்துவந்த அரசியல் பயணம் பல சவால்களும் சோதனைகளும் நிறைந்தவை.

1970களில், மிசா அவசரச் சட்ட காலத்தில் சிறை சென்ற ஸ்டாலின், கட்சியில் நீண்ட காலம் அனைத்து மட்டங்களிலும் கடுமையான உழைப்பை செலுத்தி படிப்படியாக முன்னேற்றம் கண்டுள்ளார். கடந்த காலங்களில் சென்னை மாநகராட்சி மேயராகவும், தமிழக அமைச்சராகவும், துணை முதல்வராகவும் மு. க. ஸ்டாலின் பதவி வகித்துள்ளார்.

தனது பள்ளிப் பருவத்திலேயே அரசியலில் ஈடுபாடு காட்டிய மு.க. ஸ்டாலின், தனது வீடு அமைந்திருந்த சென்னை கோபாலபுரம் பகுதியில் திமுக பிரதிநிதியாக செயல்பட்டார். அப்பகுதியில் இளைஞர் திமுக என்ற அமைப்பை அவர் ஏற்படுத்தினார்.

1970களில் திமுக வட்டப் பிரதிநிதியாகவும், மாமன்ற பிரதிநிதியாகவும் இருந்த மு.க. ஸ்டாலின், இளைஞர்களை ஒருங்கிணைத்து கட்சி கூட்டங்களில் பங்கேற்கவும், கட்சி பிரசாரத்திலும் ஈடுபட்டார்.

பின்னர், 1980இல் மதுரையில் நடந்த திமுக கூட்டத்தில் இளைஞரணி அமைப்பை திமுக தலைவர் கருணாநிதி துவக்கினார். ஆரம்பத்தில் திமுக இளைஞரணியின் அமைப்பாளராகத் செயல்பட்ட மு.க. ஸ்டாலின், பின்னர் நீண்ட காலமாக திமுகவின் இளைஞரணி செயலாளராக செயல்பட்டு வருகிறார். கடந்த 1984இல் மு.க. ஸ்டாலின் திமுகவின் இளைஞர் அணி செயலாளராக நியமிக்கப்பட்டார்.

சிறிது காலம் திமுகவின் துணை பொதுச் செயலாளராக பதவி வகித்த ஸ்டாலின், 2008இல் திமுகவின் பொருளாளராக நியமனம் செய்யப்பட்டார். கடந்த 2009ஆம் ஆண்டு, தமிழக வரலாற்றிலேயே முதன்முறையாக துணை முதல்வர் பதவியை மு.க. ஸ்டாலின் வகித்தார். தற்போது எதிர்க்கட்சியாக தலைவராக திறம்பட செயலாற்றி வரும் ஸ்டாலன் திமுகவில் முதல் செயல்தலைவராக தேர்வு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

படிப்படியாக முன்னேறி கட்சியில் தலைவர் பதவியை தனது கடுமையான உழைப்பினால் முன்னேறி தன்னைச் சுற்றியுள்ள சவால்களை கடந்து ஆட்சியிலும் முதல்வராக வாழ்த்துகிறோம்.

**– எம்.எஸ்.மூர்த்தி**



# வரும்முன் காக்காமல் வந்தபின் தவிப்பதா?

கேரளாவில் கடந்த இரு மாதங்களாகவே மழை பெய்து வருகிறது. ஆனால் கடும் மழை அதுவும் பரவலாக கடந்த மாதமே அதாவது ஜூலையிலேயே தொடங்கிவிட்டது. கடந்த 7ஆம் தேதிக்கு பின்னர்தான் மழையின் பாதிப்பை மக்கள் உணர ஆரம்பித்தனர். நிலச்சரிவுகளும் வீடுகள் அடியோடு மழை வெள்ளத்தில் பெயர்ந்து செல்லும் அபாய கட்டத்தை சென்று பலி எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியது.

குறிப்பிடத்தகுந்த 30 அணைகள் உள்ளிட்ட அனைத்து அணைகளும் நிரம்பிய பின்னர் நீர்நிலைகளுக்கு சென்று ஓடி ஒதுங்க இடமற்று நிலத்தில் தண்ணீர் உயர ஆரம்பித்து பின்னர் வெகுமெடுத்து வீட்டிற்குள்ளும் ஓடி நிரம்பியது. காலநிலை மாற்றம் குறித்து சுற்றுச்சூழல் அமைச்சகம் விட்ட முன்னெச்சரிக்கையை தமிழகம் மற்றும் கர்நாடக மற்றும் தமிழக அரசு கண்டுக்கொள்ளவில்லை என்பதுதான் உண்மை. இயல்பான தண்ணீர் வழிதடத்தை மாற்றியது, மரங்களை அழித்து மண் கட்டுமானங்களை அதிகரித்தது, மண் குவாரிகளை அமைத்து நடத்தப்பட்ட மணல் கொள்ளை, அதிகளவிலான மாபெரும் அணைகள் என பல்வேறு காரணங்களை அடுக்கிக்கொண்டே போகலாம்.

காடுளை நான்காக பிரித்து மரங்களை காப்பது, ரெசார்ட்டு உள்ளிட்ட மாபெரும் கட்டுமானங்களை தகர்ப்பது, மனித நடமாட்டத்தை குறைப்பது, சூழலை காக்கும் பல்வேறு அம்சங்களை உள்ளடக்கிய ஆயிரத்திற்கும் மேற்பட்ட அந்த விரிவான அறிக்கையை மாநில அரசு கிடப்பில் போட்டது. சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் விதிகளை பின்பற்றாததாலேயே கேரளா வெள்ளத்தில் மிதக்கிறது என்பதோடு ஆரம்ப கட்ட மழையில் சிறு சிறு அணைகள் நிரம்பிவிட்ட நிலையிலே தண்ணீரை திறந்து விட்டிருந்தால் தொடர்ச்சியான மழையும் வடிந்திருக்கும். என்ன நடந்தாலும் பரவாயில்லை. தமிழகத்திற்கு தண்ணீர் கொடுக்கக்கூடாது என்ற வரட்டுத் தனம்தான் இவ்வளவு பேரழிவிற்கு அடிப்படை காரணம். மேலும் 2 மாத கால மழை பெய்து வரும் சூழலில் மாநில அரசு அசட்டையாகவே இருந்திருக்கிறது என்பதோடு எந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கையிலும் அதிக அக்கறை காட்டவில்லை. இவ்வளவு அழிவு ஏற்படும் என்று அவர்கள் நினைத்துப் பார்க்காத சூழலில் இயற்கை தன்னுடைய கோர முகத்தை காட்டி தன்னை புணரமைத்து கொண்டிருக்கிறது என்றே சொல்ல வேண்டும். மக்களை காக்க முடியாத கையறு நிலைக்கு அரசு தற்போது தள்ளப்பட்டிருக்கிறார்கள் என்றால் இது கேரளா மாநில அரசின் மெத்தனத்தைத்தான் காட்டுகிறது.

நாலாப்பக்கமும் வெள்ளம் சூழ்ந்து வழிதடம் மூழ்கி வெள்ளக்காடாக தோற்றமளிக்கும் இத்தகைய சூழலில் தமிழகத்தில் உள்ள பல்வேறு அணைகளும் நிரம்பி வழிகிறது. கடைமடை பகுதிக்கு மழைநீர் செல்ல வில்லை என்றும் மழையும் இல்லை என்று கடை மடை பகுதியினர் புலம்பி வரும் வேளையில் உபரி நீர் தமிழகத்தில் உள்ள நீர்நிலைகளை

கணக்கிட்டு தேக்கி வைக்கும் பணியை விட்டு வெகு சுலபமாக கொள்ளிடத்தில் தண்ணீர் விடும் எளிமையான வழியைத் தேர்ந்தெடுத்து அதை செயல்படுத்தி வருகிறது தமிழக அரசு. காவேரி தண்ணீர் நாமக்கல், சேலம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஊருக்குள் புகுந்து பெரும் சேததத ஏற்படுத்தி உள்ளது. மேலும் கொள்ளிடப் பகுதி முழுவதும் உள்ள கிராமங்களில் தண்ணீர் சூழ்ந்து மக்களை அவதிக்குள்ளாக்கியுள்ளது.

தமிழகத்தில் பல்வேறு பகுதியில் உள்ள நீர்நிலைகளில் உள்ள மண்ணின் வெடிப்பு தெரியும் நிலையில் வாய்க்கால் ஒற்றையடிப் பாதையாக காட்சியளிக்கிறது. குளங்கள் உள்ளிட்ட பல்வேறு நீர்நிலைகளில் தண்ணீர் வழித்தடம் துண்டிக்கப்பட்டுள்ளதால் அவை அனைத்தும் கிரிக்கெட் மைதானமாக மாறியிருக்கிறது.

ஆனாலும் பல்வேறு முக்கிய நீர்நிலைகள் மற்றும் அணைகள் நிரம்பி இருக்கும் இவ்வேளையில் தமிழகத்தில் இரண்டு நாட்கள் கனமழை பெய்தால் தமிழகமும் எந்நிலையில் மூழ்கும். தற்போது சிறந்த ஆட்சியாளரான பினராயி விஜயனே தவிக்கும் சூழலில் நம் முதல்வர்களால் என்ன செய்ய முடியும். கேரளா சம்பவத்திலிருந்து தமிழகம் பாடம் கற்குமா... முன்னெச்சரிக்கை நடவடிக்கையை மேற்கொள்ளுமா... இல்லை 2005ஆம் ஜெயலலிதா ஆட்சியில் பேரழிவை சந்தித்ததுபோல மீண்டும் அழிவை தமிழக மக்கள் மீண்டும் சந்திக்க வேண்டி வருமா?

கேரளா மழை வெள்ளத்தை ஒரு பாடமாக எடுத்துக் கொண்டு தமிழக அரசு, நீர் மேலாண்மையை கடைப்பிடிக்க வேண்டும்

2017 ஆம் ஆண்டு பெங்களூரு நகரமும், 2015ல் சென்னை, 2014ல் ஸ்ரீநகர் போன்ற நகரங்களும் திடீர் வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டன.

இனி வரக்கூடிய காலங்களில் தீவிர காலநிலை நிகழ்வுகள் (extreme climate events) இன்னும் அதிகமாகும் என்றும், சுமார் 3 மணி நேரத்தில் அதிகமான மழைப்பொழிவு நிகழ்ந்து திடீர் வெள்ளம் ஏற்படும் என்றும் சர்வதேச காலநிலை விஞ்ஞானிகளும், பல்வேறு ஆய்வு அமைப்புகளும் தெரிவித்து வந்திருக்கின்றனர்.

மத்திய அரசின் சமீபத்திய எச்சரிக்கையும் இதனை உறுதிப்படுத்தியது. இந்த ஆண்டு ஜூன் மாதம் காந்தி நகரிலுள்ள இந்தியத் தொழில்நுட்ப நிறுவனம் (IIT, Gandhinagar) முக்கியமான ஆய்வறிக்கை ஒன்றை வெளியிட்டது.

புவியின் வெப்ப அளவு 1.5 முதல் 2 டிகிரி அளவிற்கு உயரும் போது இதைப்போன்ற தீவிர காலநிலை நிகழ்வுகள் அதிகமாகும் என்றும் அதுவும் குறிப்பாக குறுகிய நேரத்தில் அதிகம் மழை பெய்யும் (Short duration rainfall extremes) தீவிர நிகழ்வுகள் இந்தியாவில் அதிகரிக்கும் என்றும் அந்த ஆய்வு அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

காலநிலை மாதிரிகளை (Climate models) கொண்டு விஞ்ஞானிகள் இந்த ஆய்வுகளை மேற்கொண்டனர். மூன்று மணி நேரத்தில் மிக அதிக மழை பெய்யக்கூடிய தீவிர நிகழ்வுகள் இனி வரும் காலங்களில் 25% அதிகரிக்கும் என்றும் இவற்றை தாங்கக்கூடிய வகையில் நம்முடைய நகர வடிவமைப்புகள் இருக்கவேண்டுமென்றும் அந்த ஆய்வில் கூறப்பட்டிருந்தது.

இவ்வாறு அனைத்து எச்சரிக்கை தாண்டியும் நாம் கேரளாவை வெள்ளத்தில் மிதக்க விட்டிருக்கிறோம். கேரளாவில் ஏற்பட்டுள்ள மிகப்பெரிய இயற்கை சீற்றம் எதிர்பார்த்ததுதான் என்கிறார் புகழ்பெற்ற சூழலியல் விஞ்ஞானி மாதவ் காட்கில். இவர்தான் மேற்குத்தொடர்ச்சி மலைகளைப் பாதுகாப்பதற்கான அறிக்கையைத்








தயாரித்த குழுவின் தலைவர். மாதவ் காட்கில் சமர்ப்பித்த அந்த அறிக்கையை நடைமுறைப்படுத்திருந்தால் கேரளாவில் இவ்வளவு சேதம் ஏற்பட்டிருக்காது என்பது காலம் நமக்கு உணர்த்தும் செய்தி.

ஏற்கெனவே 2015 ஆம் ஆண்டு சென்னை சந்தித்த வெள்ளத்திற்குப் பிறகும் நாம் சூழியல் சார்ந்த பாடங்களை கற்றுக்கொள்ளவில்லை, இப்போது கேரளாவும் நமக்கு பாடத்தைச் சொல்லித் தந்திருக்கிறது.

இனியும் தாமதிக்காமல் தமிழகத்திற்கென காலநிலை குறித்த கொள்கைகளை வகுத்து தீவிரமாக நடைமுறைப்படுத்தவேண்டும் எனபதே அந்தப் பாடம்.

1076 கி.மீ. நீள கடற்கரை கொண்ட தமிழகம் காலநிலை மாற்றத்தால், அதிக தீவிரமான காலநிலை நிகழ்வுகளைச் சந்திக்கும்/சந்தித்துக்கொண்டு இருக்கிறது. காலநிலை மாற்றம் என்பது நம் கண்முன்னால் நடக்கும் நிகழ்வு, அதன் தாக்கத்தை எப்படி நாம் குறைக்க முடியும் (mitigation), மற்றும் காலநிலை மாற்றத்தை எப்படி எதிர்கொள்ள முடியும் (adaptability) என்பதைக் கணக்கில் கொண்டு இனி நம்முடைய அனைத்து வருங்கால திட்டங்களும் தீட்டப்பட்ட வேண்டும்.



காலநிலை மாற்றத்தால் அதிகம் பாதிக்கப்படப்போவது நகரங்கள் தான். ஏனென்றால் குறைந்த நேரத்தில் அதிக மழைப்பொழிவைத் தாங்கக்கூடிய வகையில் நம் நகரங்கள் கட்டமைக்கப்படவில்லை. குறிப்பாக, நகரத்திலுள்ள வடிகால்கள் தினம் பெய்யக்கூடிய மழையின் அளவைக்கொண்டே வடிவமைக்கப்பட்டுள்ளன. இனிமேல் குறைந்த நேரத்தில், குறிப்பாக மூன்று மணிநேரத்தில் அதிக மழைப்பொழிவைத் தாங்கக்கூடிய வகையில் நாம் தயாராக வேண்டும்.

மாதாந்திர அல்லது தினசரி சராசரி அளவுகள் எல்லாம் பழங்கதை, இனிமேல் மூன்று மணி நேரத்தில் தீவிர மழைப்பொழிவு சராசரிகள்தான் நம்முடைய செயல்பாடுகளை தீர்மானிக்கும். நகர்ப்புற வெப்ப தீவு விளைவுகளும் நகரங்களில் பெய்யும் மழையின் தன்மையை மாற்றக்கூடியது, தமிழகம் அதிகமாக நகர்மயமான மாநிலம் என்பதை இங்கே நாம் நினைவில்கொள்ள வேண்டும்.

காலநிலை நிகழ்வுகள் கொண்டுவரப்போகும் பொருளாதார இழப்புகள் மிகவும் அதிகமாக

இருக்கும் என்றும், சில செ.மீ. கடல்மட்டம் உயர்வு நாட்டின் பொருளாதாரத்தைப் புரட்டிபோட்டு விடும் என்கிறார் உலக வங்கியின் பேரழிவு குறைப்பு மற்றும் மீட்பு அமைப்பின் பொருளாதார நிபுணர் ஸ்டெபானி ஹல்லேகட்டே.

சென்னை தமிழகத்தின் தலைநகரம் மட்டுமல்ல, தமிழகப் பொருளாதாரத்தின் அச்சாணி, தமிழக இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பின் முகம். சென்னை கடற்கரை நகரம் என்பதை நாம் குறித்துக்கொண்டு அதற்கென தனிப்பட்ட முறையில் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

தொழில்நுட்ப உதவிகளின் மூலம் இன்னும் துல்லியமாக கணிக்கக்கூடிய காலநிலை மாதிரிகளை உருவாக்கவேண்டும். பொதுவாக விஞ்ஞானிகள் பொது சுழற்சி மாதிரிகளை வைத்துதான் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர். இவை தோராயமான தரவுகளை மட்டுமே தரக்கூடியவை. வெப்பச் சலனங்களால் ஏற்படும் மாற்றங்களை கணக்கில் எடுப்பது கிடையாது.

இந்தியா போன்ற வெப்பமண்டல நாடுகளில் புவியின் வெப்பம் உயர உயர இந்த வெப்பச்சலனங்கள் மேல் எழுந்து, குளிர்ந்து, மழைப்பொழிவு அதிக அளவில் நடைபெறும். இவற்றைக் கணக்கிலெடுக்கும் வகையில் நம்முடைய ஆய்வு மாதிரிகள் உருவாக்கப்படவேண்டும். அடுத்து நம்முடைய மற்றொரு ஆய்வு இரு தீவிர காலநிலை நிகழ்வுகளுக்கு இடையே உள்ள இடைவெளியைப் பற்றியதாக இருக்கவேண்டும்.

சமீபத்தில் அமெரிக்காவின் நேஷனல் அகாடமி ஆப் சயின்சஸ், காலநிலை மாற்றம் குறித்து வெளியிட்டுள்ள ஆய்வறிக்கை மேலும் கவலை கொள்ளக்கூடிய விஷயங்களை நமக்குத் தெரிவித்திருக்கிறது.

எதிர்பார்த்ததைவிட காலநிலை மாற்றத்தின் தாக்கம் மிக அதிகமாக இருப்பதாக தெரிவிக்கிறது. தற்சமயம் ஐரோப்பிய நாடுகள் மிகக் கடுமையான வெப்பநிலையை சந்தித்துக் கொண்டிருப்பது இந்த ஆய்வுகளின் கூற்றுகளை உண்மையாக்கிக் கொண்டிருக்கிறது. காலநிலை மாற்றம் மிக முக்கியமான பிரச்சினையாகும், மானுடத்தின் இருத்தியல் குறித்ததாகும். அதன் தாக்கத்தைக் குறைப்பதும் எதிர்கொள்வதற்கான வழிகளை மேற்கொள்வது மட்டுமே நம்முடைய இருப்பை இந்த உலகில் உறுதிப்படுத்தும். மேலும் இது நாளைய பிரச்சினை அல்ல, இன்றைய பிரச்சினை என்பதைப் புரிந்துகொள்ள வேண்டிய கட்டாயத்தில் நாம் உள்ளதை உணர்ந்து நாம் விரைவாகச் செயலாற்ற வேண்டும்".

பருவநிலை மாற்றத்தினால் உலகின் கால நிலை மாற்றங்கள் நாம் எதிர்பார்த்ததைவிட தீவிரமான விளைவை சந்தித்துக் கொண்டிருக்கின்றன. எந்த வாய்க்காலையும் தூர்வாராமல் தண்ணீரை திறந்து விட்டதன் விளைவால் 100 டிஎம்சி நீர், கொள்ளிடத்திற்குச் சென்று கடலில் கலந்துள்ளது.

திருச்சி மாவட்டம் முக்கொம்பில் கொள்ளிடம் கதவணையில் 9 மதகுகள் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டது. இது 180 ஆண்டு கால பழமை வாய்ந்த கதவணையாகும். இதில் கும்பகோணம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் பாலங்கள் பழதடைந்திருப்பது ஆய்வில் கண்டறியப் பட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் வெள்ளாறு என்பது மிகப் பெரிய ஆறு. இதில் புதுக்கோட்டை திருமயம் சாலை பகுதியில் ஒரு நாளைக்கு இரவில் 300 லாரிகள் வரை மணல் திருடுகிறது. அவசரத்திற்கு மரங்கள் இருக்க அதன் வேர்கள் தெரியும் அளவில் தோண்டி அள்ளிவிடுகிறார்கள். அதாவது மரமிருக்க வேர் தோண்டும் பணி நடக்கிறது. இதே போல அந்த ஆறு முழுவதும் சுமார் 50 கி.மீ தூரத்திற்கு மணல் கொள்ளை நடக்கிறது. அதிகாரிகள்



தெரிந்தும் கண்டுகொள்வதில்லை. பெயருக்கு சில மாட்டுவண்டிகளை மட்டும் பிடித்து வழக்கு பதிவு செய்வதை வழக்கமாக கொண்டுள்ளனர்.

அறந்தாங்கி - காரைக்குடி சாலையில் வெள்ளாற்றை கடக்க தரடமட்டப் பாலம் இருந்தது. கடந்த பல ஆண்டுகளுக்கு முன்பு தண்ணீர் அதிகமாக சென்றதால் போக்குவரத்து பாதிப்பு எற்பட்டதுடன் பல கிராமங்கள் தண்ணீரில் சிக்கி தவித்தது. அதனால் சில ஆண்டுகளுக்கு முன்பு பல கோடி செலவில் உயர்மட்ட பாலம் கட்டப்பட்டது. இப்போது அந்த பாலம் எப்ப சாயும் என்ற நிலையை உருவாக்கி உள்ளார்கள் மணல் கொள்ளையர்கள்.

இனியாவது வரும்முன்பே ஏற்பட இருக்கும் இழப்புகளை தடுக்க திட்டமிட்டால் இயற்கையின் அழிவிலிருந்து காக்க முடியும்

- CEO **நாகராஜன்**



# சாக்ரடீஸ் சொன்ன நட்பின் இலக்கணம்

ஒருமுறை சாக்ரட்டீஸ் ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கும் போது ஒருவர் வந்து அவருடைய நண்பரைப் பற்றி ஏதோ கூற முயன்றார். உடனே சாக்ரட்டீஸ் அவரிடம் ,

"என் நண்பரைப் பற்றி என்னிடம் கூற விரும்பினால் அதற்கு முன் 3 கேள்விகளை கேட்பேன்.

மூன்று கேள்விக்கும் ஆம் என பதில் இருந்தால் மட்டுமே நீங்கள் அவரைப் பற்றி கூறலாம்"என்றார்.

சாக்ரட்டீஸ் முதல் கேள்வியை கேட்டார்

"அவர் செய்த செயலை நேரடியாகப் பார்த்துவிட்டு தான் அவரைப் பற்றி கூறுகிறாயா."

என்று கேட்டார். இல்லை என பதில் சொன்னார்.

"அவரைப் பற்றிய நல்ல விஷயத்தை கூறப்போகிறாயா. " என்று இரண்டாவது கேள்வியைக் கேட்டார்.

இல்லை என பதில் சொன்னார்.

அந்த நண்பரைப் பற்றி கூறினால் யாராவது பயனடை வார்களா." என்ற மூன்றாவது கேள்வியைக் கேட்டார். இதற்கும் இல்லை என்றே பதில் வந்தது. "யாருக்கும் பயனில்லாத, நல்ல விஷயமுமில்லாத,

நேரடியாக நீங்கள் பார்க்காத, என் நண்பரைப் பற்றிய சம்பவத்தை தயவு செய்து என்னிடம் கூறாதீர்கள்" என்றார்.

நல்ல நட்பு ஆரோக்கியமான விவாதங்களையே மேற்கொள்ளும். நண்பர்கள் ஹைட்ரஜன் வாயுவினால் நிரப்பப்பட்ட பலூன் போன்றவர்கள். நீங்கள் விட்டு விட்டால் எங்கோ பறந்து சென்று விடுவார்கள்.

பத்திரமாக பிடித்துக் கொள்ளுங்கள். உலகில் சிறு தவறு கூட செய்யாதவர்களே இல்லை. மேலும் மன்னிக்க முடியாத குற்றம் என்றும் ஏதுமில்லை. எனவே, வார்த்தைகளால் யாரையும் பழிக்காதீர்கள். வசவுகளால் இதயங்களை கிழிக்காதீர்கள். நல்லுறவை வன்முறையால் இழக்காதீர்கள். நட்புறவை இழி மொழியால் துளைக்காதீர்கள்.





# கபாலிகான் நியூஸ்

"அண்ணன் என்னடா? தம்பி என்னடா அவசரமான உலகத்திலே" என்று பாடியபடி உள்ளே வந்தார் கபாலிகான்.

**"என்ன அழகிரி பேரணிக்கு போய் வந்தீங்களா?'' என்று கேட்டோம்.**

"ஆமாம்"

**"நல்ல கூட்டமா?"**

"அழகிரி 1.5 லட்சம் பேர் வந்ததாக சொல்கிறார்"

**"இருக்குமா?"**

"பேரணிக்கு வந்த பேருந்து மற்றும் வாகனங்களை வைத்துப் பார்த்தால் 50 ஆயிரத்துக்கு மேல் வந்ததாக சொல்லலாம். ஆனால்?"





**"ஆனால் என்ன?"**

"பேரணி துவங்கிய இடம் திருவல்லிக்கேணி காவல் நிலையம். முடிந்த இடம் கலைஞர் நினைவிடம். அழகிரி சொல்கிற மாதிரி 1.5 லட்சம் பேர் கலந்து கொண்டிருந்தால் பேரணி தொடங்கி முடிய 4 மணி நேரம் ஆகியிருக்கும். ஆனால் 11.15க்கு தொடங்கி 12.30 மணிக்கெல்லாம் முடிந்த பேரணியில் 4 கி.மீ தூரத்தில் 1.5 லட்சம் பேர் எப்படி பங்கேற்க முடியும் என்று கேள்வி எழுப்பப்படுகிறது.

**"காவலர்கள் 2000 பேர் பாதுகாப்புக்கு இருந்ததாக சொல்லப்பட்டதே!"**

"அதனால் தான் அழகிரி காவல்துறைக்கு நன்றி சொன்னாரோ என்னவோ"

**"அவ்வளவு போலீஸ் ஏன் போடப்பட்டது?**

ஆளும்கட்சி இந்த விஷயத்தில் அழகிரிக்கு அனுசரனையான நடந்து கொண்டதாகவும் அவர்களும் நிறைய பேர் வருவார்கள் என்று எதிர்பார்த்து ஆசிரியர் தினவிழா அரசு நிகழ்ச்சி மூன்று மணிக்கு தள்ளி வைத்ததாக குற்றம் சாட்டப்படுகிறது.

**"ஸ்டாலின் ரியாக்ஷன்"**

அவரும் திமுகவினரும் on the regard ஆக எதையும் சொல்வதில்லை. ஆனால் பேரணிக்கு நிர்வாகிகளோ, தொண்டர்களோ போகாமல் பார்த்துக் கொண்டார்கள்.

**"அழகிரியின் அடுத்த ஸ்டாண்ட்"**

முதலில் அவர் பிஜேபியின் ஆதரவோடுதான் களத்தில் இறங்கினார். ஆனால் ஸ்டாலின் வாஜ்பாய், கலைஞர் இரங்கல் நிகழ்ச்சியில் பாஜகவோடு நெருங்கி அது கூட்டணி அச்சாரம் என்று சொல்லும் அளவுக்கு ஒரு நிலைமையை உருவாக்கினார். அதனால் அழகிரியை பாஜக கண்டுகொள்ள வில்லை. தனது எண்ணம் நிறைவேறியதும் ஸ்டாலின் மீண்டும் பாஜகவை வறுத்தெடுக்க தொடங்கி விட்டார்.

**"ஆளும் கட்சியில் மீண்டும் புகைச்சலா?"**

"அது எப்போதும் நீறுபூத்த நெருப்புதான்.

ஆட்சி அதிகாரம்தான் அவ்வப்போது தண்ணீர் தெளித்து அணைக்கப்படுகிறது.

**"எப்படிச் சொல்கிறீர்கள்?"**

அதிமுக இன்னும் பொறுப்பாளர்களை நியமிக்க வில்லை. மத்திய அரசிடம் ஓ.பி.எஸ்.க்கு முன்பிருந்த செல்வாக்கு இல்லை. பாதுகாப்பு அமைச்சர் பார்க்க முடியாது என்று திருப்பி அனுப்பினார். தேர்தலில் தனித்து போட்டியிடும் என்று ஒருங்கிணைப்பாளர் சொல்கிறார். அமைச்சர் ராஜேந்திர பாலாஜி வேறு மாதிரி எச்சரிக்கிறார்.

**"அவர் என்ன சொல்றார்?"**

"ஒண்ணு எங்க பக்கம் நில்லு. இல்லை எதிர்ப்பக்கம் போ.



முன்வாசல்ல ஒருத்தர்கிட்ட பேசறது, பின்வாசல்ல ஒருத்தர்கிட்ட பேசறதுங்கிற வேலையெல்லாம் வெச்சுக்காதீங்க" என்கிறார்.

**"யாரை சொல்றார்?"**

"மோடி இருக்க பயமேன். எல்லாம் மேலே இருக்கிற அவர் பார்த்துப்பார். ஒபாமா வந்தாலும் எங்களை ஒன்றும் செய்ய முடியாதுன்னு யாரை சொன்னாரோ அந்த பாஜகவைத்தான் சொல்றார்".

**"தினகரன் எடுக்கும் எல்லா முயற்சியும் தொடர்ந்து வெற்றி பெறவில்லையே?"**

"18 எம்எல்ஏக்கள் தகுதிநீக்க வழக்கின் தீர்ப்பு இந்த மாதம் வந்துவிடும் என்கிறார்கள். அதற்கு அப்புறம் தான் ஸ்பீடு எடுக்கும் தினகரனின் அரசியல் என்கிறார்கள் அவரது ஆதரவாளர்கள்"

**"திமுக தலைவராக ஸ்டாலின் பொறுப்பேற்று தன்னை தக்க வைத்து கொண்டாரே?"**

"ஆனால் தேர்தல் வெற்றி அவரை நெருங்கினால் மட்டும் தொண்டர்களிடத்தில் நெருக்கம் அதிகரிக்கும். அதனாலே தேர்தல் வந்தால் தெரிந்துவிடும்.

**தேர்தல் வருமா?"**

"வரும்.. ஆனா வராது... என்று சொல்லிக் கொண்டே வெளியேறினார் கபாலிகான்.



**"அவங்ககூட இரு.. இல்லை எங்க கூட இரு... முன்வாசலில் ஒரு கால், பின் வாசலில் ஒருகால் வைக்கிற வேலையெல்லாம் வச்சிக்காத...."**





# உறவுகளை மதிப்போம்

"**வி**மலா, ஜில்லுன்னு ஒரு கிளாஸ் தண்ணி; அப்புறம், சூடா ஒரு கப் காபி கொடு." தண்ணீரையும், காபியையும் கொண்டு வந்து வைத்தாள் விமலா. "விமலா அப்பா ஏன் கொல்லைப் புறத்தில் உட்கார்ந்து இருக்கார்? " ம்.. நீங்களே கேளுங்க அந்த கண்றாவியை." காபியை ஒரே மடக்கில் குடித்தவன், தந்தையின் அருகில் வந்தான். அவரது தோளை ஆதரவாக பற்றினான். "அப்பா... எழுந்திரிச்சு உள்ளே வாங்க." தந்தையின் கையை மென்மையாக பிடித்து அழைத்து வந்து, சோபாவில் அமர்த்தினான். "ஏம்பா என்னமோ மாதிரி இருக்கீங்க?"

அவர் சொல்லத் தயங்கினார். "எதுவா இருந்தாலும் சொல்லுங்கப்பா. அவர் சொல்ல மாட்டார்... நானே சொல்றேன்... கரன்ட் பில்லும், ஸ்கூல் பீசும் கட்டிட்டு வாங்கன்னு குடுத்த, பத்தாயிரம் ரூபாயை தொலைச்சுட்டு வந்து நிக்கறார். கேட்டா, "எங்கே வெச்சு தொலைச்சேன்னே தெரியலைமா'ன்னு சொல்றார்." அவர் முகத்தைப் பார்க்க பாவமா இருந்தாலும், 10 ஆயிரம் ரூபாய் போனதில், அவனுக்கும் அதிர்ச்சியாகத்தான் இருந்தது. விமலா மேலும், அவனை சூடேற்றினாள். "இந்த அளவுக்கு அஜாக்கிரதையும், பொறுப்பில்லாமையுமா ஒருத்தர் இருப்பாங்க.

இவர், பேங்கில வேறெ கேஷியரா இருந்தாரு. எப்படித்தான் இத்தனை காலம் கேஷியர் வேலை பார்த்தார்னே தெரியலை. "விமலா... நீ கொஞ்சம் பேசாம இரு. நான் தான் விசாரிச்சிட்டு இருக்கிறேன்ல்ல." "எங்க வெச்சுப்பா தொலைஞ்சிச்சு?" தந்தையிடம் கேட்டான் கதிரேசன். "அதுதாம்பா எனக்கும் புரியலை. விமலா கிட்டே பணத்தை வாங்கிட்டு, ஈ.பி., ஆபீசுக்கு போயிட்டு இருக்கும் போது, நம்ம எதிர்த்த வீட்டு ரிட்டையர்டு போஸ்ட் மாஸ்டர் சேஷாத்ரியை வழியில பார்த்தேன். அவரும், ஈ.பி., ஆபீசுக்கு தான் போறேன்னு சொன்னதும், நானும், அவருமா பேசிட்டே நடந்து போனோம். அங்க ஒரே கூட்டமா இருந்தது.

கூட்டம் குறையட்டும்ன்னு, நானும், அவருமா ஒரு மர நிழல்ல உட்கார்ந்தோம். தாகமா இருக்குன்னு, ரெண்டு பேரும், ஆளுக்கு ஒரு இளநியை குடிச்சிட்டு, நானே காசைக் குடுக்கலாம்ன்னு திரும்பிப் பார்த்தா, "பேக்'கை காணோம். கடைசியில, இளநீருக்கு போஸ்ட் மாஸ்டர் தான் காசை கொடுத்தார்." "அந்த இளநீர்க்காரன் எடுத்திருப்பானோ" "இல்லப்பா... அவன் என் முன்னால தான் இருந்தான். பின்னால, இருந்த வேற யாரோ தான், எனக்குத் தெரியாம எடுத்திருக்காங்க."

விமலா குறுக்கிட்டாள்..."பணப் பைய யாராச்சும் பின்னால வைப்பாங்களா? சுத்த

கோமாளித்தனமா இருக்கு. சொந்தமா சம்பாத்தியம் இருந்தாத்தானே, காசோட அருமை தெரியும். என்னோட புருஷன் சம்பாதித்ததை, வேறெ எவனோ திங்கணும்ன்னு விதி." "இந்த ஒரு தடவை தானம்மா இப்படி நடந்திச்சு. ரிட்டையர்டு ஆனதுக்கப்புறம், இத்தனை நாளா, நான் தானே கஷ்டப் பட்டுட்டு வர்றேன். அப்பெல்லாம், ரொம்ப ஜாக்கிரதையாத் தானே இருந்தேன்."

"ஒரு தடவை தொலைத் தாலும், மொத்தமா, 10 ஆயிரம் ரூபா... சர்வ ஜாக்கிரதையாத் தான் இருக்கணும். அங்க, என்னோட வேலை பார்த்தவங்க நின்னுட்டு இருந்தாங்க. இங்க, என்னோட சிநேகிதனை பார்த்தேன்னு சொல்லி, நாள் முழுக்க வெட்டிப் பேச்சு பேசிட்டு நிற்கக் கூடாது," என்று பொரிந்து தள்ளினாள் விமலா. "விமலா... கொஞ்சம் மரியாதை குடுத்து பேசு. என்ன இருந்தாலும், அவர் என்னோட அப்பா."

"ஆமா நீங்க தான் மெச்சிக்கணும். சும்மா தானே வீட்டில இருக்காரு. காலைலயும், சாயந்தரமும் குழந்தைகள ஸ்கூல்ல கொண்டு விடச் சொன்னா, "வயசான காலத்தில என்னால முடியலை...'ன்னு வயசை ஒரு சாக்கா வெச்சிட்டு, ஜகா வாங்கிக்கிறது; உருப்படியா பண்ணிட்டு இருந்தது, ரேஷன்ல பொருள் வாங்கறதும், கரன்ட் பில், ஸ்கூல் பீஸ் கட்டறதும் தான். இனி, இந்த ஒரு காரணத்தை வெச்சு, இந்த வேலையிலிருந்தும் ஜகா வாங்கிக்கலாம்ல்ல."

கதிரேசன் குறுக்கிட்டான். "விடு விமலா... அவருக்கு முடியலைன்னா, நானோ, நீயோ போயி கட்டிட்டு வந்திடலாம். இதுக்குப் போயி..." "ஆமா, நானோ, நீங்களோ போயி எல்லா வேலையும் செஞ்சிட்டு வந்திடலாம். இங்கே, இந்த பெரிய மனுஷன், நல்லா சாப்பிட்டுட்டு, அந்த கோவில், இந்த கோவில்ன்னு சுத்திட்டு வரட்டும். நேரத்திற்கு சமைச்சுப் போடத்தான் நான் இருக்கேன்ல." ஏய் இப்ப என்ன பண்ணனும்ங்கற?" எரிச்சலுடனேயே கேட்டான் கதிரேசன்.

"எம்மேல ஏன் எரிஞ்சு விழறீங்க? கொஞ்ச நாள், உங்க தங்கச்சி வீட்டில கொண்டு போயி விடுங்க. அப்பத்தான்; நம்ம வீட்டோட அருமை தெரியும்." "என்ன மாப்பிள்ளே... ஏதோ, சூடான விவாதம் போல தெரியுது... சிவபூஜைல கரடி நுழைஞ்சிருச்சோ கேட்டபடியே வீட்டினுள் நுழைந்தார், விமலாவின் தந்தை சிவராமன். "அப்பா வாங்கப்பா... இந்த, வேகாத வெயில்ல ஏம்பா நடந்து வந்தீங்க? ஒரு ஆட்டோ புடிச்சா, பஸ் ஸ்டாண்டிலிருந்து, நம்ம வீட்டிற்கு மிஞ் சிப் போனா, நாற்பதோ, ஐம்பதோ கேட்பான்.

"நடக்கிறது உடம்புக்கு நல்லதுதானேம்மா. சரிஞ்சரி... இந்த பையில பழங்களும், சிப்சும் இருக்கு. குழந்தைகள் வந்தா குடு. மொதல்ல, இதை போயி உள்ளே வெச்சிட்டு வா. பையை கிச்சனில் வைத்து விட்டு, தந்தைக்கு லெமன் ஜூசை எடுத்து வந்தாள் விமலா. "அப்பா இந்தாங்க, "ஜில்'லுன்னு குடிங்க."

"அதை இப்படி வெச்சிட்டு இந்தப் பக்கம் வாம்மா"

ஜூஸ் நிரம்பிய கிளாசை, மேஜையின் மேல் வைத்து விட்டு, தந்தையின் அருகில் வந்தாள் விமலா.

"என்னப்பா? இரண்டு உள்ளங்கையையும் ஒன்றோடு ஒன்று நன்றாக தேய்த்து சூடாக்கி, "பளார்' என்று, தன் மகளின் கன்னத்தில் அறைந்தார் சிவராமன். சிவராமனின் ஐந்து விரல்களும், விமலாவின் கன்னத்தில், அச்சு பதித்தாற்போல் பதிந்தன. விம்மி அழுது கொண்டே, "என்னப்பா..." என்றாள் விமலா.

கதிரேசனும், ராமநாதனும் அதிர்ச்சியுடன் சிவராமனையே பார்த்தனர். "மாமா... வந்து..." என்று வார்த்தை கிடைக்காமல் திக்கினான் கதிரேசன்.

"நான் வந்து இருபது நிமிஷம் ஆச்சு மாப்பிள்ளே.. பொண்டாட்டி பேச்சுக்கு மதிப்பு குடுக்க வேண்டியது தான். தப்பில்ல.. ஆனா, எந்த காலத்திலேயும், எந்த நேரத்திலேயும், தன்னைப் பெத்தவங்களையும் விட்டுக் குடுக்கக் கூடாது. குடும்பத்தில் முதல் மரியாதை அவங்களுக்குத் தான். அதுவும் அவுங்க மனைவிய இழந்தவங்க.. அதுக்கப்புறம் தான் பொண்டாட்டி, குழந்தைகள்.. நீங்களோ, சம்பந்தியோ அவளை அடிச்சா, புருஷன் வீட்டில எல்லாருமா சேர்ந்து, என்னை கொடுமை பண்ணறாங்கன்னு இவ போலீஸ்ல கம்ப்ளைன்ட் குடுக்கலாம். ஆனா, நானே ரெண்டு சாத்து சாத்தினா, எவன் கேட்கப் போறான்?


நான் வர்றேன் மாப்பிள்ளே, வர்றேன் சம்பந்தி.

காத்தால நடக்கும் போது, அப்படியே நம்ம வீட்டுக்கும் அடிக்கடி வாங்க. கொஞ்ச நேரம் ஜாலியா பேசிட்டு இருக்கலாம்," என்று கூறியபடியே, நடையைக் கட்டினார் சிவராமன். "அப்பா..." என அழுதபடியே கூப்பிட்டாள் விமலா. "என்னம்மா?" "இந்த ஜூசையாவது குடிச்சிட்டு போங்கப்பா" மனைவிய இழந்து நிக்கும் மாமனார, எப்போ நீ நல்ல மனசோட அப்பான்னு நினைக்கிறியோ..அப்போ என்னைக் கூப்பிடு, சாப்பாடே சாப்பிட்டுட்டு போறேன்." சரியா... கம்பீரமாக நடந்து செல்லும் தன் சம்பந்தியை, வாஞ்சையுடன் பார்த்தார் ராமநாதன்... மருமகள்களே... மாமனாரும் அப்பாதானே.

- B. **நிரோஷா**

SEVAN RUPEES

# CHANGED HIS LIFE



The Nobel Laureate Prof. C V Raman after retirement wanted to open a Research Institute in Bangalore. So he gave an advertisement in the newspapers for recruiting three Scientists.Lot of eager Scientists applied thinking that even if they are not selected at least they will have an opportunity to meet the Nobel laureate. In the preliminary selection five candidates were selected and the final interview to be taken by Prof Raman himself three were selected out of the five. Next day Professor was taking a walk and found one young man wanting to meet him. He realized that it was the same man who had not been selected. The Prof. asked him what was the problem and he replied that there was no problem but after finishing the interview the office had paid him Rs. 7 extra than his claim and he wanted to return it.

But, the accounts department had closed and they could not take back the money and asked him to enjoy . The man told that it was not right for him to take the money which did not belong to him. Prof took the money from him. After going few steps forward the Prof asked the man to meet him next day at 10.30am. The man was happy that he would get an opportunity to meet the great man again. When he met Prof next day the Nobel laureate he told the young man "Son, you failed in the Physics test but have passed the honesty test. So I have created another post for you." The young man was very happy and went on to obtain a FRS and became a Nobel Laureate. The young man was Prof. S. Chandrashekhar. He later wrote a book highlighting how the Seven Rupees changed his life This is how honesty made a great Scientist and today we are proud of his achievements

- S. சுருதி லட்சுமி
B.Sc. (Psychology)



எம் பதில்கள்

# பெருந்தலைவர் காமராசர் மதிய உணவு திட்டம் கொண்டு வர தூண்டிய சம்பவம் எது?

இதுபற்றி நெல்லை கண்ணன் தொலைக் காட்சி நிகழ்ச்சி ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

''சிறுவன் ஒருவன் ஏற்காடு கொட்டசேடு என்ற கிராமத்தில் தன் நண்பர்களுடன் ஆடு மேய்த்துக் கொண்டிருந்தான். முன்னால் தமிழக முதல்வர் காமராசர் அவர்கள் அந்த கிராமத்தின் வழியாக நான்கு சக்கர ஊர்தியில் சென்று கொண்டிருந்தார்.




1954 ஆம் ஆண்டுகளில் நான்கு சக்கர வண்டி என்பது மக்கள் அனைவரும் வியப்பாய் பார்கக கூடிய வாகனம், எனவே ஆடு மேய்த்துக் கொண்டிருந்த சிறுவர்கள் நான்கு சக்கர ஊர்தியை பார்க்க கூடினர். கர்மவீரர் காமராசர் அந்த சிறுவர்களை பார்த்து ஏன் நீங்கள் பள்ளிக்கு போகவில்லை என நட்புடன் அவர்களிடம் கேட்டார்.

சிறுவன் தன் இயல்பான பேச்சில் எனக்கு மதிய சோறு யார் தருவார்? என எதார்த்தமாய் மறுகேள்வி கேட்டான். சற்று யோசித்த தமிழக முதல்வர் காமராசர் அவர்கள் அவன் கேள்விக்கு பதிலாக மதிய உணவு கொடுத்தால் பள்ளிக்கு செல்வாயா? என கேட்டார், செல்வேன் என மகிழ்ச்சியோடு அச்சிறுவன் பதில் சொன்னான். அன்று சேலம் வந்த தமிழக முன்னால் முதல்வர் பெருந்தலைவர் காமராசர் ஆரம்பித்தது தான் மதிய உணவு திட்டம். அதன்படி பாரதியார் பிறந்த எட்டையபுரத்தில்தான் முதன் முதலாக மதிய உணவு திட்டம் தொடங்கப்பட்டது. எம்.ஜி.ஆர் பதவி ஏற்றபின் சத்துணவு திட்டம் என பெயர் மாற்றம் பெற்றது.



அவருக்கு பின் ஆட்சிக்கு வந்த கலைஞர், ஜெயலலிதா அவர்கள் அத்திட்டத்தை தொய்வின்றி தொடர்ந்தனர்.

## காதலுக்கு கண் இல்லை என்பார்களே?






கவிதைக்காக சொன்ன வாசகம் அது. ஆனால் காமத்திற்கு கண் இல்லை என்பதுதான் கொடுமை, கள்ளக் காதலுக்காக சென்னையில் அபிராமி என்ற பெண் தன் இரு குழந்தைகளை கொன்றது என்பது உச்சக்கட்டக் கொடுமை.

பொதுவாக தந்தை என்பவர் ஒரு பெண்ணின் குழந்தைப் பருவம் தொடங்கி அவளே ஒரு குழந்தையை பெற்றெடுக்க தனது பேத்தியாக அதையும் பாதுகாக்கின்ற வரை தன் பணிகளை வாழ்நாள் முழுதும் செய்கிறான் என்பது உலக நடைமுறை.

தான் சுமந்து பெற்ற ஒரு பெண் தன் கள்ளக் காதலுக்கு இடையூறாக இருக்கிறது என்பதற்காக தனது இரு குழந்தைகளை கொன்றிருப்பது என்பது பேரதிர்ச்சியைத் தருகிறது. இது மன்னிக்கவே முடியாத மாபெரும் குற்றம்.



## கோழிப்பண்ணை, மாட்டுப்பண்ணை குதிரைப்பண்ணை கேள்விப் பட்டிருக் கிறோம். கழுதைக்கு பண்ணை உள்ளதா?

இருக்கிறதே! கேரளா மாநிலம் எர்ணாகுளம் மாவட்டம், இராம மங்களம் என்ற ஊரில் அபிபேபி என்கிற எம்.பி.ஏ. பட்டதாரிதான் அந்தப் பண்ணையின் உரிமையாளர்.

கழுதைப்பாலை ஒரு லிட்டர் 5000 ரூபாய்க்கு விற்பனை செய்யும் இவர் அழகி கிளியோபாட்ராவின் மேனியை குளிப்பாட்டிய கழுதைப்பாலை, அழகு சாதனப் பொருள்கள் தயாரிக்கப் பயன்படுத்தி கோடிக்கணக்கில் லாபம் சம்பாதிக்கிறார்.



இனிமேல் யாரையும் கழுதை மேய்க்கத்தான் என்று சொன்னால் வருத்தப்பட வேண்டாம்.

எம் பதில்கள்

## டென்ஷன் இல்லாம இருக்கமுடியலயே சார்?

முதலில்,உங்களுக்கு யாராவது தெரிந்தோ, தெரியாமலோ தீங்கு செய்யும்போது, அந்த தவறை மன்னித்து,மறந்து விடுங்கள்.

அதை மனதில் தேக்கி வைக்காதீர்கள்.

தவறு செய்வது மனித இயல்பு. போன முறை அவன் தவறு செய்யும் போது மன்னித்தேன்; இனி என்னால் முடியாது என்று கூறாதீர்கள்.

நீங்கள் பிறரை மன்னிக்க, மன்னிக்க உங்கள் மனம் பண்படும். அதுமட்டுமல்லாமல் உங்களால் நிம்மதியாகவும் இருக்க முடியும்.

இதற்கு மருத்துவ ரீதியாகவும் நல்ல பலன் உண்டு.

”மறப்போம் மன்னிப்போம்’ என்பதை தாரக மந்திரமாக வைத்துக் கொள்ளுங்கள்.

இல்லையெனில் மன்னிக்க முடியாமல் இருக்கும் அவரைப் பார்த்த உடனே அவர் மீது கோபம் வந்து அந்த கோபம் டென்ஷனாக மாறி ரத்த அழுத்ததை உங்களுக்கு கொண்டு வந்து சேர்த்து விடும்.

இந்த ரத்த கொதிப்பு உங்களுக்கு பலவிதமான நோய்களை ஏற்படுத்தும்.இதனால் நம் ஆரோக்கியம் தான் பாதிக்கிறது. அதேபோல், நீங்கள் செய்யும் தவறுகளுக்கு மற்றவர்களிடம் மன்னிப்பு கேட்கத் தயங்காதீர்கள்.

தெரிந்தோ, தெரியாமலோ பல வகைகளில் நாம் தவறு செய்கிறோம் .அப்படி செய்யும் போது அவரிடம் மன்னிப்புக் கேட்கத் தயங்காதீர்கள்.

வயது வித்தியாசம் பார்க்காமல் உங்கள் தவறை மட்டும் மனதில் கொண்டு மன்னிப்புக் கேளுங்கள்.

அப்படி கேட்கும் போது உங்கள் எதிரி நிச்சயம் பெருந்தன்மையாக நடந்து கொள்வார். அப்படி மன்னிக்காவிட்டாலும், கவலையை விடுங்கள்.

உங்கள் தவறை உணர்ந்து மன்னிப்பு கேட்ட போதே நீங்கள் மன்னிக்கப்பட்டு விட்டதாக உள்ளூர நம்புங்கள். இதனால் மன அமைதி கிடைக்கும். தவறு செய்யும் நமக்கு மன்னிக்கும் மனப்பான்மை மற்றும் மன்னிப்புக் கேட்கும் தன்மை ஆகிய இரண்டும் வேண்டும். ப்ளீஸ், தாங்க்யூ, ஸாரி, வணக்கம், வாங்க போன்ற சொற்களையும் அடிக்கடி தேவையான இடத்தில் தவறாமல் பயன்படுத்துங்கள். அவை உங்களை பண்புள்ளவராகக் காட்டும்.

ஆம்.,நண்பர்களே.. என்ன இதெல்லாம் செய்ய நீங்க ரெடியா? அப்படின்னா இனிமே நோ டென்ஷன்! வாழ்க்கையை ஆனந்தமாய் ஜாம்,ஜாம் என்று கழியுங்கள்.....

## Palindrome என்ற ஆங்கிலப்பதிவு தமிழில் உண்டா?

தமிழில் இல்லாததா?

எந்த எழுத்தில் தொடங்குகிறதோ அதே எழுத்தில் முடியும் சொல்லுக்கு பாலின்ரோம் என்று ஆங்கிலத்தில் குறிப்பிடுவார்கள்.

தமிழிலும் சில...

**மேக ராகமே!**

**மேள தாளமே!**

**தாரா ராதா!**

**கால பாலகா!**

**வாத மாதவா!**

**ராமா மாரா!**

**மாறுமா கைரேகை மாறுமா**

**சேர அரசே!**

**வாழவா!**

**பூதந்த பூ!**

**வா கற்க வா!**

**மோகமோ!**

**வான கனவா!**

நீங்களும் இதுபோன்ற வார்த்தைகளை கண்டுபிடிக்கலாமே?





# அம்மா பயன்படுத்திய விறகு அடுப்பு

"நந்து சுந்து.. "விறகு மண்டிக்குப் போய் விறகு வாங்கிட்டு வரனும்" என்பார் அம்மா. அப்பா விறகு மண்டிக்கு கிளம்புவார். பின்னாலேயே நானும் அண்ணன்களும் போக வேண்டும். நாங்கள் தான் டெலிவரி செய்யும் மகன்கள். அமேசன்கள். விறகு மண்டியில் பெரிய பெரிய மரங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். ஆயிரத்தில் ஒருவன் எம்.ஜி.ஆர் மாதிரி ஒரு ஆள் எப்போது பார்த்தாலும் கோடாலி வைத்து விறகுகளை பிளந்து கொண்டே இருப்பார். ஏன் என்ற கேள்வி ஒரு தடவை கூட அவர் கேட்டதில்லை.

"ரெண்டு குண்டு விறகு வைங்க" என்பார் அப்பா. குண்டு என்பது ஒரு எடை அளவு. கடைக்காரரும் விறகை எடுத்து தராசில் வைப்பார். நான் அந்த goondas act ஐ வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பேன்.

தராசு என்பது பெரிதாக இருக்கும். குருவாயூர் கோவிலில் துலாபாரம் போடும் தராசை விட பெரிதாக இருக்கும். Large scale தராசு. வலது பக்கம் விறகு கட்டைகளை வைக்க வைக்க அந்த தட்டு இந்திய ரூபாயின் மதிப்பு மாதிரி கீழே இறங்கும்.

"ஈர விறகு எல்லாம் வைக்காதீங்க...போன தடவையே எதுவும் சரியா எரியல்லே" என்பார் அப்பா. இது அவரின் சுய சிந்தனை இல்லை. மண்டபத்தில் யாரோ எழுதிக் கொடுத்ததை ஒப்பித்து கொண்டிருக்கிறார். எடுத்துகிட்டு போய் கொஞ்சம் காய வைச்சா நல்லா எரியும்" என்பார் கடைக்காரர். காயமே இது பொய்யடா' என்று தெரிந்தும் அந்த விறகை வாங்குவதை தவிர வேறு வழியில்லை. ஊரில் ஒரே ஒரு விறகு கடை தான் இருந்தது. வீரப்பன் வேறு அவரின் கம்பெனியை அப்போது incorporate செய்திருக்கவில்லை.

இப்போது ஈரம் விளைந்த விறகை வீட்டுக்கு எடுத்துப் போக வேண்டும். கருடாழ்வார் மாதிரி நம்முடைய இரண்டு கைகளையும் நீட்ட வேண்டும். அதன் மேல் விறகுகளை அடுக்கி வைப்பார்கள். விறகுக்கு கீழே கையில் ஒரு சாக்கு போட்டு விடுவார்கள். கையில் விறகு குத்தாமல் இருக்க அது ஒரு சாக்கு அப்ஸார்பர்.

நானும் அண்ணனும் தெருவில் பிரதர் வலம் வருவோம்.

கால் மணி நேரத்தில் விறகுகுண பாண்டியர்கள் வீடு போய் சேர்ந்து விடுவோம். இப்போது இன்ஸ்பெக்ஷன் நடக்கும். அம்மா ஒரு சரியான water diviner. "இன்னும் விறகுல தண்ணி இருக்கே. ஒரே ஈரம்" என்பார்.

அம்மாவும் பாவம் தான். அந்த விறகை வைத்து எப்படி சமைப்பார்கள்? விறகு காய வைக்கும் படலம் ஆரம்பிக்கும். மொட்டை

மாடியில் விறகு காயப் போட வேண்டும். அதற்கும் நாங்கள் தான் packers and movers. நல்ல வேளை. காவல் காக்க வேண்டாம்.

காக்கா தூக்கிப் போகாது. அப்போதெல்லாம் விறகு அடுப்பு விநோதமாக இருக்கும். சாணி பூசி மொழுகி சாணி ராணியாக இருக்கும். மேலே வீபூதி பட்டை வேறு இருக்கும். மண் அல்லது சிமெண்டினால் செய்திருப்பார்கள். அடுப்பின் மேல் மூன்று இடங்களில் உருண்டையாக புடைத்துக் கொண்டிருக்கும்.

இந்த மெயின் அடுப்புக்கு பக்கத்தில் அல்லக்கை மாதிரி இன்னொரு அடுப்பு இருக்கும். வட்டமாக ஒரு துவாரம் இருக்கும். மெயின் அடுப்பிலிருந்து சூடு இந்த அடுப்புக்கு இலவசமாக வரும். இந்த அடுப்பிற்கு கொடி அடுப்பு என்று பெயர்.

இந்த auxiliary அடுப்பு பொதுவாக ரசம் செய்யத் தான் உபயோகப்படுத்தப் படும். சமைக்கும் போது சதா சர்வகாலமும் அடுப்பு பக்கத்திலேயே ஜெகன் மோகினி பேய் மாதிரி இருக்க வேண்டும். விறகை உள்ளே தள்ளி விட்டுக் கொண்டே இருக்க வேண்டும். அவ்வப்போது விறகு அனைந்து புகை மூட்டம் வரும்.

சச்சீன் படத்தில் ஜெனிலியா வரும் போதெல்லாம் திரை முழுக்க புகை வருமே அந்த மாதிரி கிச்சன் முழுக்க புகை வியாபிக்கும். இப்போது விறகை ஊதுகுழல் வைத்து ஊத வேண்டும். "டேய். வந்து கொஞ்சம் அடுப்பை ஊதுடா?' என்பாள் அம்மா.



அண்ணன் போய் ஊதுவான். "இன்னும் கொஞ்சம் காசு போட்டு நல்ல விறகா வாங்கியிருக்கக் கூடாதா? சரியான கஞ்சம்" என்று அம்மா புலம்புவாள். குழல் ஊதும் அண்ணனுக்கு பஞ்சப் பாட்டு சத்தம் கேட்டுக் கொண்டிருக்கும். குழல் ஊதுவதும் ஒரு டெக்னிக். கொஞ்சம் வேகமாக ஊதி விட்டால் ஆஷ் துரை கிச்சன் முழுக்க பறக்க ஆரம்பித்து விடுவார். வீடு முழுக்க சாம்பல் பள்ளத்தாக்கு ஆகிவிடும். விறகிலிருந்து வரும் புகையெல்லாம் சுவற்றில் fixed deposit ஆகும். கிச்சன் சுவர் முழுக்க கறுப்பாக இருக்கும். அந்த கருப்பை எல்லாம் எடுத்தால் Go back daddy என்று நூறு தடவை கறுப்பு கொடி காட்டலாம். அப்போதெல்லாம் குண்டு பல்பு தான். நாற்பது வாட்ஸ் பல்பு எரியும். அந்த வெளிச்சம் கரப்பான் பூச்சிகளுக்கே சரியாகப் போய் விடும்.

விறகு அடுப்பில் இன்னொரு பிரச்சினை. வெங்கலப் பானை அடியெல்லாம் கருப்பாகி விடும். அம்மா ராத்திரி உட்கார்ந்து தேய்த்துக் கொண்டிருப்பாள். அது ஒரு பெரிய night mare. அந்த காலத்தில் பிக் பாஸ் vessel cleaning team எல்லாம் கிடையாது. மும்தாஜும் சென்றாயனும் வந்து பாத்திரம் தேய்த்து கொடுக்க மாட்டார்கள். பாத்திரத்தில் கரி பிடிப்பதை தடுக்க ஒரு உபாயம் உண்டு. வெங்கலப் பானையின் அடியில் அரிசி மாவைக் கரைத்து பூசி விடுவாள் அம்மா. அந்தக்காலத்திலேயே Firewall கண்டு பிடித்திருந்தாள் அம்மா.

சாதம் பொங்கி வரும் போது கஞ்சி overflow ஆகும். அதை அப்படியே விட்டால் அடுப்பு அணைந்து விடும். கஞ்சிக்கு ஏது கண்ட்ரோல் வால்வ்? ஒரே வழி. விறகை பிடித்து வெளியே இழுக்க வேண்டியது தான். சமையல் முடிந்து விட்டால் அடுப்பை அணைக்க வேண்டும். அதுவும் ஒரு டெக்னிக் தான். விறகை வெளியே இழுக்க வேண்டும். அதன் மீது லேசாக தண்ணீரை தெளிக்க வேண்டும். 'தண்ணீர் தெளித்து விட்டாச்சு' என்றால் இனிமேல் பயன் இல்லை என்று அர்த்தம். ஆனால் இந்த விறகில் தண்ணீர் தெளிப்பதே மறுபடியும் உபயோகப்படுத்தத்தான்.

சூடு ஆறிய பிறகு சாம்பலை சேகரிப்பாள் அம்மா. பாத்திரம் தேய்க்க அது தான். அம்மாவின் அம் பார்.

கிச்சனை விட்டு அம்மா வெளியே வரும் போது தலையெல்லாம் சாம்பல் துகள்கள் இருக்கும். கண்கள் சிவப்பாக கன்றிப் போயிருக்கும். ஆனால் தட்டில் வெள்ளை வேளேர் என சாதமும் சாம்பாரும் வந்து விழும். பல ஆண்டுகளுக்கு பிறகு இன்று என் வீட்டில் இருக்கும் கிச்சனைப் பார்க்கிறேன். மேடையில் இருக்கும் kitchen accesஷரீries ஐ நோட்டம் விடுகிறேன். கேஸ் ஸ்டவ் piped gas உடன், மைக்ரோவேவ் ஓவன், ரைஸ் குக்கர், இண்டக்ஷன் ஸ்டவ், காபி மேக்கர், சப்பாத்தி மேக்கர், ப்ரெட் டோஸ்டர், சாண்ட்விச் மேக்கர், எலெக்ட்ரிக் கெட்டில்.

இவ்வளவு சாதனங்கள் இருக்கின்றன. வேண்டிய அளவு ப்ளக் பாயிண்ட் இல்லை. இருக்கும் ஒன்றிரண்டு ப்ளக் பாயிண்டிலும் செல்போன் சார்ஜர் நிரந்தரமாக குடியேறியேறியிருக்கிறது. ஏனோ எனக்கு அம்மாவின் நினைவு வருகிறது. விறகு அடுப்பு வைத்து புகைகளுக்கு மத்தியில் பத்து பேருக்கு தவல வடை செய்து போட்டது ஞாபகம் வருகிறது. இதோ இப்போதும் கிச்சனிலிருந்து குரல் கேட்கிறது.

"நைட் டிபனுக்கு என்ன செய்யட்டும்?" ஒரே ஒரு வித்தியாசம். கேட்டது சமையல்காரம்மா.

**- சுந்தரமூர்த்தி**


# சிறுநீர் தொற்று:ஒரு எச்சரிக்கை

சமீபத்தில் மரணமடைந்த முக்கியப் பிரமுகர்களான ஜெயலலிதா, கருணாநிதி, வாஜ்பாய் ஆகியோரைப் பற்றிய மருத்துவமனை தந்த அறிக்கையில் குறிப்பிடத்தக்க ஒரு வார்த்தை சிறுநீர் தொற்று என்பதாகும். சிறுநீர் தொற்றினால் ஏற்படும் ஆபத்தை அனைவரும் அறிந்துகொள்ள வேண்டும்.

**சி**றுநீர்ப் பாதை தொற்று அண்மை காலமாகத்தான் அதிகரித்து வருகிறதா அல்லது இது வயதானவர்களுக்கு மட்டும் ஏற்படும் பிரச்னையா, இது உண்டாவதற்கான காரணிகள் என்னென்ன. போன்ற சந்தேகங்களைச் சிறுநீரக அறுவைச்சிகிச்சை நிபுணர் எம்.ஜி.சேகரிடம் முன்வைத்தோம். சிறுநீர்ப் பாதை தொற்று சிறியவர், பெரியவர் என அனைத்து வயதினருக்கும் ஏற்படும் பிரச்னை. குறிப்பாக வயதானவர்களுக்கும் பெண்களுக்கும் இது ஏற்படும் வாய்ப்பு அதிகம். சிறுநீர்ப் பாதைத் தொற்றை

ஆரம்பத்திலேயே கண்டுகொள்ளாமல் விட்டால், சிறுநீரகச் செயலிழப்பு உள்ளிட்ட கடுமையான பாதிப்புகளை உண்டாக்கிவிடும். எனவே, சிறுநீர்ப் பாதை தொற்று குறித்து அறிந்துகொண்டு, அது குறித்த விழிப்புஉணர்வுடன் இருப்பதே நல்லது" என்கிற மருத்துவர் சேகர் அதற்கான காரணங்கள், அறிகுறிகள், பரிசோதனை, சிகிச்சை முறைகள் குறித்து விரிவாகப் பேசுகிறார். சிறுநீர் செல்லும் பாதையில் நோய்த் தொற்று ஏற்படுவதைத்தான் 'சிறுநீர்ப் பாதை தொற்று' (Urinary Tract Infection) என்கிறோம். அதாவது சிறுநீர்ப் பாதை வழியாகச் செல்லும் கிருமி,

சிறுநீர்ப் பையை அடைந்து மிக வேகமாகப் பெருக்கமடையும். பொதுவாக, நம் சிறுநீரக மண்டலமே இது போன்ற கிருமிகளை அகற்றும் தன்மை கொண்டது. ஆனால், இந்தச் செயல்பாடு பாதிக்கப்படும்போது நோய்த் தொற்று ஏற்படும். சிறுநீரகம், சிறுநீரகப் பாதை, சிறுநீர்ப்பை... எனச் சிறுநீரக மண்டலத்தில் எங்கு வேண்டுமானாலும் நோய்த் தொற்று ஏற்படலாம். இந்தத் தொற்று, சிறுநீரகம் வரை பரவினால், பாதிப்பு அதிகமாக இருக்கும். பெரும்பாலும் இகோலை (E. coli) உள்ளிட்ட சிலவகை பாக்டீரியாக்கள்தாம் சிறுநீர்ப் பாதை தொற்றுக்குக் காரணமாக இருக்கின்றன.




அறிகுறிகள் சிறுநீர் கழிப்பதில் சிரமம், எரிச்சல், மிகக் குறைவான அளவில் அடிக்கடி சிறுநீர் கழித்தல், சிறுநீரில் ரத்தம் கலந்து போதல், காய்ச்சல், சிறுநீரில் நாற்றம், வாந்தி, அடி வயிறு மற்றும் இடுப்புப் பகுதியில் வலி உள்ளிட்ட அறிகுறிகள் தோன்றும். நோய்த் தொற்று எந்த இடத்தில் தீவிரமாக இருக்கிறது என்பதைப் பொறுத்து அறிகுறிகள் மாறுபடும். சிறுநீரகம்: மேல் முதுகுவலி, பக்கவாட்டில் வலி, காய்ச்சல், குளிர், குமட்டல், வாந்தி ஏற்படலாம்.

சிறுநீர்ப்பை: இடுப்பில் அழுத்தம், கீழ் வயிற்றில் அசௌகரியம், அடிக்கடி, மிகக் குறைந்த அளவில் சிறுநீர் வெளியேறுதல், சிறுநீரில் ரத்தம் கலந்து வெளியேறுதல் போன்றவை இருக்கும். சிறுநீர்க் குழாய்: சிறுநீர் கழிக்கும்போது எரிச்சல் உண்டாகும். தாங்க முடியாத வலி ஏற்படும். யாருக்கெல்லாம் வரலாம்? சிறுநீரகக்கல் பிரச்னை இருப்பவர்கள், சர்க்கரை நோயாளிகள் , ஏற்கெனவே சிறுநீரகப் பிரச்னை உள்ளவர்கள் , வயதானவர்கள் நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக உள்ளவர்கள் சிறுநீர்க் கசிவு பிரச்னை இருப்பவர்கள புராஸ்டேட் வீக்கம் சிறுநீரக அறுவைச்சிகிச்சைக்காக வெளிப்புறக் குழாய் பொருத்தப்பட்டவர்கள் (Bladder catheter use) அல்சைமர்,

பார்கின்சன் போன்ற மறதி நோய் உள்ளவர்கள். இவை தவிர, பாலின உறுப்புகளில் சுகாதாரமின்மை காரணமாகவும் சிறுநீர்ப் பாதை தொற்று ஏற்படும். மாதவிடாய் நின்ற பிறகு ஏற்படும் ஹார்மோன் மாற்றங்களால் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்துபோகும். இதனால் தொற்று ஏற்படும் வாய்ப்புகள் அதிகரிக்கும். குழந்தைகளுக்கு வெஸிகோயூ ரிடெரல் ரெஃப்ளெக்ஸ் (VesicoUreteral Reflux) என்ற பிரச்னையும் இந்தத் தொற்றுக்குக் காரணமாகலாம். அதாவது, சிறுநீரகத்திலிருந்து சிறுநீர்ப் பாதைக்கு வரும் சிறுநீர், மீண்டும் சிறுநீரகத்துக்குச் செல்லும் நிலைதான் வெஸிகோயூரிடெரல் ரெஃப்ளெக்ஸ்.

இந்தத் தொற்று இருப்பதை அறிய

சிறுநீர் பரிசோதனை செய்ய வேண்டும். அதில், வெள்ளை அணுக்கள், சிவப்பு அணுக்கள் அல்லது பாக்டீரியா உள்ளதா என்பதெல்லாம் கண்டறியப்படும். சிறுநீர் கல்ச்சர் பரிசோதனை செய்யப்பட்டு, எந்த மாதிரியான கிருமித் தொற்று ஏற்பட்டிருக்கிறது என்பதும் கண்டறியப்படும். அடிக்கடி இந்தத் தொற்று ஏற்பட்டால், சி.டி., எம்.ஆர்.ஐ ஸ்கேன் பரிசோதனைகளைச் செய்யவேண்டியிருக்கும்.



தீர்வு: முதற்கட்டமாக, சிறுநீர்ப் பாதைத் தொற்று பாதிப்புக்கு ஆன்டி பயாடிக் மாத்திரைகள் பரிந்துரைக்கப்படும். பரிசோதனையில் வேறு பாதிப்பின் அறிகுறியாக சிறுநீர்ப் பாதைத் தொற்று ஏற்பட்டிருப்பது தெரியவந்தால், அந்தப் பாதிப்பை சரிசெய்வதன் மூலம் பிரச்னைக்குத் தீர்வு காணலாம்.

தவிர்க்க சில வழிமுறைகள். தினமும் போதுமான அளவு நீர் அருந்த வேண்டும். இது சிறுநீர் கழிக்கும் உணர்வை அதிகப்படுத்தும். சிறுநீர் கழிக்கும்போது, சிறுநீர்ப் பாதையில் உள்ள கிருமிகள் வெளியேற்றப்படும்.

சிறுநீரை அடக்கக் கூடாது. சிறுநீர் கழிக்க வேண்டும் என்று தோன்றினால் உடனடியாகக் கழித்துவிட வேண்டும். பருத்தியால் ஆன உள்ளாடைகளையே அணிய வேண்டும். இறுக்கமான உள்ளாடைகளை அணியக் கூடாது. சர்க்கரைநோய், ரத்த அழுத்தம் போன்றவற்றைக் கட்டுக்குள் வைத்திருக்க வேண்டும்.

Don't miss thisமுதுமை, நோய்மைக்கு சவால் விடும் கருணாநிதியின் ஆரோக்கிய ரகசியம். பிறப்புறுப்புகளை சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். மலம் கழித்துவிட்டு ஆசனவாயைக் கவனமாகக் கழுவ வேண்டும். மேலிருந்து கீழாகக் கழுவ வேண்டும். பிறப்புறுப்பில் படாதபடி கவனமாக இருக்க வேண்டும்.

**- ஆர்.குணசேகரன்**

# தெளிவான மன நிலை தரும் வெற்றி!

ஒரு நாள் ஒரு விவசாயி தன் கையில் கட்டியிருந்த கைக்கடிகாரத்தை மோட்டார் கொட்டகையில் தொலைத்து விட்டார். அது அவரது திருமணத்தின் போது மனைவி அவருக்கு ஆசையாக பரிசளித்த கைக்கடிகாரம். அவர் அந்த இடத்தை சுற்றி தேடி பார்த்துவிட்டார். அவருக்கு அந்த கைக்கடிகாரம் கிடைக்கவில்லை. நிலத்தில் சிறுவர்கள் விளையாடிக் கொண்டு இருந்தனர். அவர்களை அழைத்து, "என் கைகடிகாரம் தொலைந்துவிட்டது. அதை கண்டுபிடித்து கொடுப்பவர்களுக்கு நல்ல பரிசு ஒன்று கொடுப்பேன்" என்றார்.



சிறுவர்கள் ஆர்வமுடன் மோட்டார் கொட்டகைக்குள் சென்று தேட ஆரம்பித்தனர். சிறிது நேரத்தில் அவர்கள் வெளியே வந்து, "எங்களால் கண்டுபிடிக்க முடியவில்லை" என்று சொல்லி விட்டு கிளம்பி விட்டனர். ஒரு சிறுவன் மட்டும் மீண்டும் வந்து, "எனக்கு இன்னொரு வாய்ப்பு கொடுங்கள். நான் தேடி தருகிறேன்" என்றான். விவசாயியும், "சரி! நீ போய் தேடிப்பார்" என்றார். மோட்டார் கொட்டகைக்குள் சென்ற சிறுவன் சிறிது நேரத்தில் கைகடிகாரத்துடன் வெளியே வந்தான். அதை பார்த்த விவசாயி ஆச்சரியத்துடன்,

"எப்படி உன்னால் மட்டும் கண்டுபிடிக்க முடிந்தது?" என்று கேட்டார். "நான் உள்ளே சென்று தரையில் 'அமைதியாக' உட்கார்ந்து காதுகளை கூர்மையாக்கி கேட்டேன். எந்த திசையில் இருந்து டிக் டிக் சத்தம் வருகிறது என்று. பிறகு சுலபமாக கண்டுபிடித்து விட்டேன் என்று கூறினான். நிலை என்பது அஸ்திவாரம் நமது அஸ்திவாரம் எனும் மனம் சாந்தாமான நிலையில் என்றும் இருக்குமானால் உன்னை நீ அறியலாம்.

தெளிவான மனநிலையை சாந்தமும், அமைதியும் தான் இறுதிவரை தரும். கோபம் நம் கண்களை குருடாக்கும், நம் காதுகளை செவிடாக்கும், நம் உள்ளத்தை ஊனமாக்கும், நம் உடலை விலங்காக்கும்,

நம் மூச்சை தன் நிலையை விட்டு விலகவைக்கும், நம் கை, கால்களை அதன் கட்டுப்பாட்டை இழக்கவைக்கும், ஆனால் சாந்தம். எவ்வித சூழலுக்கும் அருமருந்தாக அமையும். அமைதியான மன நிலையில் எந்த ஒரு காரியத்தை செய்தாலும் அது வெற்றிகரமாக முடியும். உங்களின் மனதை எந்த நிலையிலும் சாந்தமாக வைத்துக்கொண்டால் உங்கள் வாழ்க்கை அற்புதமான வரமாக அமையும். உங்களை மட்டுமல்ல உங்களை சார்ந்தவர்களையும் சேர்த்துத்தான்.

**- சுரேஷ்**



# சின்னஞ்சிறு வயதில் தேவரின் ஞானம்

ஒரு உண்மைச் சம்பவம் தனது ஒன்பதாவது வயதில் தன் உடன் படித்த நண்பர்களோடு அந்தச் சிறுவன் - தனது திருநகர் வீட்டிலிருந்து தினந்தோறும் திருப்பரங்குன்றம் சென்று முருகனை வழிபடுவது வழக்கம்.

அன்றும் அவன் வீதியில் சென்று கொண்டிருந்த பொழுது கிறிஸ்த்துவப் பாதிரியார் ஒருவர் மெகா போனை வைத்துக் கொண்டு மதப் பிரசங்கம் செய்து கொண்டிருந்தார். அந்தப் பிரசங்கத்தில் இந்து மதக் கடவுள் வழிபாட்டைக் குறை சொல்வதற்காக "ஏ.,.மானிடர்களே, நீங்கள் நடக்கின்ற சாலைகளிலே போடப்பட்டிருப்பது கல், உங்கள் வீட்டு வாயிற்படியில் போடப் பட்டிருப்பதும் கல், குளக்கரையில் துணி துவைக்க பயன்படுவதும் கல், நீங்கள் வணங்கும் கடவுள் அதுவும் கல்."

"ஒரு காலத்தில் உங்கள் கால் பட்ட கல்லைத்தான் இப்பொழுது கோவிலில் வைத்துக் கடவுள் என்று சொல்கிறார்கள்" அதற்கு சக்தியுமில்லை, வணங்குகிற உங்களுக்குப் புத்தியும் இல்லை என்று பாதிரியார் பேசிக் கொண்டே போகிறார் இடையில புகுந்த அந்தச் சிறுவன் அவரது பேச்சைத் தடுத்து நிறுத்தி "எனக்கொரு சந்தேகம், கொஞ்சம் விளக்க முடியுமா?'' என்று கேட்க அந்தச் சிறுவனை ஏற இறங்கப் பார்த்து கூடியிருந்த கூட்டத்தை நோக்கி "மகாகனம் மிக்க மக்களே, இதோ இந்தச் சிறுவன் என்னிடம் கேள்வி கேட்கப் போகிறான், நான் இப்பொழுது அவன் கேள்விகளுக்கு விளக்கமளிக்கப் போகி உங்கள் கவனத்தை என்பால் திருப்புங்கள்'' என்றார். சிறுவன் கேட்டான். நமக்குப் பின்னால் பிறந்த ஒரு பெண்ணை என்னவென்று சொல்வோம்?

**''பிற மதத்தைக் குறை சொல்லி உங்கள் மதத்தை வளர்க்கப் பார்க்காதீர்கள்''**

"தங்கை என்போம், தமக்கை என்போம், சகோதரி என்போம் என்றார் பாதிரியார்- "நம்மைப் பெற்றவளை எப்படிச் சொல்வோம்?'' "தாய் என்போம், அன்னை என்போம், அம்மா என்போம்'' "நாம் மணந்து கொள்ளும் ஒரு பெண்ணை?'' "மனைவி என்போம், துணைவி என்போம், இல்லத்தரசி என்போம்". இந்த மூன்று உறவும் உங்களுக்கு இருக்கிறதா? "தெரிந்துதான் கேட்கிறாயா? சிறுவனே தாயில்லாமல் யாரும் பிறக்க முடியாது. என்கருத் தாயும், இருக்கிறார் மனைவியும், இருக்கிறார் என்று ஏளனமாக பாதிரியார் பதிலளித்தார்.

"உடலால், உணர்வால், உறுப்புகளால் மூவரும் ஒரே தன்மை கொண்டவர்கள் தான் இல்லையா?'' என்று அந்தச் சிறுவன் கேட்டான் பாதிரியார் "ஆமாம்'' என்றதும் "உங்கள் மனைவியிடம் நீங்கள் நடந்து கொள்ளும் முறைக்கும், உங்கள் தாய் தங்கையிடமும் நடந்து கொள்ளும் முறைக்கும் வேறுபாடுகளும் வித்தியாசமும் இருக்கிறதா? இல்லை மூவரையும் ஒரே நோக்கோடுதான் பார்க்கிறீர்களா?'' என்றதும் மெகா போன் கீழே விழுகிறது, பாதிரியாரின் வாய் வார்த்தையின்றி திறந்தபடியே இருக்கிறது

கூடியிருந்த கூட்டத்தார் பிரமிப்பும் பெருமிதமும் கொண்டு அந்தச் சிறுவனின் தோற்றத்தையும், வயதை மீறிய அறிவையும் போற்றிப் பாராட்டினர்

பாதிரியார் தான் செய்த தவறுக்காக தன்னைக் குறுக்கிக் கொண்டு அந்தச் சிறுவன் முன் வந்து "தம்பி, இப்போது என் முதுகு மட்டும் உன் முன்னால் வளைந்திருக்கவில்லை, என் அறிவும் ஆணவமும் வளைந்து தான் இருக்கிறது", "எங்கள் மதத்தின் பால் கொண்ட ஈடுபாட்டால் சொல்லின் ஆழம் புரியாமல் பேசிவிட்டேன், மன்னித்து விடப்பா'' என்று சொல்ல "பிற மதத்தைக் குறை சொல்லி உங்கள் மதத்தை வளர்க்கப் பார்க்காதீர்கள்'' உங்கள் மதத்தின் மேன்மையைப் பிறருக்குப் புரிய வையுங்கள். பிடித்திருந்தால் அவர்கள் உங்களைத் தொடரட்டும் அதற்குத் தடையாக இங்கே எவரும் இருக்க மாட்டார்கள்.

ஒன்பது வயதில் இந்து மதத்தின் காவலராக நின்று பேசும் சாமர்த்தியம் எந்தப் பாடத்தில் அவர் படித்தது? இயற்கையின் வெளிப்பாடுகள் எப்படி கற்றுக் கொள்ளாமல் நடைபெறுகிறதோ, அப்படித்தான் அதுவும். அந்த ஞானச் சிறுவன் வேறு யாருமல்ல. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் தான்.



# PROVE YOURSELF

Detoxify your speech. Reduce the use of cuss words. Be polite. Read everyday. Doesn't matter what. Choose whatever interests you. Promise yourself that you will never talk rudely to your parents. They never deserve it.

Observe people around you. Imbibe their virtues. Spend some time with nature everyday.

Feed the stray animals. Yes, it feels good to feed the hungry.

No ego. No ego. No ego. Just learn, learn and learn.

Do not hesitate to clarify a doubt. "He who asks a question remains fool for 5 minutes. He who does not ask remains a fool forever".

Whatever you do, do it with full involvement. That's meditation. Keep distance from people who give you negative vibes but never hold grudges. Stop comparing yourself with others. If you won't stop, you will never know your own potential.

"The biggest failure in life is the failure to try". Always remember this.

"I cried as I had no shoes until I saw a man who had no feet". Never complain.

Plan your day. It will take a few minutes but will save your days. Everyday, for a few minutes, sit in silence. I mean sit with yourself. Just yourself. Magic will flow.

In a healthy body resides a healthy mind. Do not litter it with junk.

For one month, eat home cooked meals. Keep your body hydrated at all times. Practice drinking 8–10 glasses of water.

Make a habit to eat at least one serving of raw vegetable salad on a daily basis.

Take care of your health. "He who has health has hope and he who has hope has everything".

Life is short. Life is simple. Do not complicate it. Don't forget to smile.



**- S.JANAKI**
**STD XI- GOOD SHEPHERED**
**M.H.S,School Chennai**

# மிரட்டப்பட்டாரா ஹன்சிகா?

நடிகை ஹன்சிகா தயாரிப்பாளர் ஒருவரால் மிரட்டப்பட்டதாக தகவல் வெளியானது.

ஹன்சிகா தற்போது விஷ்ணு விஷால், விக்ரம் பிரபுவுடன் ஒவ்வொரு படத்தில் நடித்து வருகிறார். அவை தவிர வேறு படங்கள் இல்லை. அவரது 50வது படமாக கதாநாயகிக்கு முக்கியத்துவம் தரும் மகா என்னும் படத்தில் நடிக்க உள்ளார்.

சினிமா குறித்து ஹன்சிகா பேட்டி ஒன்றில் கூறியதாவது: '50வது படத்தில் நடிப்பதை நினைத்து மகிழ்ச்சியாக உள்ளேன். மகா ஹீரோயினை சுற்றி நகரும் கதை கொண்ட படம். முதல்முறையாக இது போன்ற படத்தில் நடிக்கிறேன்.

நான் வெற்றிகரமான நடிகையாவேன் என்று எனக்கு ஏற்கனவே தெரியும். ஏன் என்றால் நான் கடினமாக உழைக்கிறேன். அதனால் தான் என்னை தேடி நல்ல நல்ல படங்கள் வருகின்றது. நான் பெரிய படங்களில் நடிப்பேன் என்று தெரியும். என் கெரியரில் உச்சத்தை தொடுவேன் என்றும் தெரியும்.



ஒவ்வொரு படத்தில் நடிக்கும்போதும் புதிதாக ஏதாவது கற்கிறேன். நிறைய நல்லவர்களை சந்தித்துள்ளேன். பல மேதைகளை சந்தித்து பேசியுள்ளேன். தவறுகள் செய்வது இயற்கை. ஆனால் தவறு செய்துவிட்டோமே என்று இடிந்து போகும் ஆள் இல்லை நான்.

நான் கடந்த ஆண்டு மட்டும் 18 முதல் 19 ஸ்க்ரிப்டுகளை நிராகரித்துள்ளேன். முன்பெல்லாம் நான் ஆண்டுக்கு 8 படம் பண்ணினேன். தற்போது ஆண்டுக்கு 4 படங்கள் செய்கிறேன். அதற்காக நான் தினமும் வேலை பார்க்கவில்லை என்று அர்த்தம் இல்லை.

ஓவியம் வரைவது என்றால் எனக்கு மிகவும் பிடிக்கும். நேரம் கிடைக்கும் போது எல்லாம் வரைகிறேன்' என்று கூறி இருக்கிறார் ஹன்சிகா.



# சிம்ரனின் ரீ எண்ட்ரீ

சிம்ரன் வில்லத் தனம் கலந்த கதாபாத்திரத்தில் நடித்தால் அந்த படம் வெற்றி அடையும் என்று ஒரு செண்டிமெண்ட் தமிழ் சினிமாவில் இருக்கிறது. ஒன்ஸ்மோர், நட்புக்காக, பார்த்தேன் ரசித்தேன் ஆகிய படங்களில் வில்லத்தனம் கலந்த கதாபாத்திரத்தில் நடித்து இருந்தார்.

இந்த படங்கள் அத்தனையும் பெரிய அளவில் வெற்றி பெற்றன. சிம்ரன் உச்சத்தில் இருக்கும்போது இந்த செண்டிமெண்ட் காரணமாக இதுபோன்ற வேடங்களே அவருக்கு அதிகமாக வந்தன.

மீண்டும் நடிக்க வந்துள்ள சிம்ரன் 'சீமராஜா' படத்தில் சிவகார்த்திகேயனுக்கு வில்லியாக நடித்துள்ளார். காளீஸ்வரி என்னும் கதாபாத்திரத்தில் அதிரடி வில்லியாக நடித்துள்ள சிம்ரனுக்கு தொடர்ந்து வில்லி வேடங்கள் வருகின்றன.



# அலார்ட்டான காஜல் அகர்வால்

மும்பை அழகியான காஜல் அகர்வால் தென்னிந்திய சினிமாவின் முன்னணி நடிகைகளில் ஒருவராக வலம் வருகிறார். இவர் இந்தித் திரைப்படமான ‘கியூன் ஹோ கயா நா’வில் 2004ஆம் ஆண்டு ஐஸ்வர்யா ராயின் தோழியாக அறிமுகமானார். பின்னர் தெலுங்கில் ‘லட்சுமி கல்யாணம்’ என்ற படத்திலும், தமிழில் ‘பழனி’ என்ற படத்திலும் நடித்தார். ராஜ மவுலி இயக்கத்தில் 2009ஆம் ஆண்டு வெளியான ‘மகதீரா’ திரைப்படம் மூலம் அனை வரின் கவனத்தையும் பெற்றார்.

அதிலிருந்து இப்போது வரை அவருக்கான கிரேஸ் குறை யாமல் இருந்து வருகிறது. தென்னிந் தியாவின் முன்னணி ஹீரோக்கள் அனைவருடனும் நடித்துவிட்டார்.பத்து வருடங்களில் 50 படங்களுக்கு மேல் நடித்து விட்டார் காஜல். இந்த நிலையில் ஜெயம் ரவியின் அடுத்த படத்தில் ஜோடியாக நடிக்க காஜல் அகர்வால் ஒப்பந்தமாகி இருக்கிறார். இந்தப் படத்தை புதுமுக இயக்குனர் ஒருவர் இயக்க இருப்பதாகவும், இது குறித்த அறிவிப்பு வெகு விரைவில் வெளியாகும் என்றும் கூறப்படுகிறது.


# செல்வராகவனுக்கு ஐஸ் வைத்த ரகுல் பிரீத்திசிங்



தெலுங்கு பட உலகில் முன்னணி இடம் பிடித்து இருப்பவர் ரகுல் பிரீத்திசிங். இப்போது தமிழில் சூர்யா, கார்த்தி, சிவகார்த்திகேயன் படங்களில் நடிக்கிறார். இது குறித்து கூறிய ரகுல் பிரீத்திசிங்...


“நான் சூர்யாவுடன் செல்வ ராகவன் இயக்கத்தில் நடித்து வருகிறேன். செல்வராகவன் கலைஞர்களின் முழு திறமையை வெளியே கொண்டு வருபவர். அவருடன் இந்த படத்தில் இணைந்தது மகிழ்ச்சி.“கார்த்தி படத்தில் வித்தியாசமான வேடத்தில் நடிக்கிறேன். சினிமா என்றாலே பொழுது போக்கு தான். உண்மை கதைகளில் நடித்துக்கொண்டே இருந்தால் நடனம் ஆட முடியாது.

சிவகார்த்திகேயன் படத்திலும் நடிக்க இருக்கிறேன். இந்த படம் குழந்தைகள் உள்பட அனைத்து தரப்பு மக்களுக்கும் பிடிக்கும் என்று கூறினார்.




# மனக்கவலை போக்கும் மணக்குள விநாயகர்!

புதுவை நகர்க்குப் புகழ் சேர்க்கும் பல இடங்களில் முதன்மையாக இருப்பது அருள்மிகு மணக்குள விநாயகர் திருக்கோயில். இக்கோயில் வரலாறு புதுவை நகர் வரலாற்றோடு பின்னிக் கிடக்கின்றது. அக்காலத்தில் புதுச்சேரி மிகப்பெரிய நகரமாக விளங்காவிடினும், செம்மையான, நாகரீகம் செழித்த, செல்வர்கள் கொழித்த அழகான பேரூராக விளங்கியுள்ளது. இன்றைய மணக்குள விநாயகர் கோயில் தெரு என்று அழைக்கப்படும் தெருவானது, அக்காலத்தில் (பிரெஞ்சுக்காரர் வருகைக்கு முன்னர்) நெசவாளர் தெரு என விளங்கியுள்ளது. விடிவதற்கு முன்னரே இங்குள்ள விநாயகரை வழிபட்ட பின்பு தான் கைத்தறிப் பாவு நீட்டுதல் (அல்லு பிடித்தல்) என்ற தொழில் நடைபெறும்.



குளக்கரையில் அரசமரத்தடியில் அமர்ந்திருந்த மணற்குள விநாயகரை முதன் முதலாகப் பூசித்து வந்தவர்கள் நெசவாளர்களேயாவர். இவ்வாலயத்தில் எழுந்தருளியிருக்கும் மணற்குள விநாயகமூர்த்தி புதுவையை என்றும் பாதுகாப்பவராகி ஒவ்வொருவரின் மனத்திலும் எழுந்தருளியிருப்பது பொருத்தமானதாகும்.

மணற்குள விநாயகர் என்ற பெயருக்கு ஒரு காரணம் சொல்லப்படுகின்றது. இக்கோயில் இருக்கும் இடத்திற்கு அருகில் மேற்குப் பகுதியில் ஒரு குளம் இருந்தது. அக்குளம் மணற்குளமாகத் திகழ்ந்தது. அக்குளக்கரையில் விநாயகரை வைத்து வழிபட்டு வந்தனர். எனவேதான் அவ்விநாயகர் மணற்குள விநாயகர் என்ற பெயரைப் பெற்றார். இக்கோயில் மிகப்பழைமையானது என்பதற்குச் சான்றுகள் பல உள்ளன. கி.பி. 15 ஆம் நூற்றாண்டுக்கு முன்னரே இது கட்டப்பட்டிருக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது.

புதுவையை ஆட்சி செய்த பரங்கியர்கள் காலத்தில் மணற்குள விநாயகர் விக்ரகம் பலமுறை கடலில் போடப்பட்டதாகவும்,

பின்னர் ஒவ்வொரு முறையும் அந்தத் திருவுருவம் பழைய இடத்திலேயே இருந்ததாகவும் இவ்வாறு பலமுறை நிகழ்ந்ததாகவும் மக்கள் இன்று வரை கூறிவரும் செவிவழிச் செய்தியாகும்.

தொள்ளைக்காது சுவாமிகள் என்று போற்றப்படுகின்ற முரட்டாண்டிச்சித்தர் புதுவையை நாடி வந்தார். இவரின் இயற்பெயர் யாருக்கும் தெரியாது, ஆனால் சற்றே முரட்டுக் குணம் உடையவராக விளங்கியவர். நெடிய உயரம், ஒல்லியான உடல்வாகுடன் எதன்மீதும் பற்றற்ற நிலையில், எதனையும் ஒரு பொருட்டாகக் கொள்ளாத நிலையில் வாழ்ந்தவர். இன்றைய புதுச்சேரி எல்லைக்கு மேற்கே ஐந்து கல் தொலைவில் காணப்பட்ட மேடான ஓரிடத்தில் தனித்து வாழத் தலைப்பட்டார். இத் தொள்ளைக்காது சுவாமிகள் வெள்ளைக்காரர்கள் அக்காலத்தில் புதுவையில் வசித்துக் கொண்டிருந்த பகுதியில் சமாதி ஆகிவிட்டமையால் புதுவை வாழ் பொதுமக்கள் வெள்ளைக்காரர் வீதியில் தொள்ளைக்காதர் அமைந்துவிட்டார் என்று கூறி வந்தனர் என்பர்.

இங்கே உள்ள கடைகளில் கிடைக்கும் தாமரை, அல்லிப்பூ ஆகியவற்றை வாங்கி பூஜைக்கு கொடுத்து திரும்ப கொண்டு வந்து வீட்டில் வைத்தால் மனக்கவலை போகும் என்பது ஐதீகம். வாகனங்கள், மனைகள் புதிதாக வாங்கியவர்கள் மணற்குள விநாயகர்க்கு அர்ச்சனை செய்து சென்றால் வாகனங்களால் எந்த ஆபத்தும் வராது. அதுபோல மனை வாங்கியவர்கள் பல நூற்றாண்டுகள் சண்டை இல்லாமல் வாழலாம் என்றும் சொல்லப்படுகிறது. விநாயருக்கு கோபுரம் முழுக்கவே தங்கத்தால் வேயப்பட்ட கோயில் இது மட்டுமே. உற்சவர் வில்புருவமும் மூன்று பதமாகவும் நிற்கிறார். வேறு எங்குமே காணக்கிடைக்காத சிறப்பு, விநாயகருக்கு இங்கே திருமணம் நடக்கிறது.


**விநாயருக்கு கோபுரம் முழுக்கவே தங்கத்தால் வேயப்பட்ட கோயில் இது மட்டுமே. உற்சவர் வில்புருவமும் மூன்று பதமாகவும் நிற்கிறார். வேறு எங்குமே காணக்கிடைக்காத சிறப்பு, விநாயகருக்கு இங்கே திருமணம் நடக்கிறது.**

இங்கு சித்தி, புத்தி அம்மைகள் மனைவியாக உள்ளனர். சிவ தலங்களில் இருக்கும் நடராஜரைப் போல் நர்த்தன விநாயகர் இங்கே இருக்கிறார். இங்கே உள்ள பள்ளியறையில் விநாயகரோடு உடன் இருப்பது தாயார் சக்தி தேவியார் ஆவார். மிக முக்கியமாக இந்து மதம் என்றில்லாமல் கிறிஸ்துவம், முஸ்லிம் ஆகிய மதங்களை சேர்ந்த வெளிநாட்டினர் பெருமளவில் இங்கே வந்து வழிபட்டு நேர்த்திக்கடன் வைத்து செல்லுகின்றனர். அதனால் இக்கோயில் அனைத்து மதங்களையும் தாண்டி ஒரு அதிசய பிள்ளையாராக இருக்கிறார்.

சித்திரை வருடப்பிறப்பு, ஆனித்திருமஞ்சனம், தை, ஆடி அமாவாசை, கந்த சஷ்டி உற்சவம், விநாயகர் சதுர்த்தி, ஆங்கிலப் புத்தாண்டு, தைப்பொங்கல், மாசிமகம், மஹாசிவராத்திரி விமரிசையாக நடைபெறும்.


புதுச்சேரி பேருந்து நிலையத்தில் இருந்து 2.கி.மீ. தூரத்தில் உள்ளது ஷேர் ஆட்டோ, பேருந்து ஆகிய வசதிகள் உண்டு.

**தொடர்புக்கு : 0413-2336544, 2336546.**






# எக்காலத்திற்கும் பொருந்தும் கண்ணதாசன் பாடல்கள்



**அறிஞர் என்றால், அண்ணா**
**கலைஞர் என்றால், கருணாநிதி**
**கவிஞர் என்றால், கண்ணதாசன்’**

என்று சொல்வார்கள்.

பூமிப்பந்தின் வரலாற்றில், தனது சொந்த வாழ்க்கையையே ஒரு பரிசோதனைக்களமாக்கி அதில் பலதரப்பட்ட அவதாரங்களையும் அதற்கேற்ற பலவிதமான வாழ்க்கையையும் வாழ்ந்து பார்த்து, அதன் விளைவுகளை, அதன் முடிவுகளை வெளிப்படையாக எல்லோருக்கும் கூறிய பெருமை ஒருவருக்கு, ஒரே ஒருவருக்கு உண்டு என்றால், அது கவிஞர் கண்ணதாசனுக்கு மட்டுமே உண்டு.

குழந்தையைப்போல் வெள்ளை உள்ளம் படைத்த அவர், மனிதனாக, ஞானியாக தன் வாழ்க்கையை ஆய்ந்து, அதில் இறைவனின் பங்களிப்பையும் கலந்து அவற்றைத் தன் பாடல்களின் மூலம் வெளிப்படுத்தினார். அதனால்தான் `வனவாசம்’என்னும் தனது சுயசரிதையின் முன்னுரையில், ‘ஒரு பெருமிதம் எனக்குண்டு. என் தலைமுறையில் வாழும் எந்த மனிதனுக்கும் தலைவனுக்கும் கவிஞனுக்கும் இத்தகைய சுயசரிதம் அமையாதென்பதே அது. இப்படி ஒன்று அமையவேண்டும் என்றால், யாரும் நீண்டகாலம் முட்டாளாக இருக்க வேண்டும். அது எல்லோருக்கும் கைவரக்கூடிய கலை அல்ல! ‘எப்படி வாழவேண்டும்?’ என்பதற்கு இது நூலல்ல; ‘எப்படி வாழக்கூடாது!’ என்பதற்கு இதுவே வழிகாட்டி’ என்று குறிப்பிடுகின்றார்.

கண்ணதாசன், எழுத்தாளர், கவிஞர், நாவலாசிரியர், பத்திரிகையாளர், திரைப்படப் பாடலாசிரியர், கதைவசனகர்த்தா, அரசியல் கட்சித் தலைவர், திரைப்படத் தயாரிப்பாளர், ஆன்மிகச் சொற்பொழிவாளர் எனப் பன்முகத்தன்மை கொண்டவர். இதில், பலவற்றில் வெற்றியையும் சிலவற்றில் தோல்வியையும், நிறைய நண்பர்களையும், நிறைய எதிரிகளையும் அவர் சந்தித்தார். இப்படிப் பலதரப்பட்ட முகங்களை அவர் கொண்டிருந்தாலும், திரைப்படப் பாடலாசிரியராகத்தான் அவர் பெரும் வெற்றி பெற்றுள்ளார்.

காலத்தால் அழியாத சாகா வரம் பெற்ற பாடல்களை வழங்கியதில், அவர் நேற்றைக்கும் இன்றைக்கும் என்றைக்கும் முடிசூடா மன்னனாக, ஒப்பாரும் மிக்காரும் இல்லாத கவிஞராகத் திகழ்கிறார். வாழ்க்கைப் படிப்பினைகளை, தோல்விகளை, துன்பங்களை சிக்கல்களை தானே அனுபவித்ததால் நெருப்பில் புடம்போட்ட தங்கமாக மின்னும் ஞானத்தை அவருக்கு இணையாக இன்றளவும் எவரும் பெறவில்லை என்றே சொல்லலாம்.

55 வயது மட்டுமே வாழ்ந்த முத்தையா என்னும் கண்ணதாசனுக்கு கண்ணனின் மேல் அலாதிப் பிரியம். கண்ணனைப் பாடு பொருளாகக் கொண்டு சிலேடையுடன் சினிமா கதாபாத்திரங்களுக்கு எழுதிய பாடல்கள் எல்லாம் ஹிட் என்றாலும், ‘வானம்பாடி’ திரைப்படத்தில் அமைந்த இந்தப் பாடலில்,

‘கங்கைக் கரைத் தோட்டம் கன்னிப் பெண்கள் கூட்டம் கண்ணன் நடுவினிலே காலையிளங்காற்று பாடி வரும் பாட்டு

எதிலும் அவன் குரலே... கண்ணன் முகத் தோற்றம் கண்டேன்... கண்டவுடன் மாற்றம் கொண்டேன்’ என்பவர், ‘கண்ணன் முகம் கண்ட கண்கள், மன்னன் முகம் காண்ப தில்லை... கண்ணனுக்குத் தந்த உள்ளம் இன்னொருவர் கொள்வதில்லை’ என மேலும் சொல்வது, ரொம்பவே சிறப்பு.

நடிகர்திலகம் சிவாஜி கணேசனின் திரைக் கதாபாத்திரங்களுக்கும் கண்ணதாசனின் சொந்த வாழ்வு அனுபவங்களுக்கும் நிறையவே தொடர்பு இருப்பதுபோல் அவரது படத்தில் இடம்பெற்ற தத்துவப் பாடல்கள் அமைந்திருக்கும். அந்தப் பாடல்களுக்கான பின்னணி, கண்ணதாசன் வாழ்வின் ஏதோ ஒரு சம்பவத்துடன் தொடர்புள்ளதாக இருக்கும். சிவாஜி கணேசன் நடிக்க, கண்ணதாசன் பாட்டெழுத, டி.எம். சௌந்தர்ராஜன் பாட எம்.எஸ்.விஸ்வநாதன்

*இசை அமைக்கவேண்டும். அதை இரவு நேரங்களில் கேட்க வேண்டும். இத்தனைக்கும் இந்தப் பாடல்களை எழுதும்போது கவிஞரின் வயது 35தான் என்பது மிகப்பெரிய ஆச்சர்யமான ஒன்றாகும். கண்ணதாசனின் தங்க வரிகளில் மின்னும் சில வைரங்கள்:*

**படம்: பார்த்தால் பசி தீரும்**

**'உள்ளம் என்பது ஆமை... அதில் உண்மை என்பது ஊமை...**

**சொல்லில் வருவது பாதி... நெஞ்சில் தூங்கிக் கிடப்பது மீதி...**

**தெய்வம் என்றால் அது தெய்வம்... அது சிலை என்றால் வெறும் சிலைதான்**

**உண்டென்றால் அது உண்டு... இல்லை என்றால் அது இல்லை'**

**படம்: பாவ மன்னிப்பு**

**'வந்தா நாள் முதல் இந்த நாள் வரை வானம் மாறவில்லை...**

**வான்மதியும் மீனும் கடல் காற்றும் மலரும் மண்ணும் கொடியும் சோலையும்**

**நதியும் மாறவில்லை... மனிதன் மாறிவிட்டான் மதத்தில் ஏறிவிட்டான்**

**பறவையைக் கண்டான்... விமானம் படைத்தான்**

**பாயும் மீன்களில் படகினைக் கண்டான்**

**எதிரொலி கேட்டான்... வானொலி படைத்தான்**

**எதனைக் கண்டான்... பணம்தனைப் படைத்தான்'**



**படம்: ஆலயமணி**

**`சட்டி சுட்டதடா கை விட்டதடா! புத்தி கெட்டதடா நெஞ்சைத் தொட்டதடா!**

**புத்தி கெட்டதடா நெஞ்சைத் தொட்டதடா! நாலும் நடந்து முடிந்த பின்னால்**

**நல்லது கெட்டது தெரிந்ததடா! சட்டி சுட்டதடா கை விட்டதடா!**

**பாதி மனதில் தெய்வம் இருந்து பார்த்துக்கொண்டதடா**

**மீதி மனதில் மிருகம் இருந்து ஆட்டிவைத்ததடா**

**ஆட்டிவைத்த மிருகம் இன்று அடங்கிவிட்டதடா**

**படம்: ஆண்டவன் கட்டளை**

**ஆறு மனமே ஆறு அந்த ஆண்டவன் கட்டளை ஆறு**

**தேர்ந்து மனிதன் வாழும் வகைக்கு தெய்வத்தின் கட்டளை ஆறு**

**ஆசை கோபம் களவு கொள்பவன் பேசத் தெரிந்த மிருகம்**

**அன்பு நன்றி கருணை கொண்டவன் மனித வடிவில் தெய்வம் - இதில்**

**மிருகம் என்பது கள்ள மனம் உயர் தெய்வம் என்பது பிள்ளை மனம் - இந்த**

**ஆறு கட்டளை அறிந்த மனது ஆண்டவன் வாழும் வெள்ளை மனம்'**

**படம்: குங்குமம்**

**`மயக்கம் எனது தாயகம், மௌனம் எனது தாய்மொழி**

**கலக்கம் எனது காவியம், நான் கண்ணீர் வரைந்த ஓவியம்**

**நானே எனக்குப் பகையானேன் - என்**

**நாடகத்தில் நான் திரை ஆனேன், தேனே உனக்குப் புரியாது**

**அந்த தெய்வம் வராமல் விளங்காது, விதியும் மதியும் வேறம்மா - அதன்**

**விளக்கம் நான்தான் பாரம்மா, மதியில் வந்தவள் நீயம்மா - என்**

**வழி மறைத்தாள் விதியம்மா'**

**படம்: நிச்சயதாம்பூலம்**

**'படைத்தானே, மனிதனை ஆண்டவன் படைத்தானே**

**வளர்த்தானே வளர்த்தானே மனதினில் கவலையை வளர்த்தானே**

**குரங்காய் இருந்த மனிதன் மனதில் குழப்பம் ஏதுமில்லை**

**குடும்பம் மனைவி அண்ணன் தம்பி கூட்டம் சிறிதுமில்லை**

**ஆசை பாசம் காதலில் விழுந்தான் அமைதியைக் காணவில்லை**

**அலைந்தான் தவித்தான் துடித்தான் மடிந்தான் யாருக்கும் லாபமில்லை'**

**படம்: புதிய பறவை**

**'எங்கே நிம்மதி? எங்கே நிம்மதி? எங்கே நிம்மதி? எங்கே நிம்மதி?**

**எங்கே மனிதன் யாரும் இல்லையோ அங்கே எனக்கோர் இடம் வேண்டும்**

**அங்கே எனக்கோர் இடம் வேண்டும்...**

**எனது கைகள் மீட்டும்போது வீணை அழுகின்றது**

**எனது கைகள் தழுவும்போது மலரும் சுடுகின்றது**

**என்ன நினைத்து என்னைப் படைத்தான் இறைவன் என்பவனே...**

**கண்ணைப் படைத்து பெண்ணைப் படைத்த இறைவன் கொடியவனே!'**

**- ரமேஷ்குமார்**



# மேல்நாட்டு பாணியில் கோவை அரசுப் பள்ளி

கருவில் இருக்கும் குழந்தை ஆணா?, பெண்ணா? என்ற சண்டையெல்லாம் எப்பொழுதோ போய்விட்டது. இப்போது இருப்பது குழந்தையை எந்தப் பள்ளியில் சேர்ப்பது என்ற சண்டைதான். குழந்தையின் அனைத்து ஆற்றல்களிலும் பள்ளியின் பங்கு என்பது அளப்பரியது ! அப்படி இருக்கும் போது, என் குழந்தையை நான் எப்படி எந்த அடிப்படை வசதியும் இல்லாத அரசு பள்ளியில் படிக்க வைப்பேன் ? இது இன்று இருக்கும் பெரும்பாலான மக்களின் குரலாக உள்ளது . அவர்களின் வசதிக்கு ஏற்ற ஏதோ ஒரு தனியார் பள்ளியை அவர்கள் நாடுகிறார்கள். பணம் இருக்கும் மக்கள் எல்.கே.ஜிக்கே சில இலட்சங்களைக் கொடுக்கவும் தயாராக உள்ளார்கள் . அப்படி இருக்க கப்பலில் பணியாற்றி , இலட்சங்களில் சம்பளம் வாங்கிய பிரபு அண்ணன் தன் பையனை அரசு பள்ளியில் படிக்க வைப்பதாகவும், அந்த பள்ளி மற்ற அரசு பள்ளிகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டது என்றும் சொன்னதில் வியப்பாகி, கோவையில் அந்த பள்ளியைக் காணச் சென்றேன்.

தம்பி, சுதந்திரமா யோசிக்கிற மனநிலை தான் கண்டிப்பா ஒரு குழந்தைக்கு ஆரோக்கியமான எதிர்காலத்தைக் கொடுக்கும்னு நான் நம்புறேன். ரிசல்ட்டை மட்டும் முக்கியமாகக் கருதி இயங்குற தனியார் பள்ளிகளிடம் நாம் அதைத்தாண்டி வேற எதையும் எதிர்பார்க்க முடியாது, சரிதானே என்றார் . எல்லாம் சரி அண்ணே ! அது என்ன ஸ்பெஸல் அரசு பள்ளி அதச்சொல்லுங்க என்றேன் , வா போகலாம் என்று உடன் அழைத்துச் சென்றார். கோவை மலுமாச்சம்பட்டியில் இருக்கிறது அந்த துவக்கப்பள்ளி. அரசு பள்ளி என்று சொன்னதும் எதுவெல்லாம் நமது நினைவுக்கு வருமோ அதையெல்லாம் உள்ளே நுழைந்ததும் முற்றிலும் உடைத்துவிடுகிறது அந்தப் பள்ளி. சிறுவர்கள் விளையாட ஊஞ்சல் , சறுக்கு விளையாட்டு என எல்லாம் இருந்தன. தலைமை ஆசிரியர் அறைக்குச் சென்றோம் . என்னை அறிமுகப்படுத்திய பின் பேச ஆரம்பித்தார்.

“நான் இங்க வந்தப்ப எல்லா அரசு பள்ளி கூடம் மாதிரிதான் இதுவும் அடிப்படை வசதிகூட இல்லாமதான் இருந்தது . எதாவது செய்யணும்னு எல்லா ஆசிரியர்களிடமும் சொன்னப்ப எல்லாரும் சந்தோசமா ஒத்துழைப்பு தந்தாங்க. எங்களோட சம்பளத்துல ஆளுக்குக் கொஞ்சமா போட்டு ஸ்போகன் இங்கிலீசுக்கு தனி டீச்சர் போட்டோம். பிறகு அடிப்படை வசதிகள் இருந்தால்தான் இந்தப் பள்ளியில் சேரும் குழந்தைகளின் சேர்கை அதிகரிக்கும். அதோடு குழந்தைங்க நல்லா படிக்க சுகாதாரமான சூழல் அவசியமானது என்பதால் அதையும் செய்யலாம்னு , பக்கத்துல இருக்க சில பெரிய தனியார் நிறுவனங்கள்கிட்ட உதவி கேட்டோம்.

அவுங்களும், இங்க படிக்கிற பிள்ளைங்களோட பெத்தவங்களும் அவங்களால முடிஞ்சளவு உதவிகள் செஞ்சாங்க. “இந்தப் பகுதியில் உள்ள தொடக்கப் பள்ளிகளிலேயே எங்கள்

**வகுப்புகள் முழுவதும் குழந்தைகளே வரைந்த வண்ண ஓவியங்கள், கழிவுப் பொருட்களைக்கொண்டு செய்த கலைப்பொருட்கள் மற்றும் மறுசுழற்சிக்கென தனிவகுப்பு, பள்ளித் தோட்டத்தில் மாணவர்களே வளர்க்கும் காய்கறிகள், ஸ்மார்ட் வகுப்பறை, டிஜிட்டல் நூலகம், என மெர்சல் காட்டியது அந்த பள்ளி.**

பள்ளியில்தான் 266 மாணவர்கள் படிக்கிறார்கள்" என்றார் பெருமிதத்தோடு. இப்போ இங்க ஸ்மார்ட் கிளாஸ் இருக்கு, கூடவே ஆங்கில உச்சரிப்பை எல்லா குழந்தைகளும் டேப் வச்சு படிக்கிறாங்க. தரமான சீருடை, காலணி போட்டுட்டு வர்றாங்க, தனியார் பள்ளி மாதிரி தனி நாற்காலி மற்றும் பெஞ்சுல உட்காருறாங்க" என்று சொல்லிக்கொண்டே போனதும் நான் சந்தேகமா பார்த்தேன். எல்லா வகுப்புக்கும் அழைத்து போனாங்க. நாங்க போனதும் குழந்தைங்க எழுந்து ஆங்கிலத்துல வெல்கம் சாங் பாட, நான் 'பே' என்று விழித்து நின்றேன். "உங்களைத்தான் வெல்கம் பண்றாங்க" என்று சொன்னதும் வியந்து வணக்கம் சொன்னேன் .

மலுமிச்சம்பட்டி தொழில் நிறுவனங்கள் அதிகமுள்ள பகுதி. வடமாநிலத்தவர்கள் ஏராளமானோர் இங்கு வசிக்கிறார்கள். தமிழ் அறியாத, அவர்களது குழந்தைகள் 40 பேரை, தமிழ் மாணவர்களாக மாற்றியிருப்பது இப்பள்ளி ஆசிரியர்கள் எடுத்த முயற்சியின் வெற்றி. "ஒரு மொழியைப் பற்றி எதுவுமே தெரியாத, அதுவும் குழந்தைகளுக்கு சொல்லிக் கொடுப்பது எளிது எனப் புரிந்து கொண்டோம். அதுவே நடந்தது. இன்று 40 வடமாநில குழந்தைகளும் தமிழை புரிந்து பேச, எழுதப் பழகியுள்ளனர். அடுத்ததாக ஆங்கிலத்தையும் அவர்களுக்கு கற்றுக் கொடுத்து வருகிறோம். பியானோ உள்ளிட்ட இசைப் பயிற்சிகளையும் அளிக்க உள்ளோம்" என்றார் ஆசிரியர் நிர்மலதா.

அங்கு எந்த ஆசிரியரிடமும், எந்த குழந்தையும் எப்பொழுதும் சந்தேகம் கேட்கலாம். அதையும் கண்கூடப் பார்த்தேன். வகுப்புகள் முழுவதும் குழந்தைகளே வரைந்த வண்ண ஓவியங்கள், கழிவுப் பொருட்களைக்கொண்டு செய்த கலைப்பொருட்கள் மற்றும் மறுசுழற்சிக்கென தனிவகுப்பு, பள்ளித் தோட்டத்தில் மாணவர்களே வளர்க்கும் காய்கறிகள், புதிய கட்டிடம், மார்பிள் தரை, குடிநீர் வசதி, சுற்றுச்சுவர், கூடுதல் ஆசிரியர்கள், கணினி வகுப்பறை, ஸ்மார்ட் வகுப்பறை, டிஜிட்டல் நூலகம், வண்ண மேசைகள் என மெர்சல் காட்டியது அந்த பள்ளி.

சமீபத்தில் இந்த பள்ளி மாணவர்கள் பெற்ற விருது பற்றி கிராமத்தில் நகைச்சுவையோடு பேசப்படுகிறது. சாலையோரங்கள், வீதிகள், பள்ளி விளையாட்டு மைதானம் போன்ற பொது



இடங்கள் திறந்த வெளிக் கழிப்பிடமாக பயன்படுத்துவதை இந்த பள்ளி மாணவர்கள் தடுத்து வருகிறார்கள். இது பற்றி தெரிவித்த 5ம் வகுப்பு மாணவி சம்யுக்தா, “ஆமாங்க சார், இன்னிக்கு காலைல கூட 20 பேர விரட்டினோம். எங்க டீம் பேரு, ‘குட்டி கமாண்டோ படை’. இதுல பத்து பேரு இருக்கோம். தினமும் காலைல அஞ்சு மணிக்கு விசில் எடுத்துட்டு போவோம். யாராச்சும் ரோட்டோரமா காலைக்கடன் கழிக்க ஒதுங்குனா உடனே விசில் அடிச்சு விரட்டுவோம். இப்ப எங்க ஊருக்குள்ள திறந்தவெளியில யாரும் மலம் கழிக்கிறதே இல்ல. அதுக்குத்தான் எங்களுக்கு விருது கொடுத்தாங்க” என்றார் மழலைக் குரலில். இது சாதாரணமான முயற்சியாகத் தெரியவில்லை. கிராமத்தையே சுகாதாரமாக மாற்றுவது என்பது கல்வியுடன் கலந்த ஒரு சமூகப் பொறுப்பாகவே பார்க்க முடிகிறது.

இத்தனை வளர்ச்சிகளுக்கும் காரணம் தலைமை ஆசிரியர் இரா.சக்தி என ஒட்டுமொத்த பள்ளியும், ஊரும் அவரை நோக்கிக் கைகாட்டுகிறது. ஆனால் அவரோ, “நாங்கள் எதையுமே புதிதாகச் செய்யவில்லை. இருந்த



வசதிகளையே சிறப்பாக்கியுள்ளோம்” என்றார் எளிமையாக. இதுல பாதி வசதி கூட இல்லாத பல தனியார் பள்ளிகள் லட்சங்களில் பீஸ் வாங்குகிறார்கள் என்று நான் சொல்ல, “இப்போ எங்க கவலையெல்லாம் நிறைய ஏழை மாணவர்களை இங்கு இருக்க வசதிகளைச் சொல்லி சேர்க்கணும்னு சொன்னாங்க” . நானும் நம்ம ஸ்கூல் பத்தி பெருமையா எழுதுறேன்னு சொல்ல, “அதெல்லாம் வேணாம் தம்பி உண்மைய எழுதுங்க போதும்” என்று விடை தந்தார்கள் (நிறைகுடம் தழும்பாது). அதே போன்ற ஒரு துவக்க பள்ளியை நான் ஈரோட்டிலும் கண்டிருக்கிறேன் .

இப்படி உதாரணமாக இருப்பது ஆயிரத்தில் ஒரு பள்ளி மட்டுமே. அதிலும் அங்கு இருக்கும் சில நல்ல ஆசிரியர்களின் கடும் உழைப்பினால் உருவானதே . மீதம் இருக்கும் 999 பள்ளிகளின் நிலை ? கவலைக்கிடம்தான் , ஏன் தனியார் நிறுவங்களிடம் உதவி கேட்டீர்கள் அரசிடம் கேட்க வேண்டியது தானே? என்ற கேள்விக்கு, தலைமை ஆசிரியர் சொன்ன பதில் வியப்பாக இருந்தது . அரசு , பள்ளிக்கு ஒதுக்கும் பணம் மிகவும் குறைவு கரும்பலகைக்கு பெயிண்ட் அடிக்க பணம் கொடுப்பதே பெருசு இதுல சுவற்றிருக்கு பெயின்ட் அடிக்க பணம் கேட்டால் அவ்ளோதான் கண்டிப்பாக வராது , இங்கு குப்பைகளைச் சுத்தம் செய்ய முதலில் ஆள் இல்லாமல் இருந்தது. இப்போது அதற்கும் ஆசிரியர்களே ஆளுக்குக் கொஞ்சமாக செலவளித்து மாத சம்பளத்திற்கு ஒரு துப்புறவுப் பணியாளரையும் நியமித்திருக்கிறார்கள். நான் வந்ததும் எனது அறையை சுத்தம்செய்து பின்தான் மற்ற வேலைகளை கவனிப்பேன். எல்லாவற்றையும் மாற்ற கடினமாக உழைக்க வேண்டி இருந்தது என்றார் அவர் .

தமிழ்நாட்டில் மட்டும் 55,667 பள்ளிகள் உள்ளன. இதில் 67 விழுக்காடு அரசு பள்ளிகளாகும். இதில் 1,35,05,795 மாணவர்கள் படிக்கிறார்கள் . இவர்களுக்கு ஏற்ற போதுமான ஆசிரியர்கள் இருப்பதில்லை .75% தொடக்கப் பள்ளிகளில் பயிற்சி ஆசிரியர்களை வைத்தே பாடங்களை நடத்துகின்றனர். பெரும்பாலான அரசு பள்ளிகளில் சுத்தமான குடிநீர் கிடைப்பது இல்லை, கழிப்பறை வசதிகளும் சொல்லும்படி இல்லை , சரியான கழிப்பறைவசதி இல்லாத காரணத்தால் அவதியுறும் மாணவிகள் அதனாலும் பள்ளிக்கு வருவதை நிறுத்துகிறார்கள் என்ற செய்தி எத்தனை பெரிய அவமானமாக அரசு கருத வேண்டும். ஆனால் அவ்வாறு அரசு எதையும் செய்யாமல் இருப்பதன் காரணம் என்ன ? வேறென்ன எல்லா அரசியல்வாதிகலும் கல்வி நிறுவனம் நடத்துகிறார்கள். நல்ல அரசு பள்ளிகள் வந்துவிட்டால் அவர்களின் பிழைப்பில் மண் விழுமே அதுதான்.

சமகல்வி இயக்கம் என்ற அமைப்பு தமிழ்நாட்டில் பல முக்கியப் பெருநகரங்களில் ஒரு ஆய்வு நடத்தியது. அதில் 155 அரசு பள்ளிகளில் 37% பள்ளிகளில் மேற்கூரையே இல்லை (இன்னமும் பாதி பள்ளிகள் மரத்தடியில்தான் நடக்கிறது) 38% பள்ளிகளில் குடிநீர் மற்றும் கழிப்பிட வசதிகள் இல்லை என்று ஆய்வு முடிவுகள் சொல்கின்றன. ஒவ்வொரு வருடமும் அரசு பள்ளிகளை மேம்படுத்த நிதியை ஒதுக்குகிறார்கள் ஆனால் அது சில அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகளின் வளர்ச்சி நிதியாக மட்டுமே மாறுகிறது என்பதுதான் நிதர்சனம்.

வீதிக்கு ஒரு தனியார் பள்ளி என்ற நிலை வந்துவிட்டது. பக்கத்து தெருவே என்றாலும் அவர்களின் வாகனத்தில் ஏற்றித்தான் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்ப வேண்டும். இல்லையேல் குழந்தைக்கு சீட் கிடையாது என்றெல்லாம் விதிமுறை போடும் பள்ளிகளின்

நடுவே, பாட்டாளி வர்க்கத்தினரும், ஒடுக்கப்பட்டவர்களும், வறுமையில் வாடும் எளியோரும் படிக்க முடியும் என்ற நம்பிக்கையை விதைக்கும் ஒரே பள்ளி நம் அரசு பள்ளிதான். உலகம் போற்றும் விஞ்ஞானி இந்தியாவின் குடியரசுத்தலைவர் அய்யா அப்துல்காலம் போன்ற மாமனிதர்களை உருவாக்கியதும் இந்த அரசு பள்ளிதான் என்பதில் பெருமை கொண்டாலும், இன்றைய தலைமுறை குழந்தைகளுக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் பூர்த்திசெய்யும் விதத்தில் நம் அரசு பள்ளிகள் இருக்கிறதா? என்பதே நம்முன் இருக்கும் 100 மார்க் கேள்வி.

"பிச்சை எடுத்தாவது என் மக்களைப் படிக்க வைப்பேன்" என்று ஒரே ஆண்டில் 10000 பள்ளிகளைக் கட்டிக் கல்விக் கண் திறந்த கர்ம வீரர் முன்னாள் முதல்வர் காமராசரின் சிந்தனை இனி எந்த ஆட்சியாளர்களுக்கும் வரப்போவதில்லை. ஆனால் மக்களுக்காவது வரவேண்டு மல்லவா? அரசு ஊழியர்களே தங்கள் பிள்ளைகளைத் தனியார் பள்ளியில் படிக்க வைக்கும் போது, இந்த நிலைக்கு அரசையே குறைகூறவும் முடியவில்லை.

> **மலுமிச்சம்பட்டி பள்ளிபோல் இன்று சில மாதிரிப் பள்ளிகள் தமிழகம் முழுவதும் உருவாகிட அனைவரும் தங்கள் பிள்ளைகள் அரசு பள்ளிகளின் சேர்க்க வேண்டும்.**

மூடுவிழாவை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கும் அரசுப் பள்ளிகளைக் காப்பது பொதுமக்களாகிய நம் அனைவரது கடமை. மலுமிச்சம்பட்டி பள்ளிபோல் இன்று சில மாதிரிப் பள்ளிகள் தமிழகம் முழுவதும் உருவாகி வருகின்ற சூழலில் ஓடி, ஓடித் தனியார் பள்ளிகளில் காசுகளைக் கொட்டாமல் சிறிதளவேனும் பொதுநலன் கருதி தங்கள் பிள்ளைகளை அரசுப் பள்ளிகளில் சேர்க்க முன்வருவதோடு அந்தப் பள்ளியைப் போலவே தரம் உயர்த்த ஒவ்வொருவரும் தொண்டளித்தால் அனைத்து ஊர்களிலுமே இது சாத்தியம்தான். தரமான கல்வியை இலவசமாக வழங்கும் ஒரு நாடு தற்சார்பில் தன்னிறைவை எட்டும் என்பதில் மாற்றுக் கருத்தே இல்லை. தலைசிறந்த தலைமுறை உருவாகும் என்ற நம்பிக்கையோடு காத்திருக்கும் கோடிக்கணக்கான சாமானியர்களுள் நானும் ஒருவனே.

**– கோவை முத்துராஜ்**

# கண்டுபிடியுங்கள்

## SUDOKU

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 9 | | 4 | | | | |
| | | | | | 5 | 3 | 1 | |
| | 6 | 1 | | | 8 | | 5 | |
| | | 5 | 4 | | | 2 | | 3 |
| | 1 | | | | 7 | | | 8 |
| | 8 | | | | | 7 | 6 | |
| 3 | | 6 | | 1 | 9 | 4 | | |
| 7 | | | | | | | | |
| | | 4 | | 5 | | 6 | 2 | 7 |

S.SURIYA
STD IX
*SHERWOOD HALL SENIOR SECONDARY SCHOOL CHENNAI*





# குதிரை வண்டி கோர்ட்

ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக, அரிய பல தீர்ப்புகளை வழங்கி, கோவை மாவட்ட மக்களின் மதிப்பைப் பெற்றது, குதிரை வண்டி கோர்ட். இன்றல்ல நேற்றல்ல, 10 ஆண்டு காலம், பாதுகாப்பற்ற சூழலில், புதர் மண்டி, களையிழந்து பேய் பங்களாவாக காட்சியளிக்கிறது. கலெக்டர் அலுவலகத்தின் அடுத்த கட்டடம், அவினாசி ரோடு மேம்பாலத்தின் மிக அருகே, பாழடைந்து கிடக்கும், இரண்டு ஏக்கர் பரப்புள்ள இந்த இடத்தின், தற்போதைய மதிப்பு 100 கோடி ரூபாய்க்கும் அதிகம். ஆங்கிலேயர் ஆட்சியில், சுமார் 130 ஆண்டுக்கு முன், முதன்முதலாக கோவை யில், அமைக்கப்பட்ட நீதிமன்ற வளாகம் இது. இதன்பிறகே, மாவட்ட நீதிமன்றம் அமைந்துள்ள, கோர்ட் வளாகத்தில், சிவப்பு நிற மிகப்பழமையான கட்டடம் கட்டப்பட்டதாக வரலாறு தெரிவிக்கிறது.

கடந்த 2001ம் ஆண்டு வரை, குதிரை வண்டி கோர்ட் வளாகத்தில் லேபர் கோர்ட், மூன்று மாஜிஸ்திரேட் கோர்ட்கள் செயல்பட்டன. அக்காலத்தில், பஸ் வசதி இல்லாததால், மாட்டு வண்டிகள், குதிரை வண்டிகளில், இக்கோர்ட்டுக்கு கிராமப்புற மக்கள் வந்து சென்றுள்ளனர். பத்து ஆண்டுகளுக்கு முன், கைவிடப்பட்ட இந்த வளாகம், மனித நடமாட்டம் இழந்ததால், சிறு செடிகள் முளைத்து, இன்று பெரும் புதர் காடாக உருவெடுத்து, குடியிருப்போரை அச்சுறுத்திக் கொண்டுள்ளது.

வீணாகும் பல கோடி ரூபாய் மதிப்புள்ள இந்த இடம் பற்றி, கோவை கோர்ட் டில் கேட்டபோது,'கோவையில் 25க்கும் மேற்பட்ட, நீதிமன்றங்கள் உள்ளன. நீதிபதிகள், மாஜிஸ்திரேட்கள் பலர், அரசு குடியிருப்பு கிடைக்காமல் வாடகை வீடுகள் மற்றும் பாராமரிப்பில்லாத மிகப் பழமையான அரசு கட்டடங்களில் வசிக்கின்றனர். இவர்களுக்கு, அடுக்குமாடி குடியிருப்பு கட்ட, திட்டம் வகுக்கப்பட்டு, சென்னை ஐகோர்ட் அனுமதிக்காக, ஏழு ஆண்டுக்கு முன் அனுப்பப்பட்டது. இதுவரை பதில் இல்லை,' என்றனர்.

மூன்றாண்டுக்கு முன், குதிரை வண்டி கோர்ட் வளாகத்தை கலெக்டர் அலுவலகத்துடன் சேர்த்துக் கொண்டு, இதற்கு பதிலாக தெற்கு தாசில்தார் (ரேஸ்கோர்ஸ் போலீஸ் ஸ்டேஷன் உள்ள பகுதி) அலுவலக வளாகத்தை, ஒருங்கிணைந்த கோர்ட் வளாத்துடன் இணைக்கவும், திட்டம் உருவாக்கப்பட்டு, அரசுக்கு அனுப்பி வைக் கப்பட்டது. இத்திட்டமும் கிடப்பில்போடப்பட்டு விட்டதாக தெரிகிறது.

**- கோவை முத்துராஜ்**





# லாபம் தரும்
# இயற்கை வேளாண்மை

வேளாண்மை நமது நாட்டின் முதுகெலும்பாக கருதப்படுகிறது. வேளாண்மை இடுபொருட்களை மிகக் குறைவாக இடப்பட்டதால் வேளாண்மை உற்பத்தியும் மிகக் குறைவாகவே காணப்பட்டது. இதன் விளைவாக பசுமைப் புரட்சி 1966ம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. இப்பசுமை புரட்சியின் நோக்கம் வேளாண் விளைப் பொருட்களின் உற்பத்தியை அதிகப்படுத்துவதே ஆகும். இதன் பொருட்டு இரசாயன உரங்கள் மற்றும் வீரிய ஒட்டு ரக விதைகள் மூலம் வேளாண் உற்பத்தியை அதிகப்படுத்தினர். இதன் விளைவாக 1990ம் ஆண்டு முதல் மண் வளமும், இயற்கை வளமும் பெரிதும் பாதிப்புக்கு உள்ளானது.

இயற்கை வேளாண்மை

நம் மண் வளத்தையும், இயற்கை வளத்தையும் பேணிக்காக்கும் பொருட்டு இயற்கை வேளாண்மையை மேற்கொள்வது காலத்தின் கட்டாயம் ஆகும். இந்த இயற்கை வளங்களில் நமது எதிர்கால சந்ததியினருக்கும் பங்கு மற்றும் உரிமை உண்டு. அதற்கேற்ப இயற்கை வேளாண்மையினை கடைபிடிப்பது குறித்து தற்போது விவசாயிகளுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

50 வருடங்கள் செயற்கை உரம் பயன்படுத்திய நிலத்தின் வளத்தினை 6 மாதங்களில் மீட்டெடுக்கலாம் என வட இந்திய கணித மேதை ஸ்ரீபாத தபோல்கார் கூறியுள்ளதாக நம்மாழ்வார் குறிப்பிட்டுள்ளார்.

20 வகையான பயிர்களை (நான்கு தானியங்கள், நான்கு எண்ணெய் வித்துக்கள், நான்கு மணப்பொருட்கள், நான்கு உரச்செடிகள்) கலந்து விதைத்து 20 நாட்களில் உழுது நிலத்தில் மடக்க உழவு செய்ய வேண்டும்.

பின்பு மீண்டும் 20 வகைப் பயிர்களை விதைத்து வளர்த்து 60 நாட்களில் உழுது நிலத்தில் மடக்கி உழ வேண்டும்.

அதனை அடுத்து மீண்டும் 20 வகை பயிர்களை விதைத்து வளர்த்து 90 நாட்களில் (பயிர்களின் விதைகள் முற்றிய பிறகு) உழுது நிலத்தில் மடக்க வேண்டும்.

பயிர் சுழற்சி முறை

ஒரே மாதிரியான பயிரினை தொடர்ந்து பயிர் செய்வதால் நிலமானது தனது வளத்தினை இழக்கிறது. எனவே பயிர்களை சுழற்சி முறையில் பயிர் செய்வதன் மூலம் நிலம் இழந்த வளத்தினை மீட்டெடுக்கலாம்.

நெல் பயிர் சாகுபடிக்கு பின் உளுந்து, எள், துவரை, பருத்தி போன்றவற்றில் ஏதேனும் ஒன்றைப் பயிர் செய்யலாம். பயிர் செய்யும் நிலத்தின் தன்மை, நீரின் அளவு ஆகியவற்றுக்கு ஏற்ப பயிர் சுழற்சி முறையை மேற்கொள்ளலாம்.

கலப்பு பயிர் பயிரிடுதல்

கலப்பு பயிர் பயிரிடுதல் முறையானது பருத்தியுடன் துவரை, உளுந்து பயிர்களை கலந்து பயிர் செய்வது, மிளகாயுடன் அகத்தியை பயிர் செய்வது போன்றவை ஆகும். இம்முறையானது விளைச்சலை அதிகப்படுத்தவும், தீமை செய்யும் பூச்சிகளை விரட்டவும் பயன்படுகிறது. இயற்கை பூச்சி விரட்டிகளைப் பயன்படுத்தல்

பயிர் செய்யும் நிலங்களில் நன்மை செய்யும் பூச்சிகள் மற்றும் தீமை செய்யும் பூச்சிகள் காணப்படுகின்றன. செயற்கை உரங்களைப் பயன்படுத்தும்போது இருவகைப்பூச்சிகளும் அழிக்கப்படுகின்றன. எனவே தீமை செய்யும் பூச்சிகளை விரட்டுவதற்கு இயற்கைப் பூச்சிவிரட்டிகளை பயன்படுத்துவது நல்லது.

இயற்கை பூச்சிவிரட்டிகள் பூஞ்சைப் பூச்சிவிரட்டி, இஞ்சி மிளகாய் பூண்டு பூச்சிவிரட்டி, இலைதழைகளில் இருந்து பெறப்படும் பூச்சி விரட்டி.

மூடாக்கிப் போடுதல்

மூடாக்கிடுதல் என்பது பயிர்களுக்கு இடையே இலைதழை, வைக்கோல், கரும்பு சோகை ஆகியவற்றைக் கொண்டு மூடுதல் ஆகும்.

இதனால் மண்ணின் ஈரப்பதம் பாதுகாக்கப்படும். மண்புழுக்கள் வளர ஏதுவாகும். களைகளின் வளர்ச்சி கட்டுப்படுத்தப்படும். மண்ணின் இயற்பியல் தன்மை பாதுகாக்கப்படும். மூடாக்கு இடுவதன் மூலம் அதிக விளைச்சலையும் பெறலாம்.

இயற்கை உரங்களைப் பயன்படுத்துதல்

பயிர்களுக்கு இயற்கை உரங்கள் ஆன மண்புழு உரம், சாணஎரு உரம், தொழுஉரம், பசுந்தாள் உரம் மற்றும் பசுந்தழை உரம் ஆகியவற்றைப் பயன்படுத்தலாம். இதனால் குறைந்த செலவில் நிறைய விளைச்சலைப் பெறலாம். ஆரோக்கியமான உணவுப்பொருட்களை பயனீட்டாளரும் பெறலாம்.

இயற்கை பயிர் வளர்ச்சி ஊக்கிகளைப் பயன்படுத்துதல்

பயிர்கள் நன்கு செழித்து வளர்ந்து அதிக விளைச்சலைத் தர இயற்கைபயிர் வளர்ச்சி ஊக்கிகளைப் பயன்படுத்த வேண்டும். குணப்பசலம், தேங்காய்பால்மோர், அமிர்தக்கரைசல், பஞ்சகவ்யா ஆகியவை இயற்கை பயிர் வளர்ச்சி ஊக்கிகள் ஆகும்.

பயிர்களுக்கிடையேயான காற்றோட்டத்தை அதிகரிப்பது

நெல்லுக்கு நண்டோட, கரும்புக்கு ஏரோட, வாழைக்கு வண்டியோட, தென்னைக்குத் தேரோட என்னும் பழமொழிக்கு ஏற்ப பயிரின் வகைகளைப் பொறுத்து அவற்றிற்குத் தேவையான இடைவெளி விட்டு பயிர் செய்ய வேண்டும்.

நாட்டு விதைகளைப் பயன்படுத்துதல்

தரமான நாட்டு விதைகளைப் பயன்படுத்தி இயற்கைமுறையில் வேளாண்மை செய்வதன் மூலம் அதிகமான விளைச்சலுடன் தரமான பொருட்களைப் பெற முடியும்.

தற்போது நம் நாட்டின் வேளாண்துறையில் இயற்கை வேளாண்மை என்றொரு பிரிவு செயல்பட்டு வருகிறது. எல்லோரும் இயற்கை வேளாண்மையின் நன்மைகளைப் புரிந்து கொண்டு அதற்காக முனைந்து செயல்படுவோம்.

இயற்கை வேளாண்மையில் இரசாயன உரங்களின் பயன்பாட்டினை குறைத்து, இயற்கை உரங்களை பயன்படுத்தி வேளாண் உற்பத்தியை அதிக படுத்தலாம்.

இயற்கை வேளாண்மை எதிர்நோக்கும் சவால்கள்

இயற்கை வேளாண்மையில் தரமான விதை மற்றும் ஒருங்கிணைந்த பண்ணை மேலாண்மையை கடைபிடிப்பதன் மூலம் வேளாண் உற்பத்தியை போதுமான அளவு அதிகரிக்க முடியும்.

இயற்கை வேளாண்மையில் இயற்கை உரங்களான மண்புழு உரம், கால்நடை எருக்கள் மற்றும் பசுந்தாள் உரங்கள் பயன்படுத்துவதால் இரசாயன உரங்களின் பயன்பாடு குறைக்கப்படுகிறது. இதன் மூலம் இயற்கை வளம் பெரிதும் பாதுகாக்கப்படுகிறது.

இயற்கை வேளாண்மையில் இரசாயன உரங்களின் பயன்பட்டு மிகக் குறைவு. ஆகையால் இயற்கை வேளாண்மையில் உருவாக்கப்படும் பொருட்கள் மிகவும் தரம் வாய்ந்ததாக இருக்கும்.

கால்நடை உரங்கள், மரத்தடியில் இருக்கும் உதிர்ந்த இலைகள், மட்கிய குப்பைகள் ஆகியவற்றை சரியான முறையில் சேகரித்து உபயோகித்தால் அனைத்து விவசாயிக்கும் செவ்வனே பயிர் செய்யும் வகையில் இயற்கை உரங்கள் வழங்க முடியும்.

இயற்கை வேளாண்மைக்கு பொருத்தமான பயிர்கள்

நெல், கோதுமை, மக்காச்சோளம், பருப்பு வகைகள், கடலை, ஆமணக்கு, கடுகு, எள், பருத்தி,

கரும்பு, இஞ்சி, மஞ்சள், மிளகாய், தேயிலை, வாழை, சப்போட்டா, பப்பாளி, தக்காளி, கத்தரி, வெள்ளரி போன்ற பயிர்கள் இயற்கை வேளாண்மைக்கு பொருத்தமானவை.

இயற்கை வேளாண்மையில் உருவாக்கப்படும் விளைபொருட்கள் அதிக சத்துள்ளதாகவும், தரம் வாய்ந்தவையாகவும் இருக்கின்றன. இவ்விளைப் பொருட்களின் மதிப்பை உயர்த்தும் பொருட்டும், அதன் தரத்தை வேறுபடுத்தி காட்டுவதற்காகவும் இவ்விளைப் பொருட்கள் யாவும் பசுமை அங்காடி மூலம் விற்கப்படுகின்றன.

பசுமை அங்காடிகள்

மக்களிடம் இயற்கை வேளாண்மை பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துவதோடும், இரசாயன உரங்களின் பயன்பாடு பற்றிய எண்ணங்களை மாற்றுவதும், நகரவாசிகளுக்கு இயற்கை வேளாண்மையால் உருவாக்கப்படும் பொருட்கள் கிடைக்கச் செய்யவும் பசுமை அங்காடிகளின் முக்கிய நோக்கங்களாகும்.

தற்பொழுது பசுமை அங்காடிகள் இந்தியாவில் தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா மற்றும் மேற்கு வங்காளத்தில் சிறப்பாக செயல்படுகின்றன. குறிப்பாக தமிழ்நாட்டில் சென்னை, கோவை, மதுரை மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் சிறப்பாக செயலாற்றி, மக்களின் நன்மதிப்பையும், நம்பிக்கையையும் பெற்றுள்ளது.

அந்தந்த நிலத்தில் விளையும் பயிரின் கழிவுகளையும் அதன்மூலம் உற்பத்தி செய்யும் மண்புழு உரம் மற்றும் சான்று பெற்ற நிறுவனங்களில் இருந்து பயன்படுத்த வேண்டிய வேம் சூடோமோனாஸ், அசோஸ்பைரில்லம், பாஸ்போ பேக்டீரியா முதலியவற்றை பயன்படுத்துவதும் இதில் மிக முக்கியம். திரவ உரங்களை அல்லது நீரில் கரையும் திறன் கொண்ட தழைமணி சாம்பல் சத்துக்களை பயோ என்பது உயிர் உரம் போன்ற தவறான பிரசாரம் தருவதால் இதனை பயன்படுத்துவது இயற்கை விவசாய முறை அல்ல. தழைமணி, சாம்பல் சத்துக்கள் ஒவ்வொரு இயற்கை விவசாய இடுபொருட்களிலும் உள்ள விகிதாச்சாரம் அறிந்து கொண்டு பயன்படுத்த வேண்டும். தொழுஉரம் என்று தமது பண்ணையில் வளர்க்கப்படும் மிருகங்களான கால்நடைகள், பசு, வெள்ளாடு, எருமை, பறவைகள் (கோழி) , செம்மறி ஆடு, குதிரை, பன்றி இவற்றின் சாணம் மற்றும் சிறுநீர் பயன்படுத்துவது முக்கிய உத்தியாகும்.

இந்தக் கழிவுகளுடன் மண்புழுவை சேர்த்து வளர்த்தால் அற்புத தரம் வாய்ந்த மண்புழு உரம் கிடைக்கும். மண்புழு உரத்தையும் மண்புழு உடலில் இருந்து வெளியிடப்படும் மண்புழுக்குளியல் நீர் சத்தான டானிக் தான். இதனை எல்லாப்பயிருக்கும் தெளித்து நல்ல காசு பார்க்கலாம். மண் வகைகள் தன்மையை மாற்றிட குளத்து வண்டல் மாட்டுக் கொட்டத்தில் இருந்து சுரண்டி எடுத்த மண் பட்டி மண் ஆற்று வண்டல் பெரிதும் உதவும். தாவரக்கழிவுகள் குறிப்பாக கம்பு, தட்டை, நெல், வைக்கோல், ராகிதாள், காட்டுப்புல், கரும்பு ஆலை கழிவு, மரத்தூள், நகரக்கழிவு மற்றும் மார்க்கெட் கழிவுகள் முதலியவற்றை மட்கவைத்து கம்போஸ்ட் தயாரித்து பயன்படுத்தலாம். சாம்பல் என்று நெல் உமி சாம்பல், பருத்தி மார் சாம்பல், கரும்பு சாம்பல் மற்றும் மர சாம்பல் கூட அதிகமாக மணிசத்து, சாம்பல் சத்து தரும் சாதனமாகும்.



எண்ணெய் மில்களில் இருந்து கிடைக்கும் கடலை பிண்ணாக்கு, ஆமணக்கு பிண்ணாக்கு, புங்கன் பிண்ணாக்கு, எள்ளுப் பிண்ணாக்கு, தேங்காய் பிண்ணாக்கு மற்றும் இலுப்பைப் பிண்ணாக்கும் புரதச்சத்து நிறைய உள்ளவை. மேலும் இயற்கை விவசாயத்தில் தழைகள் மற்றும் பசுந்தாள் உரங்கள் பயன்படும். பசுந்தாள் உரமாக சீமை, அகத்தி, சணப்பை துக்கை பூண்டு கொழுஞ்சி மற்றும் அவுரி உதவும். பசுந்தழைகள் தர ஏற்றவை தான். ஆவாரை, ஆடாதோடா, எருக்கு கிளைரி சிடியா, மலைப்பூவரசு, பூவரசு புங்கம் மற்றும் காட்டு மரங்களின் தழைகள் பழமரங்களைக் கவாத்து செய்வது மூலம் பெறும் மாவிலைகள் வேலியில் உள்ள மரங்கள் வாத நாராயணன் இலைகள் எல்லாம் பறித்து குழியில் இட்டு மட்க வைத்து பயன்படுத்தலாம்.

இப்படி எத்தனையோ இடுபொருட்கள் மற்றும் தயாரித்து பயன்படுத்த உகந்த பஞ்சகவ்யா, பூச்சி விரட்டி வேப்பம் இலைக் கரைசல், வேப்பம் பிண்ணாக்கு கரைசல் முதலிய இயற்கை இடுபொருட்கள் இருப்பதால் அவற்றை பயன்படுத்தியே உயர் லாபம், நீடித்த வருமானம், தரமான விளைபொருள் பெற முடியும்.




# சிறையில் தொழில் முனையம்

**கோ**வை மத்திய சிறை வளாகத்தில் உள்ள ஃப்ரீடம் ஹோட்டலில் கிடைக்கும் ருசியான பரோட்டா கல்லூரி மாணவர்கள் உட்பட பலரை சுண்டி இழுக்கிறது. காலையில் இட்லி, தோசை, பூரி, பொங்கல் வகைகளும் மதியம் வெரைட்டி ரைஸ்களும் கிடைக்கின்றன. இந்த உணவகத்தை 10 கைதிகள் கவனித்துக் கொள்கிறார்கள். தினமும் 300 வாடிக்கையாளர்கள் வரை வருகிறார்கள். தினமும் 20,000 ரூபாய் வரையில் இங்கே வருமானம் கொட்டுகிறது. மாதத்துக்கு நான்கு பார்ட்டி ஆர்டர்கள் வேறு கிடைக்கிறது.

இந்த உணவகத்தின் வாடிக்கையாளர்கள் எண்ணிக்கை கூடிக்கொண்டே வருவதால், 100 பேர் அமரக்கூடிய அளவுக்கு விரிவுபடுத்தப்போகிறார்கள். சப்பாத்தி மேக்கர், ஓவன், பல்வெரைஸர் போன்ற நவீன சாதனங்களை எல்லாம் புகுத்தி பெரிய உணவகமாக விரைவில் மாற்றப்போகிறார்கள். சைவ, அசைவ உணவு மட்டுமின்றி பேக்கரி, தையல் நிலையம், பார்லர், வாட்டர் சர்வீஸ் என அனைத்தும் உள்ளடக்கிய வணிக வளாகம் கட்டுவதற்கான பணிகளும் நடைபெற்று வருகின்றன. ஃப்ரீடம் ஹோட்டலுக்கு அருகிலேயே சிறிய சலூன் ஒன்றும் இயங்குகிறது. “11 வருஷமா ஜெயில்ல இருக்கேன். இந்த வேலை என் மனசுக்கு ரொம்ப ஆறுதலா இருக்கு“ என்கிறார், சலூனில் பணியாற்றும் வெள்ளியங்கிரி.

“சூழ்நிலை காரணமாக ஒரு கொலை செஞ்சிட்டு உள்ளே வந்து ஏழு வருசமாகுது. இங்குதான், டைலரிங் கத்துக்கிட்டேன். நாங்க 65 பேர் டைலரிங் வேலை செய்றோம். மாதத்துக்கு 1,000 ரூபாய் வரை கிடைக்குது. அதை அப்படியே என் குடும்பத்துக்குக் கொடுத்துருவேன். சிறைக்குள் சம்பாதித்து





வீட்டுக்குக் கொடுக்கிறேன். சிறை, காவல், தீயணைப்புத் துறையினருக்கு நாங்க யூனிஃபார்ம் தைத்துக் கொடுக்கிறோம். மழை கோட், கொசு வலைகள்கூட தயாரிக்கிறோம். இது எங்களுக்கு சிறைபோலத் தெரியலை. ஒரு தொழிற்சாலை போலத்தான் தெரியுது" என்றார் சிறைவாசி சிவசக்தி. பைண்டிங் பிரிவும் இங்கு செயல்படுகிறது. இங்கு தயாரிக்கப்படும் 'பேடு'கள் பெரும்பாலான அரசு அலுவலகங்களில் பயன்படுத்தப்படுகின்றன.

"இங்கு 67 கைத்தறிகளும், 10 தானியங்கி தறிகளும் உள்ளன. நான், தானியங்கி தறிகளை ஓட்டுகிறேன். மாதம் 2,500 ரூபாய் வரை சம்பாதிக்கிறேன்" என்றார் சிறைவாசி கலைவாணன். "என் பெயர் கோவிந்தராஜ். நான் ஒரு கவிஞர்" என அறிமுகம் செய்து கொண்டு நம்மிடம் பேச ஆரம்பித்தார், கைதி ஒருவர். "சந்தர்ப்ப சூழலால் சிறைவாசம் பூண்டேன். சிறைச்சாலை என் மனதை மாற்றிய மலர்ச்சோலை. கவிதைகள் எழுத வேண்டும் என்ற ஆர்வம் சிறுவயதில் இருந்தே இருந்தது. ஆனால், அதற்கான நேரம் கிடைக்கவில்லை. இங்கு நேரம் கிடைத்ததால் 300க்கும் மேற்பட்ட கவிதைகள் எழுதி இருக்கிறேன். நான் எழுதிய கவிதைகள் 'வசந்தவாசல்', 'சிந்தனைவயல்', 'பாசமலர்', 'புதிய உறவு', 'இலக்கியச் சோலை' எனப் பல இதழ்களில் பிரசுரமாகி உள்ளன.


எனக்கு கோவை தமிழ்ச் சங்கம் வழங்கிய 'கவி கொன்றல்', சோலைப் பதிப்பகம் வழங்கிய 'தமிழ் வள்ளல்', பாரதியின் கவி செல்வன், கண்ணதாசன் கவி செல்வன் ஆகிய விருதுகள் கிடைத்திருக்கின்றன. நான் எழுதிய 'பூமியை வாழவிடுங்கள்' என்ற புத்தகத்துக்கு கவிஞர் வைரமுத்து பாராட்டுச் சான்றிதழ் வழங்கியிருக்கிறார். என் கவிதைகள் வெளியுலகத்தில் பயணிக்க சிறை அதிகாரிகளே காரணம்" என்றார். ஐயப்பன், சசிகுமார் என்ற கைதிகள் இருவரும் பிரமாதமாக தபேலா வாசிக்கிறார்கள். மகேஸ்வரன் என்ற கைதி அட்டகாசமாக ஓவியம் தீட்டுகிறார்.



**பீர்முகம்மது என்ற இன்னொரு கைதியும் ஓவியர். சிறைக்கு வரும் முன்னே, ஓவியத்தை முழுநேர தொழிலாகக் கொண்டிருந்தவர் இவர். இவருடைய ஓவியங்கள் காவல் துறை உயர் அதிகாரிகள் பலரின் அலுவலகங்களை அலங்கரிக்கின்றன.**

பீர்முகம்மது என்ற இன்னொரு கைதியும் ஓவியர். சிறைக்கு வரும் முன்னே, ஓவியத்தை முழுநேர தொழிலாகக் கொண்டிருந்தவர் இவர். இவருடைய ஓவியங்கள் காவல் துறை உயர் அதிகாரிகள் பலரின் அலுவலகங்களை அலங்கரிக்கின்றன.

சிறை கண்காணிப்பாளர் பழனி "இங்கு நீண்டகாலமாகவே டெய்லரிங், பைண்டிங், நூல் திரித்தல், நாப்கின் தயாரித்தல், ஹேண்ட் லூம், பவர் லூம் என டெக்ஸ்டைல் யூனிட்கள் செயல்பட்டு வருகின்றன. ஆனாலும், சிறைத் துறை ஏ.டி.ஜி.பியின் கனவுத் திட்டமான 'ஜெயில் பஜார்' வந்த பிறகு நிறைய விஷயங்களைச் செயல்படுத்தி வருகிறோம். நன்னடத்தைச் சான்றிதழ் பெற்றவர்களே பொதுமக்களோடு நேரடியாகத் தொடர்புகொள்ளும் வேலைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். வணிக வளாகம் கட்டும் பணிகளையும் கைதிகளே செய்கிறார்கள்" என்றார்.



**- கோவை முத்துராஜ்**





ப.யுவராஜ் ஐ.ஏ.எஸ்.

# ஏழ்மையிலும் உயர்ந்த யுவராஜ்!

திருவண்ணாமலை மாவட்டம் கலசபாக்கம் தொகுதிக்குட்பட்ட சீட்டம்பட்டு ஊராட்சி சின்ன கல்லந்தல் கிராமத்தைச் சேர்ந்தவர் பச்சையப்பன், ஆடு மேய்க்கும் கூலித்தொழிலாளி. இவருடைய மனைவி குமாரி. இவர்களுக்கு பி.யுவராஜ் (வயது 22) என்ற மகனும் செண்பகவள்ளி என்ற மகளும் உள்ளனர்.

யுவராஜ் 1ம் வகுப்பு முதல், 5ம் வகுப்பு வரை சீட்டம்பட்டு அரசு ஆரம்ப பள்ளியிலும், 6ம் வகுப்பு முதல் 10ம் வகுப்பு வரை ஆர்ப்பாக்கம் அரசு உயர்நிலைப்பள்ளியிலும் படித்தார். அவர் 10ம் வகுப்பு பொதுத்தேர்வில் 418 மதிப்பெண்கள் பெற்றுள்ளார்.

பிளஸ்1 மற்றும் பிளஸ்2 வரை மங்கலம் அரசு மேல்நிலைப்பள்ளியில் படித்து விட்டு, திருவண்ணாமலையில் உள்ள தனியார் பொறியியல் கல்லூரியில் இ.சி.இ. படித்துவிட்டு, ஓராண்டாக ஐ.ஏ.எஸ்.தேர்வுக்குப் படித்து வந்தார். தற்போது அவர் ஐ.ஏ.எஸ். தேர்வில் தேர்ச்சி பெற்று திருவண்ணாமலை மாவட்டத்துக்கும், பிறந்த கிராமத்துக்கும் பெருமைத் தேடி கொடுத்துள்ளார்.

ஐ.ஏ.எஸ். தேர்வில் வெற்றி பெற்ற யுவராஜ் நிருபர்களிடம் கூறியதாவது.

ஏழ்மையான குடும்பத்தில் பிறந்த நான், சிறுவயது முதலே படிப்பில் மிகவும் கவனம் செலுத்தி வந்தேன். அரசு பள்ளிக்கூடத்தில் படித்து, தேர்ச்சி பெற்று திருவண்ணாமலை எஸ்.கே.பி.பொறியியல் கல்லூரியில் பி.இ. படித்துக்கொண்டு இருக்கும்போது, அங்குள்ள பேராசிரியர்கள் ஐ.ஏ.எஸ். படிக்க ஊக்கப்படுத்தினர்.

அதன்படி சகாயம், இறையன்பு போன்ற ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை முன்னுதாரணமாக மனதில் நினைத்து படித்து வந்தேன். முதலில் சென்னையில் உள்ள மனித நேய மையத்தில் 2 மாதம் படித்தேன். நான் பிளஸ்2 படிக்கும்போது, அரசு சார்பில் வழங்கிய மடிக்கணினியை வைத்து இணையதள வசதியுடன் படித்துத் தேர்வு எழுதி தேர்ச்சி பெற்றுள்ளேன். நான் மாநிலத்தில் முதல் இடம் வரவேண்டும் என எதிர்பார்த்தேன். ஆனால், 74வது இடம் பெற்றுள்ளேன்.

நான் ஐ.ஏ.எஸ். பயிற்சி முடித்த பின்னர், என்னை பொதுப்பணி துறை செயலாளராக நியமித்தால், கிராமப்புறங்களில் உள்ள ஏரி, குளங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, தூர் வார நடவடிக்கை எடுப்பதுடன் திருவண்ணாமலை கிரிவலப்பாதையில் 510 குளங்கள் காணாமல்போய் உள்ளதை கண்டுபிடிக்க நடவடிக்கை எடுப்பேன். எனது சொந்த கிராமத்துக்குத் தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் நூலகம் அமைத்து என்னை போன்ற மாணவர்கள் அதிக புத்தகங்களை படித்து அரசு தேர்வுகளில் வெற்றி பெற ஊக்குவிப்பேன். இவ்வாறு அவர் கூறினார்.

ஐ.ஏ.எஸ். தேர்வில் வெற்றி பெற்ற யுவராஜை கலசபாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி.பன்னீர்செல்வம், அவருடைய வீட்டுக்கு நேரடியாக சென்று இனிப்பு வழங்கி சால்வை அணிவித்து பாராட்டினார். குடிசை வீட்டில் வாழும் யுவராஜீக்கு உடனடியாக பசுமை வீடு கட்டித்தரப்படும். அவருக்கு, டெல்லி சென்று பயிற்சி பெற தேவையான நிதி உதவிகள் வழங்கப்படும், என்றார்.





# திறந்த மனம்

## சுகி சிவம்



பாட்டி படுத்திருந்த திண்ணையின் ஓரத்தில் விளையாடிக்கொண்டிருந்தாள் பேத்தி. திடீரென வானில் மேகம் சூழ்ந்து, மழை கொட்டியது. பாட்டி, பேத்தியிடம், அடியே, எவ்வளவு தண்ணீர் வீணாய்ப் போகுது. அண்டாவை முற்றத்தில் கொண்டு வந்து வச்சு மழை தண்ணீரை நிரப்புடி என் ராசாத்தி." என்றாள். போ பாட்டி" என மறுத்தாள் பேத்தி. அடியே, அடுக்களையில் இருக்கிற பாத்திரத்தை அப்படியே கொண்டு வந்து முற்றத்தில் வைக்கிறது பெரிய வேலையா? போய் அண்டாவைக் கொண்டு வந்து அப்படியே வை." என உத்தரவிட்டாள் பாட்டி. வெறுப்பாய் ஓடி, பாட்டி சொன்னதைச் செய்துவிட்டுத் திரும்பினாள் பேத்தி. அரை மணி நேரம் மழை கொட்டியது.

இந்நேரம் அண்டா நிரம்பி இருக்கும் என ஆனந்தமடைந்த பாட்டி, திண்ணையை விட்டு முற்றத்துக்கு எழுந்து போனாள். பகீர் என்று ஆனது பாட்டிக்கு. அண்டாவில் ஒரு சொட்டு தண்ணீர்கூட இல்லை. 'அப்படியே கொண்டு வந்து முற்றத்தில் வை' என்று பாட்டி சொன்னதை, வேத வாக்காக எடுத்துக் கொண்டு, கழுவிக் கவிழ்த்து வைத்திருந்த அண்டாவை கவிழ்த்த வண்ணமே மழையில் வைத்து விட்டாள் பேத்தி. மழை என்னவோ வஞ்சனை இன்றிதான் பெய்தது. பாத்திரம்தான் கவிழ்ந்து கொண்டு தண்ணீரை ஏற்க மறுத்து விட்டது.

கடவுளின் அருளும் அப்படித்தான், அது பொதுவாகவே அனைவருக்கும் கொட்டுகிறது, கவிழ்த்து வைத்தவர்களின் மனங்கள் அதில் ஒரு சொட்டுகூட ஏந்துவதில்லை, திறந்த மனத்தோடு, பிரபஞ்சத்தோடு தொடர்பு வைத்துக் கொண்டால் பஞ்ச பூதங்களும் நமக்குச் சாதகமானவையே. எண்ணம் போல் வாழ்க்கை என்பதின் பொருள் இதுதான்.

**ஆர்.குணசேகரன்**



# மரத்தைக் காக்க நிலத்தை விட்டுக்கொடுத்த விவசாயி!

பொள்ளாச்சி அருகே உள்ளது சின்னேரிப் பாளையம் கிராமம். இந்த கிராமத்திலிருந்து சின்ன நெகமம் செல்லும் வழியில் உள்ளது, பட்டாபிராமன் கோயில்.

சாலையோரம் உள்ள இந்த கோயிலின் தல விருட்சமாக 'விழுது இல்லா ஆலமரம்' ஒன்று உள்ளது. வான் நோக்கி வளர்ந்தும், தரை தொட்டு தவழ்கிறது இதன் கிளைகள். எட்டு திசைக்கும் கிளை பரப்பிய இந்த மரத்தின் பிரம்மாண்டம் ஆச்சரியத்தை ஏற்படுத்தினாலும், இந்த விழுது இல்லா ஆலமரம் குறித்து இந்த கிராம மக்கள் கூறும் கதை வித்தியாசமானது.

இந்த மரத்தின் கீழே தார் ரோடு போடப்பட்டு இருந்தாலும், மரத்தின் கிளைகள் தாழ்வாக உள்ளதால், அவ்வழியாக கனரக வாகனங்கள் செல்ல முடியாது. தார் சாலைகள் அமைக்க வசதியாக ஆயிரக்கணக்கான மரங்களை வெட்டி வீழ்த்தும் இன்றைய காலகட்டத்தில், சாலையை மறித்து படர்ந்து இருக்கும் தன்னுடைய கிளைகளுக்கு இடையூறு ஏற்படக்கூடாது என்பதற்காக, அருகில் உள்ள விவசாய நிலத்தின் வழியாக வாகனங்கள் செல்லுமாறு சாலையின் ரோட்டின் அமைப்பையே மாற்றிவிட்டது இந்த மரம்.

இந்த ஆலமரம் மற்ற ஆலமரங்கள் போல மண்ணிலிருந்து முளைக்கவில்லை. கடந்த 90 ஆண்டுகளுக்கு முன்பு கோயிலின் அருகில் இருந்த பனை மரத்தில் முளைத்த ஆலங்கன்றை எடுத்து இங்கு நட்டு வைக்கப்பட்டது.

தற்போது மரமாக வளர்ந்து அருகில் உள்ள சாலை முழுவதையும் ஆக்கிரமித்துக் கொண்டது. சில ஆண்டுகளுக்கு முன்னர், இந்த மரத்தின் கிளைகள் போக்குவரத்துக்கு இடையூறாக இருப்பதாக கூறி, நெடுஞ்சாலைத் துறையினர், மரத்தின் கிளையை ஜேசிபி வாகனம் மூலம் உடைத்தபோது வாகனம் பழுதடைந்ததாம்.

இந்த மரத்தின், கிளையையோ மரத்தையோ வெட்டினால், அசம்பாவிதம் ஏற்படலாம் என்ற அச்சம் தற்போது வரை நிலவுகிறது.

இந்த மரத்தை ஒட்டிதான் விவசாயி ராஜகோபாலன் விளை நிலம் உள்ளது. மரத்தை காக்க நினைத்த அவர் மரத்துக்கு இடையூறு ஏற்படக்கூடாது என்பதற்காக தன்னுடைய விளைநிலம் வழியாக வாகனங்கள் செல்ல அனுமதித்தார் என்கிறார் பட்டாபிராமன் கோயில் பூசாரி குமரவேல்.

'ஆல் போல் தழைத்து ; அருகு போல் வேரூன்றி' என்ற பழமொழியின் அர்த்தம் எத்தனை பேருக்கு தெரியுமோ தெரியாதோ ஆனால் சின்னேரிபாளையம் கிராம மக்களுக்கு கண்டிப்பாக தெரிந்துள்ளது. அதனால் தான், கார் பறக்கும் தார் சாலைக்காக, வேர் பறிக்கப்படும் மரங்களுக்கு மத்தியில், வான் பறக்கும் பறவைகளுக்கு 90 ஆண்டுகளுக்கும் மேலாக பெரு விருட்சமாக கிளை விரித்து தழைத்து நிற்கிறது இந்த 'விழுது இல்லாத ஆலமரம்'.

**- கோவை முத்துராஜ்**

Owned and published by M.SUNDARAMOORTHY from No.602 Suruthi Block, Chitra Avenue,9,Choolaimedu High Road, Chennai-600 094. and printed by him at SRI PADMALAYA PRINTERS. No.8/18, Manali Salai, Korukkupet, Chennai-600 021. Editor : M.SUNDARAMOORTHY.


# மித்ரா பதிப்பக வெளியீடுகள்

## ஆசிரியர் எம்.எஸ்.மூர்த்தியின்

- ➔ என் எண்ணம் பகுதி 1 ரூ.50/-
- ➔ நமக்குள் நாம் ரூ.50/-
- ➔ தலைவரும் தளபதியும் (அச்சில்) ரூ.50/-

## எழுத்தாளர் அவ்வை இரவிக்குமார்ன்

- ➔ சித்தகத்திக்கள்ளி (நாவல்) அச்சில் ரூ.120/-
- ➔ நீலவானப்பூக்கள் (நாவல்) அச்சில் ரூ.100/-
- ➔ மாயே (அச்சில்) ரூ.100/-




தொடர்புக்கு :


**மித்ரா பதிப்பகம்**
001, இன்ஞ்சக்கல் பிளாக், சித்ரா அவென்யூ,
9, சூளைமேடு ஹைரோடு, சென்னை94.
போன் : 044-23744661,23743007/8
**Whatsapp No. 8248585067**
**E-mail : mitratimes2015@gmail.com**
**Website : www.mitratimes.com**

MITRA TIMES Tam & Eng Monthly Postal Registration No. TN/CH(C)/523/16-18
Registered with Registrar of News Paper for India Under No.TNBIL/2015/64028 - Date of publishing 1st week of Every Month

# நமது இல்லத்து இறைவனாக இருக்கும் முன்னோர்களுக்கு
## தர்ப்பணம் செய்ய மறந்தவர்களுக்கும், செய்ய தவறியவர்களுக்கும்
## பித்ரு பூஜை, திலஹோமம் மற்றும் திலதர்ப்பணம் செய்ய ஏற்ற நாள்
# மஹாளய அமாவாசை-08.10.2018

## முன்னோர் திருநாளில், முன்னோரை வழிபட்டு முன்னேற்றமடைவோம்


மாட்டுத் தொழுவத்தில் நடைபெறும் பித்ரு பூஜை

**மாத்ரு தேவோ பவ...! பித்ரு தேவோ பவ...!** நமக்கு நல்வாழ்வு அளித்துச் சென்ற முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்வது நமது இன்றியமையாத கடமையாகும். நமது முன்னோர்களை திதி நாளில், திருப்திபடுத்தாத காரணத்தினால் தான் நமக்கு துன்பங்கள் அடுக்கடுக்காக வருகின்றன. பெற்றோர்களை சரிவர கவனிக்க முடியாமல் விட்டவர்களும், இதுவரை பித்ரு பூஜை செய்யாமல் இருப்பவர்களும் அற்புதங்கள் நிறைந்த மஹாளயபக்ஷ அமாவாசை நாளில் நமது முன்னோர்களுக்கு முன்னோர் கடனை அளித்து நல்வாழ்வு பெறலாம். மஹாளயபக்ஷத்தில் தங்கள் சந்ததிகளை பார்த்து ஆசி வழங்கவரும் பித்ருக்கள், நாம் செய்யும் பித்ரு பூஜை, திலஹோமம், திலதர்ப்பணத்தால் மட்டுமே திருப்தி அடைகின்றனர். மஹாளயபக்ஷ நாளில் ஓர் அதிஅற்புத செயலான பித்ரு பூஜையை ஒவ்வொரு குடும்பத்திலும் செய்யவேண்டும் என்பதற்காக, **காஞ்சி ஸ்ரீ மகா பெரியவா ஆசியோடு,** பசுமடத்தில் வைதீக முறைப்படி திலஹோமம் செய்து, மாட்டுத் தொழுவத்தில் பசுமாட்டினை முன்நிறுத்தி, ஸ்ரீசாளகிராமம் விஷ்ணு பாதம் முன் புனிதமான கங்கை நீர் கொண்டு திலதர்ப்பணம் மற்றும் பித்ருதோஷ நிவர்த்திக்கான கோபூஜையும் நடைபெறும். மாட்டுதொழுவத்தில் நடைபெறும் பித்ரு பூஜைக்கு இணை வேறேதுமில்லை. இதில் அனைவரும் கலந்துகொண்டு அனைத்துவித தோஷங்களில் இருந்தும் நிவர்த்தி பெற்று பிதுர் ஆசி, ரிஷி ஆசி, குரு ஆசி, தேவ ஆசி பெறவும், மேலும் இச்சிறப்புமிக்க பித்ரு பூஜையை செய்து ஆண்டு முழுவதும் நம் முன்னோர்கள் தங்கள் கூடவே இருக்குமாறு ஒரு சிறந்த சக்தியை ஏற்படுத்திக் கொள்ளவும் அன்புடன் அழைக்கிறோம்

**மாட்டுத் தொழுவத்தில் செய்யப்படும் பித்ரு பூஜை மற்றும் திலஹோமத்தால் ஒருவரின் பூர்வ ஜென்ம பாவங்கள் மற்றும் சாபங்கள் முற்றிலும் நீங்கும்**


மாட்டுத் தொழுவத்தில் நடைபெறும் திலஹோமம்

வயது முதிர்ந்த பசுக்களை பசுமடத்தில் (கோ-மந்தீரில்) பராமரிக்க தங்களால் முடிந்த கீழ்க்காணும் நன்கொடையை அனுப்புகிறவர்கள், யாருக்கு திதி செய்ய விரும்புகிறீர்களோ அவரின் பெயர், திதி, கோத்திரம் போன்ற விவரங்களை தெரிவிக்கவும். அதன்படி மஹாளயபக்ஷம் அன்று திலஹோமம், தில தர்ப்பணம், கோபூஜை செய்யப்படும். மேலும் தங்களின் முன்னோர்கள் நினைவாக பசுமடத்தில் உள்ள **வயதான பசுக்களுக்கு அன்னதானமாக அகத்தி கீரை, அருகம் புல், கருப்பு எள் உருண்டை, வெல்லம், வெண் பொங்கல், பச்சரிசி கஞ்சி, பழங்கள்** போன்றவைகள் உணவாக அளிக்கப்படும். தங்கள் சார்பாக நடைபெறும் பித்ரு பூஜைக்குபின் அன்னதானமாக புடலங்காய் சாதம், பிரண்டை சாதம் மற்றும் கருப்பு எள் சாதமும் அனைவருக்கும் வழங்கப்படும்

## தானத்தில் சிறந்த தானம் பசுவிற்கு செய்யும் அன்னதானம் மட்டுமே!

ஒரு பசுவை பராமரிக்க ஒரு வாரத்திற்கு **ரூ.200** அனுப்புவோருக்கு **தெய்வீக ஆற்றல் நிறைந்த காமதேனு யந்திரம்** அனுப்பி வைக்கப்படும்
ஒரு பசுவை பராமரிக்க ஒரு மாதத்திற்கு **ரூ.700** அனுப்புவோருக்கு **பித்தளையிலான பெருமாள் விளக்கு** அனுப்பி வைக்கப்படும்
ஒரு பசுவை பராமரிக்க இரண்டு மாதத்திற்கு **ரூ.1,200** அனுப்புவோருக்கு **பித்தளையிலான லட்சுமி ஹயக்ரீவர் விளக்கு** அனுப்பி வைக்கப்படும்
ஒரு பசுவை பராமரிக்க ஆறு மாதத்திற்கு **ரூ.3,800** அனுப்புவோருக்கு **பித்தளையிலான காமதேனு விக்ரஹம்** அனுப்பி வைக்கப்படும்
அனைத்து பசுக்களுக்கும் ஒரு நாள் வெல்லம் செலவு **ரூ.500** அனுப்புவோருக்கு **பித்தளையிலான வாஸ்து குபேர விளக்கு** அனுப்பி வைக்கப்படும்
அனைத்து பசுக்களுக்கும் ஒரு நாள் புல் செலவு **ரூ.800** அனுப்புவோருக்கு **பித்தளையிலான சிவன்-பார்வதி விளக்கு** அனுப்பி வைக்கப்படும்
அனைத்து பசுக்களுக்கும் ஒரு நாள் வைக்கோல் செலவு **ரூ.1,300** அனுப்புவோருக்கு **பித்தளையிலான பசுவும் கன்றும் உள்ள விளக்கு** அனுப்பி வைக்கப்படும்
அனைத்து பசுக்களுக்கும் ஒரு நாள் தீவனச் செலவு **ரூ.2,600** அனுப்புவோருக்கு **வெள்ளியிலான கோமாதா விக்ரஹம்** அனுப்பி வைக்கப்படும்
அனைத்து பசுக்களுக்கும் ஒரு மாத மருத்துவச் செலவு **ரூ.2,900** அனுப்புவோருக்கு **வெள்ளியிலான துளசி மாடம்** அனுப்பி வைக்கப்படும்
அனைத்து பசுக்களுக்கும் ஒரு மாத அகத்தி கீரை செலவு **ரூ.4,300** அனுப்புவோருக்கு **வெள்ளியிலான தவழும் கண்ணன்** அனுப்பி வைக்கப்படும்
ஒரு பசுவை ஒரு வருடத்திற்கு தத்தெடுத்து பராமரிக்க **ரூ.6,600** அனுப்புவோருக்கு **வலம்புரி சங்கு மற்றும் பித்தளையிலான சங்கு விளக்கு** அனுப்பி வைக்கப்படும்

**நாள் ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் ஒரு வருடத்திற்கான ரூ.365 ஐ கோமாதாவின் பராமரிப்பிற்கு அனுப்பும் அன்பர்களுக்கு வெள்ளியிலான கோமாதா டாலர் மற்றும் கோமாதாவின் வண்ணப்படம் அனுப்பி வைக்கப்படும்**


ஸ்வாமி கண்ணன் பட்டாச்சார்யா அவர்கள் செய்து வைக்கும் வலம்புரி சங்கு பூஜை

**குடும்ப சந்தோஷத்தின் திறவுகோலான வலம்புரி சங்கு அதிர்ஷ்டத்தை உண்டாக்கி வாழ்வை வளமாக்கும்.**
**மன இருளையும் வாழ்க்கை இருளையும் அகற்றி தங்கள் வாழ்வை பிரகாசமாக்கி சீரும் சிறப்புமாய் வாழவைப்பதும் வலம்புரி சங்கே!**

சங்கு அதிர்ஷ்டம் தருவது, தைரியம் தருவது, செல்வம் தருவது, ஐஸ்வர்யம் தருவது. மேலும் வாழ்வில் நல்ல துணையை பெறவும், பிரிந்தவர்கள் ஒன்று சேரவும், மகிழ்ச்சியான இல்லற வாழ்வு அமையவும், மாணவர்கள் கல்வியறிவு பெருகவும், குழந்தைகளுக்கு வரும் நோய்களை தடுக்கவும், வாஸ்து தோஷம்/குறைகள் நீங்கவும், வியாபாரத்தில் யோகம் பெறவும், தீயசக்தியை தடுக்கவும், தொட்டது துலங்கவும், மனக்கவலையை மாற்றும் வலம்புரி சங்கை வழிபடுவீர். இதனால் எல்லா தேவதைகளும் வீட்டில் குடிகொண்டு மஹாலட்சுமி வாசம் இருப்பாள். வலம்புரி சங்கின் சுவாசம் நமது மூளையோடு தொடர்புகொண்டு உடலின் குறிப்பிட்ட இயக்கத்தையும் தூண்டுகிறது. **ஒரு பசுவை ஒரு வருடத்திற்கு தத்தெடுத்து பராமரிக்க ரூ.6,600 அனுப்புவோருக்கு பசுவிற்கு அபிஷேகம் செய்யப்பட்ட மனக்கவலை மாற்றும் வலம்புரி சங்கு மற்றும் பித்தளையிலான சங்கு விளக்கு** ஒன்று அனுப்பி வைக்கப்படும்.

**கோமாதா குடிகொள்ளும் மாட்டு தொழுவத்தை விரிவுபடுத்த, நோயினால் பாதிக்கப்பட்ட பசுக்களுக்கு சிகிச்சை அளிக்க மருத்துவ கூடம் கட்ட கட்டிட நிதி (கோ-சம்ரக்ஷன நிதி) அளித்து குவலயத்தில் குன்றாத நலமும் குறையாத செல்வ வளமும் பெற்று மகிழ்வீர்!**

பசுமடத்தில் (கோ-மந்தீரில்) பராமரிக்கப்படும் பசுக்கள் அனைத்தும் கோயில்கள் மற்றும் மாட்டு சந்தையில் ஏலம் விடப்பட்ட மற்றும் சாலைகளில் அடிபட்டு கிடந்த ஊனமுற்ற, நோயுற்ற, கறவை நின்ற, வயதான பசுக்களாகும். இதுபோன்ற மேலும் பல பசுக்களை பசுமடத்திற்கு கொண்டு வந்து பாதுகாக்க வேண்டியிருப்பதால் மாட்டு தொழுவத்தை விரிவுபடுத்த வேண்டியுள்ளது. மேலும் நோயினால் பாதிக்கப்பட்ட பசுக்களுக்கு முறையான சிகிச்சையளிக்கவும் பசுமடத்திலேயே கால்நடை மருத்துவகூடம் ஒன்று அமைக்க வேண்டியுள்ளது. எனவே மாட்டு தொழுவத்திற்கும், கால்நடை மருத்துவகூடத்திற்கும் கட்டிட நிதியாக தங்களால் இயன்ற நிதியுதவியை முன்னோர்கள் நினைவாக அளித்து கோமாதாவை பாதுகாக்கும் கோ-சம்ரக்ஷன சேவையில் தங்களையும் ஈடுபடுத்திக் கொள்ள அன்புடன் அழைக்கின்றோம். **கட்டிட நிதியாக ரூ.3,000/- மேல் அனுப்புவோருக்கு பித்தளையிலான கல்பவிருஷ காமதேனு விக்ரஹம் அனுப்பி வைக்கப்படும்**

மேற்கண்ட நன்கொடைகளை **Cheque/DD/MO** ஆக **Shri Ghosala Seva Trust, Chennai** என்ற பெயரில் அல்லது **Direct Remittance**-ஆக **SHRI GHOSALA SEVA TRUST, ICICI Bank, Mylapore Branch, Chennai. SB A/c No: 218601000077, IFSC Code: ICIC0002186** என்ற வங்கி கணக்கில் அல்லது ஆன்லைன் மூலமாக **www.shrigosala.com** என்னும் எங்களுடைய இணையதளத்தின் மூலமாகவும் நன்கொடையை அனுப்பலாம். ரசீதும், மேற்கண்ட கோமாதாவின் ஆசீர்வாத பிரசாதங்களும், சுத்தமான நாட்டு பசுஞ்சாணத்தில் சைவ முறைப்படி பசுமடத்தில் விராஜ ஹோமம் செய்து தயாரிக்கப்பட்ட விபூதியும், தங்கள் சார்பாக **பித்ரு பூஜைக்கு பயன்படுத்தப்பட்ட விஷ்ணு பாதமும்** மஹாளயபக்ஷம் முடிந்த பிறகு தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்

## தாங்கள் வேண்டுவன அனைத்தும் அள்ளித் தருபவள் கோமாதாவே!



நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வரி விலக்கு உண்டு

# பசுமடம்®

(RECOGNISED BY ANIMAL WELFARE BOARD OF INDIA)
வயதான, ஊனமுற்ற, நோயுற்ற, ஆதரவற்ற பசுக்களை பாதுகாத்து பராமரிக்கும் இல்லம்
பெருமாளகரம், திருவேற்காடு (PO), சென்னை-77
**8754 555 555, 8754 666 666**
pasumadam.chennai@gmail.com
**www.shrigosala.com**


பசுமடத்தில் உள்ள கறவை நின்ற வயதான பசுக்கள்

**தங்கள் முன்னோர்களின் நினைவு நாட்களில் தங்கள் சார்பாக திலதர்ப்பணமும், பித்ரு தோஷ நிவர்த்திக்கு கோபூஜையும் செய்யப்படும்**